(43)

ஜோதிஷயோகி பத்திரிகை

ஜீ 9—11

1961 — ஏப்ரல்
— ஜூன்

JL
LLm211, N54
N61.8.9—11
169360

நோயிலா வாழ்வே
குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

ஏப்ரல்
1961

38
காசுகள்

## சில விசேஷத் தயாரிப்புகள்

★

சில நோய்களுக்கு மருந்தே கிடையாது என்று பெயர். ஆனால், அனுபவ ரீதியாகப் பார்க்கும் பொழுது, நோயுற்ற உடனேயே தொடங்கி நீடித்த காலத்திற்கு விடாமல் கீழ்க் கண்ட மருந்துகளை உபயோகித்து வந்தால், உடல் வாகிற் கேற்ப நலன் காண்கிறது.

| | |
|---|---|
| * யானைக்காலுக்கு | ஸீஹெம் |
| * இரத்தக் கொதிப்புக்கு | ஸர்போமியா |
| * குஷ்ட நோய்க்கு | ஹைமிகால் |
| * வலிப்புகளுக்கு | ஜலேக் |
| * நீரழிவுக்கு | ஜெம்போஸைம் |
| * இருதய நோய்களுக்கு | ராக்டோடோன் |
| * மன நோய்களுக்கு | மிஸ்கோ |
| * காச நோய்க்கு | நில்கோஸா |

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

★

### தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை:
9, செம்புதாஸ், தெரு
மதராஸ்-1.


For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratory Only.

# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர்: Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8 ஏப்ரல் 1961 இதழ் 9


பொருள் அடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஹானிமன் வகுத்த வழி .... | 3 |
| 2. | செய்திகளும் அபிப்பிராயங்களும் ... | 5 |
| 3. | ஹோமியோபதித் தந்தை .... | 9 |
| 4. | ஹோமியோபதித் துணுக்குகள் .... | 12 |
| 5. | ஹோமியோபதி மருந்துகள் மெதுவாய் வேலை செய்கின்றனவா ? .... | 13 |
| 6. | மெக்ஸிகோவில் ஹோமியோபதி .... | 24 |


எங்கள் மாணவர்கள்,
அன்பர்கள், வாடிக்கைக்காரர்கள்
எல்லோருக்கும் எங்கள் தமிழ்ப்
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

16236

## 12-வது நேர்முக வகுப்பு

அடுத்தமாதம் நடைபெற இருக்கும் பன்னிரண்டாவது நேர்முக வகுப்பில் அநேகமாக எல்லா இடங்களும் பூர்த்தியாகிவிட்டன. இம்மாதம் 10-ம் தேதிக்குப் பிறகு வகுப்புச் சம்பளம் ரூ. 65/- ஆக உயருமென்று ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். ஆகையால் சில மாணவர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்கி இம்மாதம் 30-ம் தேதிக்குள் வகுப்பில் சேருவோரையும் ரூ. 55/- செலுத்த அனுமதிக்கிறோம்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் எல்லோரும் வகுப்பில் சேர்ந்து நன்மை அடைவதை வரவேற்கிறோம்.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால விலாஸம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

மதராஸ்-28

## கவனமிருக்கட்டும்......

**9, செம்புதாஸ் தெரு, (Top Floor)**

**சென்னை-1-ல் நமது விற்பனைக் கிளை.**

நமது மாணவர்கள், நேயர்கள், அடுத்த வட்டாரங்களிலிருந்து சென்னைக்கு வருவோர், பல நாட்களாய் வேண்டிக்கொண்டதற் கிணங்க ஏப்ரல்-3ஆம் தேதியிலிருந்து, நமது ஹௌஸின் விற்பனை இலாகா கிளையை மேற்கண்ட இடத்தில் துவக்கி இருக்கிறோம்.

அங்கு, தங்களுக்கு வேண்டிய ஹோமியோபதி திரவங்கள், மாத்திரைகள், எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகள், ஹோமியோபதிப் புத்தகங்கள், மற்றுமுள்ள வைத்திய கருவிகள், எல்லாம் கிடைக்கும்.

சென்னைக்கு வந்தால், எங்கள் கிளை ஆபீஸையும் அவசியம் பார்க்கவும்.

## ஹானிமன் வகுத்த வழி

ஹோமியோபதியை உலகுக்கு ஈந்த வள்ளல், டாக்டர் சாமுவேல் ஹானிமன், ஜெர்மன் தேசத்தில் மெரிஸன் என்னும் ஊரில், 1755-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் தேதி அவதரித்தார். அதன் ஞாபகார்த்தமாக இம்மாதம் 10-ம் தேதி பல இடங்களில் அவர் பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது.

முக்கியமாக, இந்தியாவில் எல்லா இராச்சியத்திலும் இரண்டே ஹோமியோபதியருள்ள சிற்றூர்களிலும் கூட, ஹானிமன் ஞாபகக்கூட்டங்கள் கூடி, வாழ்த்துரைகள் கூறுவது அவசியம். ஏனென்றால் இக்காலத்திலே மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் தான் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஹோமியோபதி டாக்டர்கள் பணியாற்றுகின்றனர். மற்ற நாடுகளில் அலோபதியரே ஹோமியோபதியும் படித்து, தத்தம் மனதிற்கேற்றவாறு, இவ்வற்புத சிகிச்சையை உபயோகித்து வருகின்றனர். நம் நாட்டில் தான் தனிப்பட்ட முறையில் அலோபதியுடன் சேராமல் ஹோமியோபதி பேரும், புகழும் பெற்றிருக்கிறது. ஆதலால், ஹோமியோபதி மேன்மேலும் வளர்ந்தோங்க ஆற்றலும் ஆர்வமும் நாம் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

பிறந்த தினக்கொண்டாட்டத்தில் மேதைக்கு, பாமாலையும், பூமாலையும் சூட்டுவதானது "தாங்கள் எவ்வளவோ பெரியவர், தங்களுக்கு போதிய மரியாதை அளிக்கிறோம், ஆனால், தங்களைப் போலே நடக்க எங்களால் இயலாது" என்று கூறுவது போலத்தான் சாதாரணமாக அமைகிறது.

டாக்டர் ஹானிமன் விஷயத்திலும், வருடா வருடம் அவர் பிறந்த நாளன்று நாம் கூட்டங்கள் கூட்டுகிறோம். படத்திற்கு மாலையும் போட்டு ஊர்வலமும் வருகிறோம். அவருடைய அரிய பெரிய செயல்களைப் பற்றி பேசுகிறோம். நமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனாலும், டாக்டர் ஹானிமன் வகுத்த வழியில், நாம் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடும் என்றும் கூட ஆலோசித்தால், மிகவும் மேன்மையாய் இருக்கும்.

டாக்டர் ஹானிமன் தன்னுளில் உபயோகத்திலிருந்த சாதாரண தனி வஸ்துக்களையும், மருந்துகளையும், மூலிகைகளையும், எடுத்துக்கொண்டு தன் தத்துவப்படி பரிசிலனை செய்து, மருந்துக் குறிகளை விவரமாய் எழுதிவைத்தார். அலோபதியர் உபயோகித்து வந்த மருந்துகளோடு நிற்காமல் மரக்கரி, கிளிஞ்சல், அந்நாட்டில் பாட்டி வைத்தியத்தில் உபயோகிக்கும் நாட்டு மூலிகைகள், இவைகளை எல்லாம் வீரியப்படுத்தி அவைகளின் சிகிச்சை திறமையை கண்டு பிடித்தார். டாக்டர் ஹானிமனுடைய அமெரிக்க சீடர்கள் அநேக போன்று அநேக மூலிகைகளை நாட்டுக்கு ஈந்தார்கள்.

அவ்வழியில் வந்த நாம், டாக்டர் படத்துக்கு மாலையணிவித்து, "டாக்டர் ஹானிமன் இறந்ததோடு ஹோமியோபதியின் வளர்ச்சியும் முற்று புள்ளி வைத்துவிட்டது. டாக்டர் ஹானிமன் பரிசிலனை செய்த மருந்துகளைத் தவிர, நம் முறையில் மருந்துகள் வேறு இருக்கமுடியாது" என்று சொல்லிக்கொண்டிருப்பது நியாயத்துக்கும், நம் நன்மைக்கும் ஒவ்வாதது.

நம் நாட்டின் ஆயுர் வேத, சித்த, யூனனி முறைகளில் எத்தனையோ மூலிகைகள் இருக்கின்றன. நாம் அகராதிகளில் உபயோகிக்கும் பலவித தான்யங்கள் இருக்கின்றன. இவற்றிகெல்லாம் மேலாக கடந்த நூறு ஆண்டுகளுக்குள் வைத்திய முறையில் எத்தனையோ புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இம்மருந்துகள் எல்லாம் இப்பொழுது அவைகளின் ஸ்தூல ஆகிருதியில் தான் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை நுண்ணிய அணுக்களாக வீரியப்படுத்தி, பரிசிலனை செய்தால், தீராத நோய்களுக்கும் எத்தனையோ மருந்துகளைக் கண்டுபிடிக்கலாம். நம் நாட்டுக்கும் நல்லது; ஹோமியோபதிக்கும் மேன்மையாயிருக்கும்.

# செய்திகளும், அபிப்பிராயங்களும்.

**மசோதா:**—சென்னை, மார்ச்சு 20. ஹோமியோபதி மருத்துவ முறையை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமான மசோதா சீக்கிரத்தில் கொண்டு வரப்படும், சட்ட இலாக்கா தற்போது இதைப்பற்றி பரிசீலித்து வருகிறது என்று சுகாதார மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு இன்று அசெம்பிளியில் கூறினர்.

ஹோமியோபதி டாக்டர்களுக்கான யோக்கியதாம்சங்கள், பதிவுமுறை, போதனு முறை ஆகியவற்றை நிர்ணயிக்கும் முறையில் சட்டம் வகுக்கப்பட்டு வருவதாக மந்திரி கூறினர்.

**—சுதேசமித்திரன்.**

**வைத்தியக் கல்லூரிகள் :**—மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இந்தியாவில் 21 புதிய வைத்தியக் கல்லூரிகள் திறக்கப்படலாம் என்று மத்திய சுகாதார மந்திரி ஸ்ரீ டி. பி. கர்மார்கர் புது டில்லியில் மார்ச்சு 14-ம் தேதியன்று கூடிய மத்திய சட்டசபைக்குழு ஒன்றில் கூறினர்.

அவ்வளவும் அலோபதி வைத்தியக் கல்லூரிகள் என்பது நேயர்களுக்குச் சொல்லாமலேயே விளங்கியிருக்கும்!

பின்னர், மந்திரிகள் ஆயுர்வேதமென்றும், யூனனி என்றும், ஹோமியோபதி என்றும் பேசுவானேன். கட்டுப்பாடு மசோதா கொண்டுவர உபயோகப்படுகின்றனபோலும்!!

பண்டை நாட்களில் அரசகுமாரன் படிக்கா விட்டால் அடிவாங்குவதற்கென்று "அடிவாங்கும் பையன்" என்று ஒரு

## எங்கள் விசேஷ ஹோமியோபதி டானிக்குகள்

* **அல்பாவீனு :** அல்பால்பா, அவீனு ஸடீவா மற்றும் உயிர் உப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பசியை வளர்த்து, உண்ணும் உணவை உடலில் சேர்த்து உரமூட்டும் டானிக்.

* **கல்கால் பாஸ் :** சீரணக்கோளாறுகளுக்கும் பலவீனத்துக்கும்.

* **கெடோஸான் :** நரம்புத்தளர்ச்சி, மன, உடல் உறுதிக் குறைவு முதலியவைகளை நீக்கி, உடலுக்குத் தெம்பூட்டுகிறது.

* **நீல்வம் டானிக் :** கடுமையான நோய்களினாலும், அதிக உழைப்பினாலும், அளவுக்கு மிஞ்சிய சிற்றின்பத்தாலும் உண்டாகும் பலவீனத்திற்கும் மிகச் சிறந்த டானிக்.

* **பாஸ்பேடால் :** ஐந்துவித பாஸ்பேட்டுகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. நரம்புகளுக்கும் மூளைக்கும் மிகச் சிறந்தது.

* **பைடோன் :** 12 வித உயிர் உப்புகளும் சேர்ந்து தயார் செய்த டானிக்.

* **வைரோஜன் :** போட்டியும் அவசரமும் மிகுந்துள்ள இந்நாளில் மனிதனின் நரம்பு மண்டலம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. யௌவனத்திமிரினாலும் சிலர் நரம்புத் தளர்ச்சி அடைகின்றனர். இக்காரணங்களால் தூக்கமில்லாமையும் ஓயாத மனக்கவலையும் உண்டாகின்றன. இத்தகையவர்களுக்குப் புத்துயிரூட்டி வாழ்க்கையில் குதூகலமாய் ஈடுபட வைரோஜன் உதவுகிறது.

* **ஜெல்ஸாவீனு :** ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமுன் தன்னம்பிக்கை இழந்து உடம்பில் பரபரப்பும் நடுக்கமும் ஏற்படுகிறவர்களுக்கு இன்றியமையாத விசேஷ டானிக். மாணவர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், பிரசங்கிகள், பாடகர்கள், நடிகர்கள் உபயோகிக்கலாம்.

* **ஸார்பாரி :** இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்யும் உன்னத டானிக்.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"
**77, ராமகிருஷ்ணு மடம் ரோடு,**
மதருஸ்-28.

கிளை ;
9, செம்புதாஸ் தெரு,
மதருஸ்-1.




தோழனை நியமிப்பார்களாம். சுதந்திர இந்தியாவில் அலோபதி வைத்தியத்திற்கு நாமெல்லோரும் "அடிவாங்கும் பையன்" உத்தியோகம் தான் பெற்றிருக்கிறோம்.

* * *

**தென் சென்னை** பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம், மார்ச்சு மாதம் 19-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4மணிக்கு, 77, ராமகிருஷ்ணு மடம் ரோடு, சென்னை-28, "பால நிலைய"த்தில் நடை பெற்றது.

அவ்வமயம் டாக்டர் எம். என். ராஜன் தலைமை வகித்தார்.

டாக்டர் ஸி. ஜே. போர்ஜியா அவர்கள் "காலரா"வைப் பற்றி விரிவாகப்பேசி, தான் செய்த சிகிச்சை முறைகளைப் பற்றியும் கூறினர்.

ஏப்ரல் மாதம் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு "பால நிலைய"த்திலேயே டாக்டர் ஹானிமனின் பிறந்த தின விழாவைக் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப் பட்டது. அன்று ஸ்ரீ வி. ரங்கநாதன் அவர்கள் "ஹானிமனை"ப் பற்றி பேச ஒப்புக் கொண்டுள்ளார்.

* * *

**ஒண்டிப்புதூரில்** (கோவை ஜில்லா) நமது மாணவர் டாக்டர் பி. துரைசாமி, 8/14, பெருமாள் கோவில் தெருவில், "ஆனந்தா ஹோமியோபதி ஹௌஸ்" என்ற பெயரில் வைத்தியசாலையை 24-2-61-ம் தேதியன்று துவக்கியுள்ளார்.

* * *

**யுனைடெட்** பதிவு பெற்ற ஹோமியோபதியர் சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் மார்ச்சு 19-ம் தேதி மதுரையில் நடைபெற்றது. அப்பொழுது டாக்டர் எம். கோபால கிருஷ்ணனும், டாக்டர் சந்தராஜும் "க்ஷயரோக"த்தைப் பற்றி பேசினர்கள். டாக்டர் கே. சுப்பா ராவ் "ஜீரண சக்தி"யைப் பற்றி பேசினர்.

**தென் காசி:** பதிவுபெற்ற ஹோமியோபதியர் சங்கத்தின் இரண்டாவது மகாசபைக் கூட்டம் 26-2-61 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அச்சமயம் டாக்டர் ஜோதிர்மயம் அவர்களுக்கும், அவர் தம் துணைவியாருக்கும் சங்க உறுப்பினர்களால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

* * *

**வடசேலம்** பதிவுபெற்ற ஹோமியோபதி மருத்துவர் சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் 5-3-61-ல் கூடியது.

* * *

**ஸ்ரீ மொரார்ஜி தேசாய்** (மத்திய நிதி மந்திரி,) பிப்ரவரி 27-ம் தேதி பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டில், பேசும் போது, "நெடு நாள் நோய்களுக்கு ஹோமியோபதி மருந்தைக் கொடுத்தால், அந்நோயின் குறிகள் முதலில் வெளி வந்த பிறகு தான் நோய் குணமாகி வரும். அதே போல்...." என்று சொன்னார்.

நிதி மந்திரிக்கும் ஹோமியோபதித் தத்துவங்கள் தெரிந்திருக்கிறது! ஹோமியோபதியின் பிழைப்பு பெரிய இடத்து தோழமையாய் தான் இருக்கிறது. பெயருக்கு 'எல்லா மேதைகளையும் தெரியும்; ஆனால், காரியத்திற்கு ஒரு நண்பனும் கிடையாது.

* * *

' **நமது மாணவி டாக்டர் (Mrs) A. K. பீபி** அவர்கள் 'ஹோமியோபதி வைத்திய சாலை'' என்ற பெயரில் ஒரு டிஸ்பென்சரியை சென்ற 1 மாதகாலமாக சென்னை, சைதாப்பேட்டை சி. ஐ. டி. நகர், 5-வது மெயின் ரோட்டில் நடத்தி வருகிறார்.

ஷை வைத்தியசாலை மிகவும் நல்லமுறையில் நடந்து மக்களுக்கு தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

# 'ஹோமியோபதித் தந்தை'

## மகளுக்கு எழுதிய கடிதங்கள்—VI.

(M. N. R.)

குழந்தை பிறந்து இருபது நாட்கள் ஆன பிறகு ஒரு தாய்க்கு மார்பில் கட்டி உண்டாகி தினந்தோறும் சுரம் கண்டது. டாக்டரைக் கேட்டபோது "சுரம் இறங்கும் வரை பார்லி கஞ்சி தான்" என்று கூறினார். மூன்று நாட்களில் பசி தாங்காமல் அந்நோயாளி கதற "கஞ்சியை நிறையக் குடியேன்" என்று தான் டாக்டர் சொன்னார். அப்பொழுது அங்கிருந்த ஒரு முதியவர் "இரணத்தினால் ஏற்பட்ட சுரம். அந்த இரணம் பழுத்து உடையும் வரை பல நாட்களாகுமே, அதுவரை பிள்ளைத் தாய்ச்சியைப் பட்டினி போடலாமா?" என்று கூறினார். இதைக் கேட்டதும் டாக்டர் விழித்துக்கொண்டார். "மிகவும் சரிதான், இஷ்டப் பட்டதைக் கொடுங்கள்" என்று சம்மதித்தார்.

உள்ளுக்கும் வெளிக்கும் பல மருந்துகள் கொடுத்தும் ஒருவருடைய முழங்கையிலுள்ள அழுவுணிச்சிரங்கு குணமாக மறுத்தது; சீழும் நீரும் கொட்டிக் கொண்டே இருந்தது. டாக்டர் சிறிது ஆலோசித்தார். "தினமும் சோப்பும் தண்ணீருமிட்டு கழுவுவதை நிறுத்துங்கள்," என்றார். இரண்டு, மூன்று தினங்களுக்கு, தானே பஞ்சு கொண்டு சிறங்கைத் துடைத்து கால்மின் லோஷனை வைத்துக் கட்டினார். இரணம் முக்கால் பங்கு ஆறிவந்தும் சீழ் பிடிப்பது இன்னும் கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. டாக்டர் பார்த்தார். "ஓகோ, நமது தவறு," என்று சொல்லிவிட்டு, கால்மின் லோஷனை மாற்றி விட்டு கால்மின் ஆயின்ட்மென்டு போட ஆரம்பித்தார். அந்த லோஷனிலுள்ள சிறு தண்ணீர் கூட அவ்வளவு கஷ்டம் கொடுத்திருக்கிறது!

பல தவணைகளில் வயது முதிர்ந்தவர்கள் என்னிடம் வந்து "முன்பு போல் எனக்குச் சாப்பிட முடியவில்லை; ஏதாவது மருந்து கொடுங்கள்" என்பார்கள். "வயதானால் கொஞ்சம் குறைந்துதான் சாப்பிடவேண்டும்" என்று சொன்னால், கேட்டால் தானே.

சாதாரணமாக உணவு விஷயத்தில் ஒத்துக் கொள்ளாத உணவுகளை நிறுத்தினால்தான் அவைகளால் உண்டான நோய்

குணமாகும். "நான் எதை வேண்டுமானாலும் உண்பேன்; என் பிணியைத் தீர்க்கவேண்டியது டாக்டர் கடமை" என்பது அறியாமையே.

உணவைப் பற்றி எழுதும் போது கல்கத்தாவில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. அங்கு ஒரு பால்கார பாபு இருந்தார். அவருக்கு 10, 12 எருமைகள் இருந்தன. அவருக்கு பாலுக்கும் வெண்ணைக்கும் பஞ்சமா? இரத்த அமுக்க நோயுற்று அவர் கிடக்கையில் அவரை நான் பார்த்தேன். அவர் சொன்னார், "மாமிசம் உண்பதில்லை; ஆதலால் தினமும் காலையில் அரைப் பவுண்டும், மாலையில் அரைப் பவுண்டும் வெண்ணை சாப்பிடுவது வழக்கம். இப்போது வெண்ணையே தின்னலாகாது என்று டாக்டர் சொன்னார் எப்படி ஜீவித்திருப்பது!" பசும் வெண்ணையே எப்படியிருக்கும் என்று மறந்து விட்ட நாம் இதைக்கேட்டு ஆச்சரியப்படாமலிருக்க முடியாது.

மற்றும், நியூசிலாந்து தேசத்தில் "அதிகம் பால் குடி" என்ற பிரசாரத்தைக் கண்டித்து எழுதுகையில் பாலும் வெண்ணையும் அதிகமாய் உபயோகிப்பது பருமனாக உள்ளவர்களுக்கும், அதிக வேலை செய்பவர்களுக்கும், மன உளைச்சல் உள்ளவர்களுக்கும் மிகக் கெடுதி செய்யும் என்று கூறியுள்ளார். குழந்தைகளுக்குத் தண்ணீர் பால் கூட கிடைப்பது அரிதாகிய நம் நாட்டில், பால் அதிகமாக அருந்துவதால் நோய் வரக்கூடும் என்பதே நம்பமுடியவில்லையல்லவா? பாலும் வெண்ணையும் கூட அளவுக்கு மிஞ்சினால் கெடுதல் செய்யும்!

இந்த வெளிக் காரணங்களில் மற்றொரு வகையும் கூட எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. அதுதான் கொடுக்கப்பட்ட மருந்துகளின் விளைவு. எல்லா சமயத்திலும் எந்த மருந்தினால் சங்கடங்கள் விளைந்தன என்று கண்டு பிடிப்பது கடினம். அதை அறிந்து விட்டாலோ, அம்மருந்தை மறுபடியும் கொடுக்காது நிறுத்தி விட்டால் நோயாளி தானே குணம் அடைந்து விடுகிறான். அது எளிதில் உணர முடியாவிட்டாலும், இப்படியும் உண்டாகலாம் என்பதை மனதில் கொண்டு நோயாளியின் பழைய வரலாற்றை கூர்ந்து கவனிக்க வேண்டியது ஒரு டாக்டரின் கடமையாகும்.


டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் இயற்றிய
மூன்று புத்தகங்கள்

மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக்
**மெட்டீரியா மெடிக்கா**
* இணையற்றது * மிகச் சிறந்தது
1144 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம்
ஹோமியோபதியர்களுக்கு இன்றியமையாதது.
விலை ரூ. 20/-. அனுப்பும் செலவு ரூ. 2/-

ஹோமியோபதி வைத்தியத்துக்கு
மிக அவசியமான இரண்டாவது புத்தகம்
**நோய்களும் சிகிச்சையும்**
விலை ரூ. 5-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

ஆங்கில வைத்தியச் சொற்களுக்கு
தமிழறியாது தவிப்பவர்களுக்கு
* ஒன்றே ஒன்று * நன்றே நன்று
**மெடிகல் டிக்ஷனரி**
ஒன்றேதான் தமிழகத்திலேயே உள்ளது.
விலை ரூ. 6-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

**ஓ ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலையம்" கிளை:
77, ராமகிருஷ்ண மடம் ரோட், 9, செம்புதாஸ் தெரு,
சென்னை-28. சென்னை-1.

# ஹோமியோபதித் துணுக்குகள்

1. பச்சை காலெண்டுலா செடியிலிருந்து எடுக்கப்பட்ட சாற்றை பரீக்ஷித்துப் பார்த்தால் அதில் ஒரு காலன் சாறுக்கு பத்து குண்டுமணி எடை **ஐயோடின்** இருக்கிறது என்று தெரிய வருகிறது. இதனால் தான் **காலெண்டுலா** இரணங்களை ஆற்றுகிறது. காய்ந்துபோன செடியிலிருந்து **ஐயோடின்** கிடைப்பதில்லை.

2. நோயாளி உறக்கமே வரவில்லை என்று அவதிப்படும் போது **பாஸிப்ளோரா** கொடுத்துப் பார்க்கவும்.

3. கருப்பையில் வளரும் சிசுவுக்கு சுவாசகோசம், வயிறு, மூத்திரக்காய் எல்லாமே நஞ்சுப்பைதான். கருவிலுள்ள சிசுவுக்கு பிராணவாயு, ஆகாரம் கொடுப்பதும் நஞ்சுப் பைதான். சிசு மலஜலம் கழிப்பதும் இப்பையிலேதான். நஞ்சுப் பையில் சுரக்கும் நீர் குறைவாயிருந்தால் சிசு இறந்து பிறக்கும் என்கிறார்கள். கால் நடைகள் நஞ்சுப் பையைத் தின்று விடுகின்றன. நஞ்சுப்பை நீர் தாய்மார்களுக்குக் கொடுத்தால் குழந்தைக்குப் பால் நிறைய இருக்கும். அப்பாலைக் குடித்த குழந்தைகளும் மற்றவர்களைக் காட்டிலும் நன்றாகப் புஷ்டியாக வளர்கின்றன.

4. பப்பாளிக்காய் வயிற்றுப் போக்குக்கு நல்ல மருந்து; பப்பாளிப் பழமோ மலச்சிக்கலுக்கு நல்லது.

5. சில மருந்துகள் சில வீரியத்தில் தான் நன்றாய் வேலை செய்கின்றன. உதாரணமாக ராகமும் தாளமும் போல், சில மருந்துகளும், சில வீர்யங்களும் என் மனதில் பின்னிக் கிடக்கின்றன. ஸல்பர் என்றால் 30-வது விர்யம் தான் எனக்குத் தோன்றும். அதே போலத்தான் அகோனைட் 1, லைகோபோடியம் 12, ஸிலீஷியா 6. சாதாரணமாக, டாக்டர் ஹானிமன் உபயோகித்த 30 ஆம் வீரியமானதே போதும். சில சமயங்களில் 200 வீரியத்தையும் உபயோகிக்கலாம்.

**டாக்டர் ஹ்யூஸ்.**

# ஹோமியோபதி மருந்துகள் மெதுவாய் வேலை செய்கின்றனவா ?

ஹோமியோபதி மருந்துகள் மெதுவாய் வேலை செய்கின்றன என்ற தவறான அபிப்பிராயம் துரதிர்ஷ்ட வசமாய் இருந்து வருகிறது. கீழுள்ள இரு காரணங்களால் தவறான இவ்வபிப்பிராயம் தோன்றி இருக்கிறதென்று கூறலாம்.

1. ஹோமியோபதி வைத்தியர்களிடம் சிகிச்சை பெற வரும் நோயாளிகளில் பெரும் பாலார் மற்ற வைத்தியர்களால் தீராது என்று கைவிடப்பட்ட நீடித்த நோய்களை உடையவர்களாய் இருக்கின்றனர். இதனால் நோய் நீங்கச் சிறிது காலதாமதம் ஏற்படத்தான் செய்யும்,

2. நோயை நீக்கத்தகுதி வாய்ந்த மருந்தைப் பொறுக்கியெடுப்பதிலேயே நமது நேரத்தின் பெரும் பகுதியைச் செலவிட வேண்டியிருக்கிறது. பற்பல காரணங்களால், நோய்க்கு ஏற்ற மருந்தை முதல் தடவையிலேயே தேர்ந்தெடுக்க முடியாமல் போகிறது. கடைசியாக நோய்க்கு ஏற்ற மருந்தைச் சரியாய்த் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் போது மிக விரைவில், சில சமயங்களில் மருந்தைக் கொடுத்த மறுகணமே, நோய் நீங்கிவிடுகிறது. இவ்விஷயங்கள் நோயாளிக்கு எப்படித் தெரியும்? ஆகவே ஹோமியோபதி மருந்துகள் மெதுவாய் வேலைசெய்கின்றன என்று அவர் நினைப்பதில் தவறு என்ன இருக்கிறது ?

நோய்க்கு முற்றிலும் ஏற்ற மருந்தைக் கொடுத்தால் உடனடியாக குணம் தோன்றுகிறது என்பதை எடுத்துக் காட்ட சில அனுபவக் கேசுகளைக் கீழே தருகின்றேன்.

### கேசு நம்பர் 1.

1954-ம் ஆண்டில், மார்பிலும் இடது புறத்திலும் வலி இருக்கிறதென்று கூறிக் கொண்டு ஓர் மாலுமி என்னிடம் வந்தார். சுமார் ஒரு வருஷத்துக்கு முன் இங்கிலாந்துக்குக் கப்பலில் போகும் போது இடது கையினால் கனமான பொரு

## நுண்ணிய மருந்தினால் எண்ணிய பயனுற கண்ணிய மில்லையேல் புண்ணிய மில்லையே

தாய்த்திரவம், வீரியத்திரவம், மாத்திரை, இஞ்சக்ஷன் டியூபு முதலிய எந்த உருவில் இருந்தாலும் ஹோமியோபதி மருந்தின் தூய்மையை விஞ்ஞான முறையிலோ அல்லது வேறு எந்த முறையிலும் கண்டறிய முடியாது. அதைத் தயாரித்து விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் கண்ணியத்தைப் பொறுத்த விஷயம் அது.

சென்ற 13 ஆண்டுகளுக்கும் மேலாக ஹோமியோபதி மருந்துகளின் தயாரிப்பு—விற்பனையில் ஈடுபட்டுள்ளது நமது ஸ்தாபனம். எங்களிடம் ஒருமுறை மருந்துகளை வாங்கியவர் மீண்டும் எங்களையே நாடி வருகின்றனர். அத்துடன் தங்கள் நண்பர்களுக்கு எங்கள் மருந்துகளைச் சிபாரிசுசெய்கின்றனர். எங்கள் மருந்துகளின் தூய்மைக்கு வேறு அத்தாட்சி தேவையில்லையல்லவா!

ஹோமியோபதி—பயோகெமிஸ்டிரி மருந்துகள் யாவும் எல்லா உருவங்களிலும் எங்களிடம் கிடைக்கும். அத்துடன் ஹோமியோபதி வைத்தியர்களுக்கும் அபிமானிகளுக்கும் சேவை செய்யும் நோக்கத்துடன் எங்கள் தலைவர் டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்களின் தொழில் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டு 52 வகை விசேஷ மருந்துகளையும் 30 வகை ஹோமிக்ஸ் மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

முழு விபரக் கேட்லாக் தேவையெனில் அனுப்புகிறோம்.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதராஸ்-28.



ளொன்றைத் தூக்கியதாகவும் உடனே மார்பினுள் வலி தோன்றியதாகவும் சொன்னார். கைகளை உயரத் தூக்கினால் வலி அதிகரித்ததால் அவைகளை அசைக்கக்கூட முடியவில்லை. கப்பலிலிருந்த டாக்டர் கொடுத்த மருந்துகளால் வலி அடங்கவில்லை. அதனால் லண்டனில் இருந்த பிரபல டாக்டர்களிடம் சிகிச்சை பெற்றார். ஆனால் வலி நீங்கவில்லை. பிறகு அமெரிக்காவுக்குச் சென்று அங்கேயும் அதன் பிறகு கப்பல் போய்ச் சேர்ந்த பல துறைமுக நகரங்களிலும் இருந்த டாக்டர்களிடம் சிகிச்சை செய்து கொண்டார். கடைசியாக, இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இங்கேயும் பல டாக்டர்களிடம் காண்பித்தார். யாராலும் வலியை நிறுத்த முடியவில்லை. பற்பல வழிகளில் ஆராய்ச்சி செய்தும் நோய் இன்னதென்று நிர்ணயம் செய்ய அவர்களால் முடியவில்லை. முடிவில் ஹோமியோபதி வைத்தியத்தையும் தான் பார்த்துவிடுவோமே என்ற சபலத்தோடு என்னிடம் வந்தார். அக் கேசு விஷயமாக நான் அதிக சிரமம் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. ரஸ்டாக்ஸ் 200-ல் மூன்று வேளை மருந்து கொடுத்து ஆறுமணிக்கொரு முறையாக உட்கொள்ளச் சொன்னேன். மருந்தை வாங்கிக்கொண்டு என்னுடைய அறையிலேயே ஒரு வேளை மருந்தை உட்கொண்டு பிறகு வெளியேறினார். பத்து நிமிஷங்களே யிருக்கும். தன் இருப்பிடத்திலிருந்து டெலிபோன் மூலம் நோயாளி பேசினார். 'வலி மறைந்து விட்டதால் மீதியுள்ள இருவேளை மருந்தைத் தொடர்ந்து உட்கொள்ள வேண்டுமா என்று கேட்டார். அன்றைய தினத்திலிருந்து இன்றளவும் வலி திரும்பவில்லை.

**கேசு நம்பர் 2.**

பெயர்:—திருமதி கே. பி. வயது 60. சிகிச்சை பெற வந்த தேதி 12-3-1954.

தற்காலம் உள்ள கோளாறு:—கடந்த 20 ஆண்டுகளாக இடது முழங்கால் மூட்டில் வலி, சிற்சில சமயங்களில் வலது முழங்காலிலும் வலி ஏற்படுகிறது? நிற்கவோ நடக்கவோ முடியாது. இது தவிர உடம்பு முழுவதும் பற்பல இடங்களில், முக்கியமாகத் தசைகளிலும் எலும்பு மூட்டுகளிலும்

வலி இருக்கிறது. வலி அடிக்கடி இடம்மாறும். குத்துவது போன்ற வலி; குளிர்காற்று வீசினாலும் குளிர்ந்த நீரில் குளித்தாலும் கூடுதலாகிச் சூடான ஒத்தடங்களால் குறைவாகும்.

காலை வேளையில் தலைச் சுற்றல்.

கடந்த 5 ஆண்டுகளாய் இரு கால்களிலும் நீர்ச்சுரப்பு; அத்துடன் குதிரைமுக எலும்புகளிலும் முழங்கால் மூட்டுகளிலும் இழுப்பது போன்ற வலி, மாலையில் கூடுதலாகும்.

பால் குடித்தால் வயிற்றுப்போக்கு தோன்றும்,

*பழைய வரலாறு:*—நோயாளிக்கு 40 வயதில் மாதவிடாய் போக்கு இறுதியாய் நின்றுவிட்டது. அதிலிருந்தே நோயாளியின் கோளாறுகள் யாவும் தொடங்கியிருக்கின்றன.

*குடும்ப வரலாறு:*—குறிப்பிடத் தக்கதாய் எதுவும் இல்லை.

மாத விடாய்ப் போக்கு இறுதியாய் நின்றதிலிருந்து கோளாறுகள் தொடங்கின என்னும் குறிக்கு முதல் இடமும், வலியின் இடம் மாறும் குறிக்கு இரண்டாவது இடமும், வலி குத்துவதுபோல் இருக்கிறது என்ற குறிக்கு மூன்றாவது இடமும் அளித்து மருந்துகளைத் தேடியதில் **ஸமிஸி:ப்யுகா** முற்றிலும் எற்ற மருந்தாய் காணப்பட்டது; மூட்டுகளில் வலி, தசைகளில் இழுத்தல், குளிரினால் நோய் கூடுதலாகுதல் ஆகிய குறிகளும் அம்மருந்தில் அடங்கியிருப்பதால் அந்நோயாளிக்கு **ஸிமிஸி:ப்யுகா** தகுதி வாய்ந்ததாய்த் தெரிந்தது. ஆதலால் 13-3-54-ல் **ஸிமிஸி:ப்யுகா** 200-ல் ஒரு வேளை கொடுத்தேன். மருந்து கொடுத்த ஒரு வாரத்துக்குள் நல்ல பலன் தெரிந்தது. இப்பொழுது சிறிது குணம் என்று நோயாளி கூறினார். வலி, தலைச் சுற்றல், நீர்ச்சுரப்பு முதலியவை குறைய ஆரம்பித்து மறைந்தும் விட்டன. ஆனால் நோய் மூன்று தடவை திரும்பிவந்தது.



அம்மருந்தையே ஒவ்வொரு தடவையும் கொடுத்தேன். மூன்றாவது தடவையில், அதாவது 11-10-1959-ல், மருந்தை 1-m வீரியத்தில் உபயோகித்தேன். பிறகு இன்று வரை நோய் திரும்பவில்லை; சுகமாய் இருந்துவருகிறார்.

**கேசு நம்பர் 3.**

பெயர்: திருமதி பி. வி. வயது: 33. **நோய் விபரம்:**—அடிக்கடி தலைவலி, தலைச்சுற்றல், மார்பை இறுக்கிப் பிடிக்கும் உணர்ச்சி, கை கால்களில் அங்கு மிங்குமாக இடம் மாறும் வலிகள். மாதவிடாய் தாறுமாறாகத் தோன்றுகிறது; போக்கு பெரும்பாலும் அதிகமாகவும் 6 அல்லது 7 நாட்கள் நீடித்தும் காணப்படுகிறது. சென்ற ஆறு வருஷங்களாக இக்கோளாறுகள் இருந்து வருகின்றன.

அவளுடைய கடைசிக் குழந்தை பிறந்த சில நாட்களுக்குப் பிறகு அதிக மனக்கவலையை உண்டாக்கிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுச் சில நாட்கள் நீடித்திருந்ததன் காரணமாகவே மேற்கூறிய கோளாறுகள் யாவும் தோன்றின.

நிபுணர்கள் பலரிடம் சிகிச்சை செய்து கொண்டார். ஆனால் பயன் எதுவும் இல்லை.

என்னிடம் ஆலோசனை பெற வந்தபோது இரவு வெகு நேரமாகிவிட்டது. அதனால் நோயாளிக்கு ஆறுதல் அளிப்பதற்காகவே மேலுள்ள சில குறிகளைக் குறித்துக் கொண்டேன். அடுத்த வாரம் திரும்பிவந்து நோயின் முழு விவரங்களைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு **இக்னேஷியா** 30-ல் ஒரு வேளை மருந்தைக் கொடுத்தேன். அதனால் பயன் ஏற்படும் என்ற எண்ணத்தினால் அல்ல; வெற்று மாத்திரைக்குப் பதிலாக இருக்கட்டுமே என்றுதான். ஆனால்.........

சொன்னபடி ஒரு வாரம் கழித்துத் திரும்பி வந்தார் நோயாளி. அவர் கூறிய செய்தி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மருந்தை உட்கொண்ட இரண்டாம் நாளன்று

# எங்கள் சொந்தத் தயாரிப்பு
# மகவிற்காம் மருந்துகள்

* **கிட்டிமிக்ஸ்**

குழந்தைகளுக்கென்றே தயார் செய்யப்பட்ட டானிக். வயிற்று வலி, அசீரணம், சுரம், வயிற்றுப்போக்கு முதலிய கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம்.

* **பயோலாக்ஸ்**

சுகபேதி மருந்து.

* **ஹோலிஹோ**

குழந்தைகளின் ஈரல், குலை கட்டிகளுக்கு.

* **சாண்டோலின்**

வயிற்றுப் பூச்சி, குடல் பூச்சிகளைக் கொல்வது மட்டுமின்றி பூச்சிகள் உற்பத்தியாகும் சரீர வாகையே மாற்றும்.

* **ஸில்டோனிஸ்**

டான்சில் நோய்க்கு ஆபரேஷன் செய்வது மிகக் கெடுதல் என்று எல்லா டாக்டர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் வேறு ஒரு வைத்திய முறையிலும் இதற்கு மருந்து கிடையாது. நமது ஸில்டோனிஸ் சாப்பிட்டு வந்தால் ஆபரேஷனே தேவையா யிராது.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை:
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.




ஆரஞ்சுப் பழத்தின் அளவில் கறுப்பு நிற முள்ள கட்டி (உறைந்துபோன இரத்தமோ என்னமோ?) யொன்று யோனி வழியாய் வெளியே வந்து விழுந்தது. அதன் பிறகு வலியோ மற்ற கோளாறுகளோ எதுவுமே இல்லை. அடுத்ததாக ஏற்பட்ட மாதவிடாய் ஒழுங்காய் இருந்தது. தன் நோயைச் சரியாய் நிர்ணயித்து அதை அவ்வளவு எளிதில் குணம் செய்ததற்காக எனக்கு நன்றி தெரிவித்தாள் அப்பெண்மணி. இது நடந்து 6 வருடங்கள் ஆகிவிட்டன. இன்றுவரை அவள் சுகமாகவே இருக்கிறாள்.

### கேசு நம்பர் 4.

கடந்த குளிர் காலத்தில் ஒரு நாள் காலையில் என்னிடம் வயதான ஓர் பெண்மணி கொண்டு வரப்பட்டார். கெட்டியான கம்பளியால் அவள் முகம் மூடப்பட்டிருந்தது; பேசவும் தன் குறிகளைச் சொல்லவும் அவளால் முடிய வில்லை. அவளைக்கூட்டிக்கொண்டு வந்தவர்கள் தெரிவித்த விவரங்கள் வருமாறு: ஐந்தாறு வாரங்களுக்கு முன் குளிர் காற்றில் நின்றதால் அவளுக்குச் சலதோஷம் பிடித்தது. ஏதோ சில மருந்துகளை உட்கொண்டு மேற்புறமாகவும் உபயோகித்ததினால் சலதோஷம் அடக்கப்பட்டுவிட்டது. ஆனால் சென்ற 10-11 நாட்களாக முகத்தின் இடப்பக்கம், இடது கண், இடது நெற்றி ஆகிய இடங்களில் கடுமையான தெறிக்கும் வலிகள் இருந்து வருகின்றன. வலியுள்ள இடங்களில் சுரணையும் குறைவாய் இருக்கிறது. பேசினாலும் வாயை மென்றாலும் வலி கூடுதலாகிறது. குளிர்காற்றுப் பட்டாலும் தொட்டாலும் அழுத்தினாலும் வலி அதிகமாகிறது. இடது கண்ணிலிருந்து இடைவிடாமல் கண்ணீர் வடிந்துகொண்டே இருக்கிறது. வலியை அடக்கும் குணமுள்ள மருந்துகளால் வலியை நிறுத்த முடியவில்லை. இரவும் பகலும் எமவேதனை. வலியடக்கி மருந்துகளை இரண்டு மணிக்கொரு முறையாக உட்கொள்ள நேரிட்டது. இதை விடப் பரிதாபகரமான நிலை எதுவும் இல்லையென்று கூறலாம். ஸ்பைஜீலியா-வைத் தேர்ந்தெடுத்து 30 வீரியத்தில் நான்கு மணிக்கொரு முறையாக உட்கொள்ளச் செய்தேன். அன்று மாலைக்குள் நோயாளிக்குச் சௌகரியம் தெரிந்தது. அன்று இரவு வலி பொறுக்கு

மளவுக்குக் குறைந்து மறுநாட் காலையில் இருந்த இடம் தெரியாமல் மறைந்தே போய்விட்டது. இன்று வரை அவ் வலி திரும்பவில்லை.

### கேசு நம்பர் 5.

24–12–59—ல் ஒருகார் விபத்தில் சிக்கிக் கொண்டார் திரு. கே. என்பவர். மூன்று நாட்களுக்குச் சுய நினைவே இல்லை. நினைவு திரும்பியவுடன் தன் மனைவியோ குழந்தைகளோ எதிரில் வந்தால் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கி விட்டார். அவர்களைக் கண்டால் அவருக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருவதுபோல் இருந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்தபின் தன்னுடைய வீட்டுக்குப்போக மறுத்து விட்டார். தன் குடும்பத்தினர்களிடம் அவருக்குக் குரோத மனப்பான்மை ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாக அவருடைய நண்பரொருவரின் வீட்டில் வைக்கப்பட்டார். நோயாளியின் மனத்தடுமாற்றம் அவர் குடும்பத்தினரை மிகவும் பாதித்ததென்று கூறவும் வேண்டுமோ? மயக்க மருந்துகளை எவ்வளவு கொடுத்தாலும் இரவிலும் சரி பகலிலும் சரி நோயாளி ஒரு கணம்கூடத் தூங்கவில்லை. நரம்புகளைப் பற்றிய நோய்களில் நிபுணரான வைத்தியரொருவர் மூளைத் தசை அணுக்களில் கடுமையான அதிர்ச்சியும் நீர்ச் சுரப்பும் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார். எந்த வகையான மயக்க மருந்துகளாலும் சிறிதளவு அனுகூலம் கூடத் தோன்றவில்லை. நாளடைவில் தான் நோய் குணமாகுமென்று நிபுணர் கருத்துத் தெரிவித்துவிட்டார்.

10-1-60 அன்று, விபத்து நேர்ந்த 17 நாள்கழித்து ஆர்னிகா 10 m வீரியத்தில் பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறையாக 3 வேளை மருந்து கொடுக்கப்பட்டது. மற்ற மருந்துகள் நிறுத்தப்பட்டன. அன்று மாலையிலேயே நோயாளியின் நிலைமையில் அபிவிருத்தி தோன்றியது. தூக்கத்தைப் பல நாட்களாகக் கண்டிராத அவர் அன்றிரவு தூங்கினார். மறுநாட் காலையில் நியாயத்தை எடுத்துச் சொன்னால் நோயாளி அதற்குக் கட்டுப் படுவதாகவும் மற்றவர்களுடன் ஒப்புறவாய்



இருப்பதாகவும் செய்தி வந்தது. முன்போல் மூக்குக்குமேல் கோபம் வரவில்லை. ஒரு சில மணி நேரத்தில் எவ்வளவு பெரிய மாற்றம்!

அலோபதி டாக்டர்கள் ஆயுத சிகிச்சை செய்யும் காலங்களில் வெறும் ஆர்னிகாவை மட்டும் உபயோகித்தாலே போதும். ஆபத்து நேரிடுவதைப் பெரும் பாலும் தடுத்து விடலாம்.

### கேசு நம்பர் 6.

ஓராண்டுக்கு முன் 45 வயதுப் பெண்மணி ஒருவர் ஒரு மாதகாலமாய் விடாமல் இருந்து வந்த தன் தலைவலிக்காக என்னிடம் சிகிச்சை பெறவந்தார். என்னிடம் வருவதற்கு முன் பெயர் பெற்ற அலோபதி வைத்தியரொருவரிடம் காண்பித்து, தலையை எக்ஸ்-ரே பிடித்து, முதுகு நரம்பிலிருந்து நீர் எடுத்துப் பரிசோதித்து இன்னும் பல சோதனைகளை நடத்தியதாகவும் ஆனால் நோய் எதுவென்று நிர்ணயிக்க முடியவில்லையென்றும் இவர் தெரிவித்தார். வலியைத் தாற்காலிகமாய் அடக்கிவைக்கும் மருந்துகள் கொடுக்கப்பட்டன; அவைகளால் பயன் இல்லை.

அக்கேசில் கீழுள்ள குறிகளைக் குறித்துக் கொண்டேன்.

தலைவலி, மல்லார்ந்து படுத்தால் கூடுதலாகிறது; இடது அல்லது வலது பக்கமாய் ஒருக்களித்தே படுக்க முடிகிறது; இலேசாகத் தலையைத் துணியால் கட்டினால் வலி குறைகிறது. வெளிச்சத்தைப் பார்த்தாலும் வலி அதிகமாகிறது. வாசனைகளால் கூட வலி அதிகரிக்கிறது. சமைக்கும் பொருள்களின் வாசனை மூக்குக்கு வருவதைத் தடுக்க சமையல் அறைப்பக்கமாய் இருந்த வாயிற் கதவை மூடும்படிச் சொன்னார் நோயாளி.

**ஸேபியா** ஏற்றதென்று குறிகளிலிருந்து புலனாகியது. ஆகவே அதை 200 வீரியத்தில் ஒரு மணிக்கொரு வேளை வீதம் கொடுத்தேன். முதல் வேளை மருந்தினால் வலி பாதி

# எங்கள் சொந்தத் தயாரிப்பு
# மாதர்க்காம் மருந்துகள்

* **ஆர்னிகா ஹேர் ஆயில்**
தலை அரிப்பு, பேன் பிடித்தல், சிக்குப் பிடித்தல், மயிர் கொட்டுதல் முதலிய கோளாறுகளை நீக்கி, தலை மயிர் வளரச் செய்கிறது.
* **ஈடி டாப்லெட்ஸ்**
சுக பிரசவ மாத்திரைகள்; ஏழாவது மாதத்திலிருந்து கொடுக்கலாம்.
* **க்ரெப்ஸீன்**
கருப்ப ஸ்திரீகளுக்கும், தாய்ப் பால் கொடுக்கும் ஸ்திரீகளுக்கும் புஷ்டி யளிப்பது.
* **நிஸ்ஸானு**
சங்கா தோஷ நிவாரணி
* **நோமோலெக்ஸ்**
பெண்களின் மாதவிடாய், கருப்பைப் பற்றிய நோய்களுக்குச் சிறந்தது.
* **பைடோலெக்கா பெரி**
உடல் பருமனைக் குறைப்பது.
* **மெஜித்**
நோயினுல் அமுக்கப்பட்ட மாதவிடாயை வெளிப்படுத்தும்.
* **மைலார்**
வெட்டை ஒழுக்கை நீக்க தேக புஷ்டி தரும்.
* **ஸிபாரி டாப்லெட்ஸ்**
அமித இரத்தப் பெருக்கு, வெள்ளைப்பாடு இவைகளை நீக்கி சுகம் கொடுக்கும்.
* **நீல்வம் டானிக்**
கடுமையான நோயினுலும், அதிக உழைப்பினுலும், பல வீனமடைந்த மாதர் மகிழ்வுற சிறந்த டானிக்.

விலை விவரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்

## தி ஹோமியோபதி ஹௌஸ்,
"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதருஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதருஸ்-1.




யளவு குறைந்தது. இரண்டாவது வேளை மருந்து கொடுத்த பிறகு வலி மறைந்து விட்டது. அன்றிலிருந்து இன்று வரை நோயாளி சுகமாய் இருந்து வருகிறுர்.

### கேசு நம்பர் 7.

மலட்டுத் தன்மையை நீக்குவதற்காக 42-வயதுள்ள ஒரு பெண்மணிக்கு ஆபரேஷன் செய்யப்பட்டது. ஆபரேஷன் முடிந்து ஒரு மாதம் கழித்து சிறுகுடலும் பெருங்குடலும் சேருமிடத்தில் வலி ஆரம்பித்தது. இவ்வலி காலையிலிருந்து மாலை வரை விடாமல் இருந்து படுத்துக்கொண்டவுடன் சற்று குறைவாய் இருக்கும். நடந்தாலும் கீழே குனிந்தாலும் அப்பாகத்தை அமுத்தினுலும் இருமினுலும் வலி கூடுதலாகியது.

பற்பல டாக்டர்களிடம் காண்பித்து 50 தடவைகளுக்கு மேல் எக்ஸ்-ரே பிடித்துப் பார்த்து நோய் உறுதியாய் நிர்ணயிக்கப்படவில்லை. உபாங்கவேக்காடு என்றனர் சிலர். ஆபரேஷனுக்குப் பிறகு அங்கு ஏதாவது சதை ஒட்டிக் கொண்டிருக்கலாம் என்று அபிப்பிராயம் பட்டனர் வேறு சிலர். இன்னும் பலப்பல ஊகங்கள். பலவகைப்பட்ட சிகிச்சைகளுக்கு உட்பட்டும் பயன் பூஜ்யமே. என்னிடம் வந்தபோது நோய் தோன்றி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இக்கேசுக்கு ஏற்ற மருந்து ஸேபியா என்று தெரியவந்தது. அதை 200 வீரியத்தில் இரண்டு வேளைகளுக்குக் கொடுத்து முதல் வேளை மருந்தை அன்றிரவு படுக்கப்போகும் போதும் இரண்டாம் வேளை மருந்தை மறுநாள் காலையிலும் உட்கொள்ளச் சொன்னேன். முதல் வேளை மருந்தினுல் வலியின் கொடூரம் தணிந்தது. மறுநாள் இரவு மூன்றுவது வேளையாக மருந்தை உட்கொண்டவுடன் வலி சற்றுக் கூடுதலாகியது. ஆனுல் மருந்தை நிறுத்தியவுடன் வலி குறைந்தது. மூன்று நாட்களில் வலி முற்றிலும் குணமாகி நாளது வரை தலை காட்டவில்லை.

**ஆதாரம்**:-ஜர்னல் ஆஃப் ஹோமியோபதிக் மெடிஸின்.

# மெக்ஸிகோவில் ஹோமியோபதி

**தமிழ் மொழி பெயர்ப்பு T. C. S. மணி.**

*[லா ஹோமியோபதி பிரான்ஸ் என்ற பிரஞ்சு பத்திரிகையிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. தமிழகத்திலுள்ள நண்பர்கள் படித்து ஹோமியோபதி வளர்ச்சிக்கு பாடுபட உதவும் என்று தமிழ்மக்கள் முன் சமர்ப்பிக்கப் படுகின்றது.]*

1850-ம் ஆண்டில் தான் ஹோமியோபதி வைத்திய முறை மெக்ஸிகோ நகரில் வேரூன்ற ஆரம்பித்தது. டாக்டர் ஆண்டர்டி ஒய் பாஸ். டாக்டர் ரோமன் கோமால்ஸ் என்பவர்கள்தான் தீவிரமாக ஹோமியோபதி வைத்திய முறையை கையாண்டார்கள்! முன்னவர் 1849 ஆம் ஆண்டிலும், பின்னவர் 1850-ம் ஆண்டிலும் ஹானிமனின் முறைகளை தீவிரமாக கையாண்டனர்.

1885 ஆம் ஆண்டில் உலகத்திலேயே முதன் முதலாக ஹோமியோபதி வைத்திய முறையை மெக்ஸிகோ சர்க்கார் ஜனாதிபதியின் சம்மதத்தின் பேரில் அங்கீகரித்தது. அப்பொழுது அந்த நாட்டின் ராஷ்டிரபதியாக, ஜெனரல் பார்பிரியோ டையஸ் என்பவர் பதவியிலிருந்தார். டாக்டர் ஹானிமான் அவர்களின் வைத்திய சாஸ்திரத்தை அங்கீகரித்த முதல் நாடு மெக்ஸிகோவேயாகும்!

1895 ஆம் ஆண்டு மெக்ஸிகோ சர்க்கார் தனது தேசிய ஹோமியோபதி பள்ளியை ஏற்படுத்தியதுடன் ஹோமியோபதி படிப்பிற்கான பாட திட்டங்களை வரையறைசெய்து ஹோமியோபதி டாக்டர்களுக்கு கொடுத்தது! 1895 லிருந்து 1921 ஆம் ஆண்டுவரை இந்த மெக்ஸிகோ தேசிய ஹோமியோபதி பள்ளிக்கூடம் எந்தவித இடையூறுமின்றி வெற்றிகரமாக நடந்து வந்தது, ஆனால் 1921 ஆம் ஆண்டு இந்த ஹோமியோபதி வைத்திய கல்லூரியை மெக்ஸிகோ தேசிய அலோபதிக் கல்லூரியுடன் இணைத்து விட்டனர் ஆட்சியாளர்! அலோபதி வைத்திய நிபுணர்களின் நயவஞ்சகத்தால், செல்வாக்கால், ஆட்சியாளரின் தயவால் வளர்ந்து வந்த ஹோமியோபதி வைத்திய விருட்சத்தை வெட்டி வீழ்த்தி விட்டனர்,! காரிருளை கதிரவன்தான் மறைப்பதுண்டோவென்ற கவிஞனின் கருத்தாழம் நிறைந்த கவிதைப்படி வாடாமல்லிகையை வாடிடும் மலரென மார்கெட்டிலே கூறினால் மக்களென்ன மூடரா? வாயிருப்போர் வல்லவன் சொல்லால் ஊமையாவாரோ? உண்மைதான் உலகில் பொய்யரிடம் பல்லாண்டு பணிந்திடுமோ? காலம் வரும் உண்மை வன்மை பெறயென்று காத்திருந்தனர் மெக்ஸிகோ ஹோமியோபதி டாக்டர்கள்.

இருட்டைக் கிழித்தெழுந்த முழுமதிபோல், மெக்ஸிகோ நாட்டிலே மீண்டும் மிளிர்ந்தது ஹோமியோபதி! நல்ல கருத்துக்களை நல்லறிஞர் ஏற்பதில் என்ன ஆச்சரியம் உளது? சிறந்த ஹோமியோபதி டாக்டரான ஹைஜினேஜி பெர்ரிஸ் என்பவர் தனது சொந்த முறையிலே ஓர் ஹோமியோபதி கல்லூரியைக் கண்டார்—மெக்ஸிகோவிலே 1912-ல்!

மெக்ஸிகோவிலெழுந்த அரசியல் புரட்சியின் காரணமாக மீண்டும் ஹோமியோபதிக்கும், ஹோமியோபதி டாக்டர்களுக்கும் கடுஞ்சோதனை ஏற்பட்டது! ஹோமியோபதி டாக்டர்கள் சட்டத்தால் தாக்கப்பட்டார்கள். சிறந்த ஜெர்மன் மருத்துவ சிந்தனையாரின் வழிவந்த வைத்திய வீரர்கள் அடக்கு முறைகளால் அடக்கப் பட்டார்கள்.

மனித சமுதாயத்தை வாழையடி வாழையாக வையகத்திலே வாழவழி வகுக்கும் வைத்திய வீரர்களை, மக்கள் நலம்தான் தன்மனை நலமென நினைக்கும் பிறர்க்கென வாழும் நல்லாரை நயவஞ்சகர் தண்டித்தால், நாட்டில் நல்லவர்களுக்கென்ன பஞ்சமா? அடிக்க அடிக்க பந்து உயருவதுபோல, பாதிக்கப்பட்ட ஹோமியோபதி டாக்டர்களின் தீவிரப் போராட்டத்தால் 1929 ஆம் ஆண்டு மீண்டும் தனியார் நடத்தும் ஹோமியோபதி கல்லூரிகளுக்கு பல்கலைக் கழகங்களுக்கு உள்ள மதிப்புடன் கூடிய சட்டங்கள் பிறந்தன! புதிய மெக்ஸிகோ குடியாட்சியினர் நல்லாசி நல்கினர்! இதிலிருந்தே எந்தவித இடையூறுமின்றி மனிதவர்க்கத்

திற்கு மகத்தான சேவை செய்ய பல கல்லூரிகளை திறந்தனர், ஹோமியோபதி வைத்திய அறிஞர்கள்! ஓய்வு நேரமுள்ள பாட்டாளிவர்க்க இளைஞர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் ஹோமியோபதி வைத்தியத்தை கற்க ஆயிரக் க்ணக்கில் வந்தனர்! இவர்களுக்கான பாட திட்டங்களும், இவர்கள் மருத்துவ கல்வி கற்பதற்கான நேரங்களும் வரையறுக்கப்பட்டன! இலவச ஹோமியோபதி கல்விக் கூடங்கள் மிக பெரிய மூலதனத்தில் நவீன விஞ்ஞானக் கருவிகளுடன் கூடிய ஆஸ்பத்திரிகளுடன் தோன்றலாயின! இத்தகைய ஹோமியோபதி பள்ளிகளில் பயிற்சியடைந்து, இந்த ஸ்தாபனத்தினர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அளித்த நற்சான்றிதழை மெக்ஸிகோ ஆட்சியாளர்கள் சட்ட பூர்வமாக அங்கீகரித்தனர்.

மெக்ஸிகோ நகரில் மட்டுமிருந்த இலவச ஹோமியோபதி கல்லூரி, ஹோமியோபதி டாக்டர்களுக்கான ரண சிகிச்சைக்கான பயிற்சி அளித்து ஹோமியோ சர்ஜன்களையும் ஹோமியோ முறையில் நர்ஸ், மருவத்துவச்சிகளுக்கு பயிற்சி அளித்து, ஹோமியோ நர்ஸ்களையும், ஹோமியோ (மிட்வைப்ஸ்) மருத்துவச்சிகளையும் தயாரித்து, டாக்டர் ஹானிமனின் விஞ்ஞான ரீதியான வைத்திய சாஸ்திரத்திற்கு ஊக்க மூட்டியது! 1902 ஆம் ஆண்டிலே மெக்ஸிகோ சர்க்கார் நேஷனல் பாலிடெக்னிகல் பயிற்சி பள்ளிக் கூடத்தை துவக்கியது. இந்த பாலிடெக்னிக்கல் பள்ளியிலே கட்டுப்பாடுடன் கூடிய ஹோமியோபதி வைத்தியத்தை கற்றவர்கள் தற்பொழுது மெக்ஸிகோ தேசிய ஹோமியோபதியர்களின் சம்மேளனத்தில் இருக்கின்றனர்!

மெக்ஸிகோவிலே ஹோமியோபதி வைத்திய முறைக்காக 1895-லும், 1929-லும், கடைசியாக 1932-லும் சட்டங்கள் இயற்றப்பட்டன! ஒரு நூற்றாண்டிற்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்ட ஹோமியோபதி வைத்திய முறையை பெரும் முயற்சிக்குப்பின் சட்ட பூர்வமான உரிமையை நிலை நாட்டிக் கொண்டது. தற்பொழுது மெக்ஸிகோ நகரில் மட்டும் இரு சட்ட பூர்வமான ஹோமியோபதி கல்லூரிகள் உள்ளன! தேசிய ஹோமியோபதி கல்லூரி என்பது ஒன்று. அரசாங்க



ஹோமியோபதி கல்லூரி என்பது இரண்டாவது. இந்த இரு கல்லூரிகளின் கல்வி போதனையை ஆட்சியாளர்கள் ஏற்றுள்ளனர்!

மெக்ஸிகோவிலே மூன்று பிர்மாண்டமான ஹோமியோபதி ஆஸ்பத்திரிகள் உள்ளன. ஒன்று தேசிய ஹோமியோபதி ஆஸ்பத்திரி. இரண்டாவது டாக்டர் ஹைஜினோ பெர்ரிஸ் என்பவருடைய ஸானிட்டோரியத்துடன் கூடிய ஆஸ்பத்திரியும் அத்தோடு இலவச ஹோமியோபதி கல்லூரியும் இணைந்துள்ளது. மூன்றுவது ஹோமியோபதி முறையில் நோயாளிக்கு உள்ளுக்குமட்டும் மருந்துதரும் தனியார் உடமைக்குச் சொந்தமான Las Animas என்ற ஆஸ்பத்திரியுமாகும்.

மெக்ஸிகோ நகரில் மட்டும் 1500-க்கு அதிகமாக திறமையான பிரபல ஹோமியோபதி டாக்டர்கள் வைத்தியம் செய்து வருகின்றர். 100-க்கு மேற்பட்ட ஹோமியோபதி மருந்துகளை தயாரிக்கும் நவீன வசதியுடன் கூடிய மருந்து தயாரிப்பு தொழிற் கூடங்கள் உள்ளன; உலகப் பிரசித்தி பெற்ற மிக முக்கியமான ஹோமியோபதி மருந்துகளை விற்பனை செய்யும் மிகப் பெரிய ஐந்து ஹோமியோபதி மருந்துக் கடைகள் உள்ளன! வெளிநாட்டு மருந்துகளான போரிக் அண்டு டபால், லையூட்டிஸ், வில்லியம்ஸ் ஷ்வாப், ஹியூம் பைரீஸ் போன்ற ஹோமியோபதி மருந்துகளின் பிரதிநிதிகளும் உள்ளனர்! நாடு பூராவிலும் அநேக சிறு, சிறு ஹோமியோபதி மருந்துக்கடைகள் இருக்கின்றன!

ஹோமியோபதி பள்ளிக்கூடங்களுக்கான புரபஸர்களின் அக்கடாமிகள் இருக்கின்றன. ஹோமியோபதி சம்பந்தமான சகலவித விஷயங்களையும் மேற்பார்வையிட சர்க்காரின் சார்பில் சமூக சுகாதார செகரேட்டரியட் என்ற ஸ்தாபனமிருக்கின்றது. ஹோமியோபதி ரண சிகிட்சை நிபுணர்களுக்காகவும், ஹோமியோபதி கண் டாக்டர்களுக்காகவும், ஹோமியோபதி டாக்டர்களுக்காவும், ஹோமியோபதி வைத்திய விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்காகவும், மெட்டிரியா மெடிக்காவை ஆராய்ச்சிசெய்யும்

# 12-வது நேர்முக வகுப்பு

*வகுப்பு ஆரம்பமாகும் தேதி 7-5-1961
(சுமார் 15 நாட்கள் நடைபெறும்)

* சம்பளம்: பிரவேசக் கட்டணம் ரூ. 5/- | ரூ. 55/-
சம்பளம் ரூ. 50/-

* 1961 ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குள் சம்பளத்தைக் கட்ட வேண்டும்.

## தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்,"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

---

### தென் சென்னை
### பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்

மே மாதம் 14-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஷை சங்கத்தின் மாதாந்திர கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம் டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்கள் "உணவும் பத்தியமும்" என்பதைப் பற்றி பேசுவார்கள்.

எல்லோரும் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

டி. ஆர். வி. ராமன்,
காரியதரிசி.

அங்கத்தினர் கட்டணம்—

பிரவேச கட்டணம் ரூ. 1/-
சந்தா கட்டணம்
மாதா மாதம் ரூ. 1/-
6 மாதத்திற்கு ரூ. 5/-
1 வருடத்திற்கு ரூ. 10/-



ஆராய்ச்சியாளர்களுக்காகவும் முறையே தனித் தனியாக சங்கங்கள் தோன்றியுள்ளன! இத்துடனில்லாது நாடு பூராவிலுமுள்ள ஹோமியோபதி டாக்டர்களின் நடவடிக்கையை கவனித்து உதவவும், சட்ட பூர்வமாக சர்க்காரால் நியமிக்கபட்டுள்ள ஆஸ்பத்திரிகளில் வேலைசெய்யும் டாக்டர்களை மேற்பார்வையிடவும், வைத்திய முறையை கவனிக்கவும் இரண்டு கூட்டுறவு யூனியன்கள் உள்ளன!

மெக்ஸிகோவிலுள்ள ஹோமியோபதி பள்ளிக்கூடங்கள் தபால் பாடங்கள் மூலம் படிப்பதற்கு விருப்பமுள்ளவர்களுக்கு தபால் பாடங்கள் தருகின்றன! தற்பொழுது தற்காலிகமாக ஹோமியோபதி பள்ளிகூடங்களில் தரப்படும் கண் சம்பந்தமான பாட போதனைகளை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மிகப்பெரும் அளவில் ஹோமியோபதி டாக்டர்கள் நாடுபூராவும் தொழில் செய்து வருகின்றனர்! இவர்களுக்கான சங்கங்கள் மத்தியரீதியிலும், மாகாண ரீதியிலும், ஏரியாக்கள் ரீதியிலும் இயங்கி வருகின்றன.

கீழ்கண்ட மருந்துகளைப் பற்றி மெக்ஸிகோவிலேயுள்ள பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். ஆராய்ச்சி நிலையில் உள்ள மருந்துகளின் பெயர்களாவன:—

1. Tabardillo grass. 2. Tullidora. 3. Yumel! 4. Tobacco. 5. Antipyrin. 6. Penicillin. 7. Peyotee. (Medicinal Cactus plant of Mexico) 8. Expinosilla. 9. Cataplasm of Tabardillo. 10. Rajania. 11. Turpentine. 12. Adrenalin. 13. Artichoke.

75-க்கு மேற்பட்ட ஹோமியோபதி வைத்திய புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. லியோன் வான்னீர்

(Leon Vannier), ராயல்நாஷ்(Royal Nash), பியர்ஸ் (Pierce) போன்ற பிரசித்திபெற்ற பிரஞ்சு ஹோமியோபதி டாக்டர்களின் புஸ்தகங்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன! ஆர்கனுன், மெட்டிரியா மெடிக்கா, ஹோமியோபதியின் தத்துவங்கள், வைத்தியசித்தாந்தம், குழந்தை நோய்கள், பொதுவான நோய்களின் காரணம் தன்மைகளைப்பற்றிய சாஸ்திரசம்பந்தமான நூல், சர்மநோய், பார்மகோபியா போன்ற 75-க்கு மேற்பட்ட ஹோமியோபதி வைத்திய சாஸ்திர சம்பந்தப்பட்ட மூலாதாரமான புஸ்தகங்கள் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன!

ஹோமியோபதி வைத்தியத்திலே தலைசிறந்த நிபுணர்களுக்கும் புதிய கண்டுபிடிப்புகள் செய்தவர்களுக்கும், மெக்ஸிகோ நாட்டிலே மூன்றுவிதமான பரிசுகள் வழங்கப்படுகின்றன! அந்த பரிசுகளாவன 1. The Palms of Hahneman. 2. The Association Medal. 3. For Merit Medal of the Free School.

மருந்துகள் தயாரிக்கப்படும் ஹோமியோபதி பார்மஸிகளுக்கான நாலு மருந்து ஆய்வுக்கூடங்கள் (லேபரட்டரிகள்) இருக்கின்றன. இதுமட்டுமா? தனி நபர்களுக்கு சொந்தமான பத்து ஹோமியோபதி சானிட்டோரியங்களும், 800க்கு மேற்பட்ட வைத்திய ஆலோசனைக்கூடங்களும் இருக்கின்றன மெக்ஸிகோ நகரில் மட்டும்.

1929-ஆம் ஆண்டிலே, சர்வதேச ஹோமியோபதி டாக்டர்களின் மகாநாடும், 1935, 1950, 1956-ஆம் ஆண்டுகளிலே மூன்று அமரிக்க தேசிய ஹோமியோபதியர்களின் மகாநாடும், 1943, 1948, 1954 ஆகிய ஆண்டுகளில் மெக்ஸிகோ ராஜ்ய ஹோமியோபதி டாக்டர்கள் மகாநாடுகளும் நடந்திருக்கின்றன. ஜெர்மனியிலே பிறந்து, உலகெல்லாம் தவழ்ந்து, அலோபதி வைத்தியர்களிடத்திலே பெரும் போர் நடத்தி, இறுதியிலே உண்மை வெற்றி பெறும் என்ற தத்துவப்படி, சட்டபூர்வமான உரிமையை மெக்ஸிகோ நாட்டிலே பெற்றுள்ள ஹோமியோபதி வைத்திய விஞ்ஞானம் வையகம்பூராவும் வளரட்டும்! உலகமக்கள் உடல் நலம் பெற்று பொலிவுடன் மிளிற உலக ஹோமியோபதி டாக்டர்களே, மெக்ஸிகோவை பின்பற்றி டாக்டர் ஹானிமன் பாதையிலே உறுதியுடன் யாத்திரை செய்யுங்கள். இறுதிவெற்றி ஹோமியோபதிக்கே!



*தி ஹானிமானியன் ஜனவரி—மார்ச் 58*

*பாரீஸ்—பிரான்ஸ்.*

## வட ஆற்காடு பதிவுபெற்ற ஹோமியோபதியர்கள் சங்கம்

வட ஆற்காடு பதிவுபெற்ற ஹோமியோபதியர் சங்கத்தின் முதலாண்டு நிறைவு விழாவும், டாக்டர் ஹானிமன் அவர்கள் பிறந்த தின விழாவும் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று குடியாத்தத்தில் நடைபெறும்.

அச்சமயம் சென்னை தி ஹோமியோபதி ஹௌஸின் கவர்னிங் டைரெக்டர் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் விழாவைத் துவக்கிவைப்பார்கள்.

# சாதாரணமாய் உபயோகிக்கப் படாத சிலமருந்துகளின் மகத்துவங்கள்

**அப்ரோடெனம்.**—நல்ல உணவுகளை உண்டும் கால்கள் சிம்பிப்போகுதல்; வயிற்றுப் போக்கை அமுக்கியதால் ஏற்படும் வாத ரோகம்; சிறுவர்களின் விரை வீக்கமும், மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுவதும். இன்புளுயன்சாவுக்குப்பின் உள்ள பலவீனம்.

**ஆப்ஸிந்தியம்.**—காக்கை வலிப்புக்கு நல்ல மருந்து, வலிப்புக்குமுன் உடல் நடுக்கம்.

**ஆஸடிக் ஆஸிட்.**—இருதய பலவீனம், உடல் வீக்கம் வாயாலெடுப்புடன் கூடிய இரத்த சோகை.

**பென்ஸாயிக் ஆஸிட்.**—முகத்தில் சிகப்புத் தேமல், வாயில் புண்.

**லாக்டிக் ஆஸிட்.**—சோகை பிடித்தல், பெண்களுக்கும் கர்ப்ப ஸ்திரீகளுக்கும் காலையிலுண்டாகும் வாயாலெடுப்பு, குமட்டல். உண்டதும் நோய்த்தணிவு, மூத்திரம் அதிகமாக போகும் மது மேக ரோகம்.

**மூரியாடிக் ஆஸிட்.**—கடுமையான சுரங்களில் மூத்திரம் விடும்போதே மலம் வெளிவருதல்; மலத்தோடு கூட அண்டி தள்ளுதல், கீழ்த் தாடை தொங்குதல், வாயில் கரு நீலப் புண்கள், முதலிய அபாயக் குறிகள்.

**புளோரிக் ஆஸிட்.**—சொத்தைப் பல், தலைமயிர் உதிர்தல், பாதரஸம், ஸிபிலிஸ், இவைகளின் விளைவால் உண்டாகும் நோய்கள்; அசுத்த இரத்தக் குழாய்களில் முறுக்கம்.

**அம்ப்ரா க்ரிஸியா.**—காலையில் உடம்பெல்லாம் மரத்துப் போகுதல்; கை, விரல்கள் மரத்தல், வயதினாலோ வேலை ஆதிக்யத்தாலோ, அங்கங்தளர்ந்த வயதினர்; தனியாய் இருக்க விரும்புதல்; நாணிக் கோணுதல்.

**அம்மோனியம் முரியாடிகம்.**—தலையில் அரிப்பு, பொடுகு, மயிர் உதிர்தல்; கல்லீரல் நோயினால் இருமல்; இரத்தம் கொதிப்பது போல் தோன்றல்; தலை, மார்பு நோய்கள் காலையில் அதிகமாதல்; உச்சி வேளையில் அடிவயிறு, கால், கை நோய் அதிகரிக்கும்; மாலையில் சுரமும், உடம்பில் எறிச்சல், அரிப்பு கூடுதலாகும்.


# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்ப சிகிச்சை செய்வோரும், ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும், அதிக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விவரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

## ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

Reg. No. M 6555 April 15, 1961.


தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்

வெகுநாட்களாக எதிர்பார்த்த

## தாய்த்திரவங்கள்

## மெட்டீரியா மெடிகா

இரண்டாம் பதிப்பு

வெளிவந்து விட்டது

விலை ரூ. 1—50. : : அனுப்பும் செலவு ரூ. 0—75.

---

## ஹோமியோபதியின் கீதை

என்று பெயர் பெற்ற

டாக்டர் ஹானிமனின்

## "ஆர்கனு"னை

### டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

தமிழாக்கிப் புத்தக ரூபமாக வெளிவந்துவிட்டது.

ஆங்கிலத்திலேயே எளிதில் புரியாத இப்புத்தகம் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வேறு தமிழாக்கம் படித்துள்ளோரும் இதைப் படித்து நலம் பெறலாம்.

இதன் விலை ரூ. 3. அனுப்பும் செலவு தனி.

### தி ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

கிளை:
9, செம்புதாஸ் தெரு,
சென்னை—1.


Edited and Published by Dr. V. S. Subramaniam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1

---

673/2.61

நோயிலா வாழ்வே குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

மே 1961

38 காசுகள்

# எங்கள் சொந்தத் தயாரிப்பு மகவிற்காம் மருந்துகள்

* **கிட்டிமிக்ஸ்**

  குழந்தைகளுக்கென்றே தயார் செய்யப்பட்ட டானிக். வயிற்று வலி, அசீரணம், சுரம், வயிற்றுப்போக்கு முதலிய கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம்.

* **பயோலாக்ஸ்**

  சுகபேதி மருந்து.

* **ஹோலிஹோ**

  குழந்தைகளின் ஈரல், குலை கட்டிகளுக்கு.

* **ஸாண்டோஸின்**

  வயிற்றுப் பூச்சி, குடல் பூச்சிகளைக் கொல்வது மட்டுமின்றி பூச்சிகள் உற்பத்தியாகும் சரீர வாகையே மாற்றும்.

* **ஸில்டோனிஸ்**

  டான்சில் நோய்க்கு ஆபரேஷன் செய்வது மிகக் கெடுதல் என்று எல்லா டாக்டர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் வேறு ஒரு வைத்திய முறையிலும் இதற்கு மருந்து கிடையாது. நமது ஸில்டோனிஸ் சாப்பிட்டு வந்தால் ஆபரேஷனே தேவையாயிராது.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.


For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratary Only.

# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8    மே 1961    இதழ் 10


பொருள் அடக்கம்    பக்கம்


1. பதினைந்தாம் ஆண்டு .... 3
2. ஹானிமனுக்கு மணி மண்டபம் .... 5
3. சுவாசக் குழாய்களைத் தாக்கும் ஆஸ்துமாவும் ஹோமியோபதிச் சிகிச்சையும் .... 9
4. குடியாத்தத்தில் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் .... 17
5. கோடை காலத்தில் வரும் தேக அசௌக்யம் .... 22
6. செய்திகளும் அபிப்பிராயங்களும் .... 25
7. நெடுநாள் உயிர் வாழ்வதெப்படி? .... 30



## டீலர்கள் தேவை

ஒவ்வொரு நகரத்திலும் எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகளை விற்பனை செய்ய டீலர்களை நியமித்து வருகிறோம். டீலர்களுக்குத் தாராளமான கமிஷனும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும். ஒவ்வொரு மாதமும் ரூ. 200-க்குக் குறையாமல் மருந்துகளை விற்பனை செய்யக் கூடியவர்கள் மட்டும் முழு விவரங்களுக்குக் கீழுள்ளபடி விலாசமிட்டு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலயம்,"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
சென்னை-28.

டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் இயற்றிய
மூன்று புத்தகங்கள்

மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக்
**மெட்டீரியா மெடிக்கா**
* இணையற்றது * மிகச் சிறந்தது
1144 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம்
ஹோமியோபதியர்களுக்கு இன்றியமையாதது.
விலை ரூ. 20/-, அனுப்பும் செலவு ரூ. 2/-

ஹோமியோபதி வைத்தியத்துக்கு
மிக அவசியமான இரண்டாவது புத்தகம்
**நோய்களும் சிகிச்சையும்**
விலை ரூ. 5-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

ஆங்கில வைத்தியச் சொற்களுக்கு
தமிழறியாது நவிப்பவர்களுக்கு
* ஒன்றே ஒன்று * நன்றே நன்று
**மெடிகல் டிக்ஷனரி**
ஒன்றேதான் தமிழகத்திலேயே உள்ளது.
விலை ரூ. 6-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

**ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலையம்" கிளை :
77, ராமகிருஷ்ண மடம் ரோட், 9. செம்புதாஸ் தெரு.
சென்னை-28. சென்னை-1.

62360

# பதினைந்தாம் ஆண்டு

பிலவ வருடம் சித்திரை மாதப் பிறப்பன்று ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ், கவர்னிங் டைரக்டர், டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்களைக் கண்டு புத்தாண்டு வாழ்த்துகள் கூறச் சென்றிருந்தேன்.

ஹோமியோபதி தென்னாட்டில் வேரூன்றி வளம் பெற்று செழித்தோங்க உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த ஒரு சிலரில் டாக்டர் அவர்களும் ஒருவர் என்பது எல்லா ஹோமியோபதியர்களும் அறிந்த விஷயம்.

ஆயினும், ஹோமியோபதி கலைஞர் என்று ஒருவரைச் சுட்டிக் காட்ட வேண்டுமானால், எல்லோரும் ஏகமனதாக டாக்டர் அவர்களையே சொல்வார்கள் என்பதற்கு ஐயமில்லை.

சாந்த குணம், சிரித்த முகம், அடக்கமான சுபாவம், பிறர் வருத்தத்தை உணர்ந்து அனுதாபிக்கும் மனப்போக்கு, தான் எடுத்துக்கொண்ட காரியத்தை விடா முயற்சியுடன் நடத்திக் காட்டுதல், தமிழாக்கங்களை தெள்ளிய நடையில் யாவரும் உணரக்கூடிய வகையில் அமைத்தல் இவையெல்லாம் ஒரு கலைஞனின் குறிக்கோள்களெனில், டாக்டர் அவர்களின் குணநிசயங்கள் என்றும் கூறலாம்.

"புத்தாண்டு வாழ்த்துகள்" என்று நான் கூறியதும், டாக்டர் என்னை நிமிர்ந்து நோக்கி, புன்முறுவலுடன், "இன்று புத்தாண்டு ஆரம்பம் மாத்திரமல்ல. ஹோமியோபதி ஹௌஸ் தொடங்கி நேற்றுடன் பதினான்கு ஆண்டுகள் முடிவடைந்தன. இன்று பதினைந்தாம் ஆண்டு ஆரம்பம் இத்தனை நாட்களும் ஏதேனும் சிறு தொண்டுகள் ஹோமியோபதிக்குச் செய்ய என்னால் முடிந்ததென்றால், தங்களைப் போல் அபிமானிகள், மாணவ மாணவிகள், ஹோமியோபதி டாக்டர்கள், ஆகிய எல்லோருடைய அன்பையும், ஆசிகளையும், மதிப்பையும் பெற்றிருப்பதனால் தான் என்பதை நான் நன்கு அறிவேன்".

"இதே மாதிரியாக, இன்னும் பல வருடங்களுக்கு நான் தொண்டு புரிய ஊக்கமளிக்குமாறு எனக்கு ஆசி கூறுங்கள்" என்று கூறினார்.

—பேனா முனை.

## எங்கள் விசேஷ ஹோமியோபதி டானிக்குகள்

* **அல்பாவீனா :** அல்பால்பா, அவினா ஸடைவா மற்றும் உயிர் உப்புக்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பசியை வளர்த்து, உண்ணும் உணவை உடலில் சேர்த்து உரமூட்டும் டானிக்.

* **கல்கால் பாஸ் :** சிரணக் கோளாறுகளுக்கும் பல வீனத்துக்கும்.

* **கெடோஸான் :** நரம்புத்தளர்ச்சி, மன, உடல் உறுதியின்மை முதலியவைகளை நீக்கி, உடலுக்குத் தெம்பூட்டுகிறது.

* **நீல்வம் டானிக் :** கடுமையான நோய்களினாலும், அதிக உழைப்பினாலும், அளவுக்கு மிஞ்சிய சிற்றின்பத்தாலும் உண்டாகும் பலவீனத்திற்கும் மிகச் சிறந்த டானிக்.

* **பாஸ்பேடால் :** ஐந்துவித பாஸ்பேட்டுகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. நரம்புகளுக்கும் மூளைக்கும் மிகச் சிறந்தது.

* **பைடோன் :** 12 வித உயிர் உப்புகளும் சேர்ந்துத் தயார் செய்த டானிக்.

* **வைரோஜன் :** போட்டியும் அவசரமும் மிகுந்துள்ள இந்நாளில் மனிதனின் நரம்பு மண்டலம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. யௌவனத் திமிரினாலும் சிலர் நரம்புத் தளர்ச்சி அடைகின்றனர். இக்காரணங்களால் தூக்கமில்லாமையும் ஓயாத மனக்கவலையும் உண்டாகின்றன. இத்தகையவர்களுக்குப் புத்துயிரூட்டி வாழ்க்கையில் குதூகலமாய் ஈடுபட வைரோஜன் உதவுகிறது.

* **ஜெல்ஸாவீனா :** ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமுன் தன்னம்பிக்கை இழந்து உடம்பில் பரபரப்பும் நடுக்கமும் ஏற்படுகிறவர்களுக்கு இன்றியமையாத விசேஷ டானிக். மாணவர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், பிரசங்கிகள், பாடகர்கள், நடிகர்கள் உபயோகிக்கலாம்.

* **ஸார்பாரி :** இரத்த சுத்தி, இரத்த விருத்தி செய்யும் உன்னத டானிக்.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

" பால நிலையம் "
**77, ராமகிருஷ்ண மடம் ரோடு,**
சென்னை-28.

கிளை ;
9, செம்புதாஸ் தெரு,
சென்னை-1.


# ஹானிமனுக்கு மணி மண்டபம்

மக்களுக்கு ஏற்படும் நோய்கள் அனைத்தையும் விரைவிலும், வேதனை இல்லாமலும் முழுவதும் நீக்கி, மீண்டும் அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ வழி செய்வதே வைத்திய முறையின் முழு முதல் நோக்கம். இந்நோக்கம் நன்கு நிறைவேற வேண்டுமென்றால் வைத்திய முறை உண்மையை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட' கதை போல, பெரும்பாலான சமயங்களிலே நோய் தீராமல் போவதுடன் வேறு பல புதிய கொடிய நோய்கள் தோன்றவும் இடமாகும்.

நமது வைத்திய முறையின் தந்தை டாக்டர் ஹானிமன் வாழ்ந்த காலத்தில் வைத்திய முறை மிகவும் சீர் கேடான நிலையில் இருந்து வந்தது. மூடப் பழக்க வழக்கங்களுக்கும், வீண் கற்பனைகளுக்கும், தவறான ஊகங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும், அரை குறையான அனுபவங்களுக்கும் அது ஊற்றாய், உறைவிடமாய், விளங்கியது.

உடலிலுள்ள இரத்தம், பித்தம், கபம் முதலிய நீர்களின் அளவு அதிகரிப்பதாலேயே எல்லா நோய்களும் தோன்றுகின்றன என்ற மடத்தனமான கருத்து அக்கால வைத்தியர்களுக்கு இருந்தது. அளவுக்கதிகமாய் இருப்பதாகக் கருதப்படும் நீரை எவ்வழியினாலாவது உடலிலிருந்து பிரித்தெடுத்து வெளியேற்றிவிட்டால் நோய் நீங்கிவிடுமென்று நம்பினார்கள். இந் நம்பிக்கையின் விளைவாக அவர்கள் அந்நீர்களை உடலிலிருந்து வெளியேற்றப் பற்பல முரட்டுத்தனமான முறைகளைக் கையாண்டு வந்தனர். அவை ஒவ்வொன்றையும் விவரிக்க இங்கு இடமோ நேரமோ இல்லை.

வயிற்றுப் போக்கு, வாந்தி, வியர்வை ஆகியவைகளைத் தூண்டும் கடுமையான மருந்துகளை இரக்கம் என்பது துளிக் கூட இல்லாமல் அடிக்கடி கொடுத்தனர். தீப்பிடித்து எரியக் கூடிய பொருள்களை உடம்பின் மீது குவித்து வைத்துத் தீயை வைத்துத் தோலைச் சுட்டுப் பொசுக்கினர். பழுக்கக் காய்ந்த இரும்புத் துண்டுகளால் உடலில் சூடு இழுத்து அல்லது தோலைக் கொப்பளிக்க வைக்கும் விஷப் பொருள்களைத் தடவி ஆழமான குழிப்புண்களை ஏற்படுத்தினர். தோலைக் கிழித்

துக் காயம் செய்து அக்காயத்தினுள் பஞ்சுநூல் அல்லது பட்டு நூலைக் கற்றையாகத் திணித்துத் திணித்து எடுத்தனர். இரத்தக் குழாய்களை உடைத்துப் படிக்கணக்கில் இரத்தத்தை வெளியேற்றினர். அட்டைப்பூச்சிகளை உடம்பின் மேல் விட்டு இரத்தத்தை உறிஞ்சியெடுக்கச் செய்தனர். இம் மாதிரியான கொடூரமான முறைகள் வைத்தியர்களால் கண்டிப்பாகக் கையாளப்பட்டன. அம் முறைகளைக் கையாளாத வைத்தியர்களை மக்களுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று குற்றம் சாட்டிக் கடுமையாய்த் தண்டித்தனர்.

அக்காலத்தில் நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுக்கப்பட்ட விதத்தைப் பார்த்தோமானால் உண்மையிலேயே நாம் மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விடுவோம். பற்பல மருந்துச் சரக்குகளை ஒன்று சேர்த்துக் கலவை மருந்தாய்க் கொடுப்பதுதான் சரியானது என்று வைத்தியர்கள் கருதினர். சில சமயங்களில் ஒரு கலவையில் 40 அல்லது 50 மருந்துச் சரக்குகள் கூடச் சேர்க்கப்படுவது உண்டு. நானூறு மருந்துச் சரக்குகள் சேர்ந்த கலவை கூட இருந்ததாம். கலவையில் சேர்க்கப்பட்டுள்ள மருந்துச் சரக்குகள் ஒவ்வொன்றும் என்னென்ன நன்மை அல்லது தீமைகளைச் செய்யுமென்பது வைத்தியர்களுக்கே தெரியாத விஷயம். இவ்வாறு கண்மூடித்தனமாய்க் கலவை செய்து கொடுக்கப்பட்ட மருந்துகளாலும் மற்ற முரட்டு முறைகளாலும் அப்பாவிகளான பொது மக்களுக்கு எற்பட்ட துன்பங்களை எட்டில் எழுதித் தீர்க்க முடியாது. உடலின் வலிவும் வளப்பும் குன்றி நடைப்பிணங்களாய் மாறி விட்டவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

“உலகில் தருமம் நலிந்து அதருமம் மலியும் போதெல்லாம் அதருமத்தை அழித்துத் தருமத்தைத் தழைக்கச்செய்ய நான் தோன்றுகிறேன்" என்று இறைவன் அருள் வாக்களித்திருப்பதாக எல்லாச் சமய நூல்களிலும் காணப்படுகின்றது. வைத்திய முறையிலே புகுந்து மக்களை வாட்டி வதைத்து வந்த அதருமத்தை அழிப்பதற்காக இறைவனே அவதாரம் செய்தது போல நமது ஹானிமன் தோன்றினார். அக்கால



வைத்திய முறையை ஐயம் திரிபறக் கற்றுச் சிறந்த வைத்தியரென்று பெயரெடுத்த பிறகு அம்முறையிலுள்ள சீர்கேடுகளை உலகுக்கு எடுத்துக் காட்டினார். வன்மையான எதிர்ப்புகளையும் இன்னல்களையும் இலக்ஷியம் செய்யாமல் மக்களுக்கு உண்மையான தொண்டு செய்வதையே தமது முழு முதற் கடமையெனக் கொண்டு நோய்களை விரைவிலும் நிச்சயமாகவும் எவ்விதத் தீங்கையும் உண்டாக்காமலும் நீக்கக்கூடிய உண்மையான வழிகளை விவரிக்கும் ஹோமியோபதி வைத்திய முறையை வழங்கினார்.

டாக்டர் ஹானிமன் பிறந்த நாளாகிய ஏப்ரல் மாதம் பத்தாம் தேதி சில ஆண்டுகளாக நம் நாடெங்கும் கொண்டாடப் பட்டு வருகிறது. நம் நாட்டு மக்களுக்கு இயல்பான நற்பண்புகளே இதற்குக் காரணம். ஆயினும் தன்னலம் கருதாமல் மக்களின் நலத்துக்காகவே வாழ்ந்து பாடுபட்டு, ஈடிணையற்ற வெற்றியும் கண்ட இவ்வைத்திய மாமேதையின் பிறந்த நாளைக் கொண்டாடுவது மட்டும் போதாது. அவருடைய நினைவு மக்களின் மனத்திலிருந்து என்றென்றும் மறையாமல் இருக்க நினைவுச் சின்னமொன்றை நிறுவுவது ஹோமியோபதியர்களாகிய நமது கடமை.

சென்ற மாதம் 16-ம் தேதியன்று, குடியாத்தம் நகரில், வட ஆற்காடு மாவட்டப் பதிவு பெற்ற ஹோமியோபதியர்கள் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஹானிமன் பிறந்த தின விழாவில் நமது ஆசிரியர் டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்கள் இந்த அருமையான யோசனையை வெளியிட்டார்.

அமரகவி பாரதியாருக்கு எட்டயாபுரத்தில் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் போன்ற மணிமண்டபமொன்று நம் தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னையில் டாக்டர் ஹானிமனுக்கு நிர்மாணிக்கப்பட வேண்டும். தவிர, அதில் ஹோமியோபதியர்கள் ஒன்று கூடிப் பேசவும் விவாதிக்கவும் மீட்டிங் ஹால், ஹோமியோபதி வைத்திய விஷயமாய் வெளியாகியுள்ள எல்லாப் புத்தகங்களையும் கொண்டுள்ள நூல் நிலையம், பொதுமக்களுக்கு இலவசமாய்ச் சிகிச்சை செய்ய ஆசுபத்திரி, வெளியூர்களிலிருந்து சென்னை வந்து இரண்டொரு நாட்கள் தங்கவேண்டியுள்ள ஹோமியோபதியர்களுக்கு வசதியான

சில அறைகள், ஆகிய இவைகளை மட்டுமாவது ஏற்படுத்தினுல் ஹோமியோபதியர்களிடையே ஒற்றுமை ஓங்க வழியுண்டாவதுடன் பொதுமக்களுக்கு ஹோமியோபதியின் மீதும் ஹோமியோபதிர்களின் மீதும் மதிப்பும் மரியாதையும் உயரும். ஹோமியோபதியர்களிடையே ஒற்றுமை இருக்கிறது, சமயம் வந்தால் அவர்கள் ஒன்று சேர்ந்து செயல்படுவர் என்பதை அரசியலாருக்கும் மற்ற முறை வைத்தியர்களுக்கும் வெளிப்படுத்த இம்மணிமண்டபம் பெரிதும் துணை செய்யுமென்பதில் சந்தேகம் இல்லை.

மேலே விவரித்துள்ள திட்டம் முழுவதும் நிறைவேற ஏராளமான பொருள் வேண்டுமென்பதில் ஐயமில்லை. அநாவது குறைந்தது 2 அல்லது 3 இலட்ச ரூபாய்கள் தேவைப்படும். ஆயினும் அவ்வளவு தொகையும் கிடைத்த பிறகுதான் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று காத்திருக்க வேண்டியதில்லை. மனம் இருந்தால் மார்க்கமுண்டல்லவா! ஹோமியோபதியர்கள் ஒவ்வொருவரும் முழு மனதுடன் இடைவிடாமல் முயற்சி செய்தால் அவ்வப்போது கிடைக்கும் தொகைகளைக் கொண்டு முதலில் நிலம் வாங்கலாம். படிப்படியாக கட்டிடங்களையும் ஒவ்வொன்றாய்க் கட்டலாம். நிலத்துக்கு மட்டும் ரூ. 15,000-ம், மீட்டிங் ஹாலுக்கு ரூ. 25,000-ம் உத்தேசமாக ஆகலாம்.

உருப்படியான, உபயோகமான இப்பணியை ஏற்று நடத்த சென்னை மாநிலப் பதிவுபெற்ற ஹோமியோபதியர்களின் சங்கக் கூட்டணிக்கு எவ்வளவு தூரம் வல்லமை இருக்கிறதென்பது நமக்குத் தெரியாது. ஆயினும் ஹோமியோபதியில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஹோமியோபதி கல்வி ஸ்தாபனங்கள், மருந்து தயாரிப்பாளர்கள், டாக்டர்கள், பொதுமக்கள்—ஒன்றுபட்டு இப்பொதுப்பணியில் ஊக்கத்துடன் உழைத்தால் ஹோமியோபதிக்கும் ஹோமியோபதியர்களுக்கும் புத்துணர்வை ஊட்டியதாக ஆகும். தற்காலச் சூழ்நிலையில் ஹோமியோபதியர்கள் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டிய மிகப்பெரும் பணி ஹானிமனுக்கு நினைவுச்சின்னமாக மணி மண்டபமொன்றை நிர்மாணிப்பதே என்று எங்களுக்குத் தோன்றுகிறது.

# சுவாசக் குழாய்களைத் தாக்கும் ஆஸ்துமாவும் ஹோமியோபதிச் சிகிச்சையும்

( Dr. P. சங்கரன், பம்பாய். )

நான் இங்கு எடுத்துக் கொள்ளும் விஷயம் சுவாசக் குழாய்களைத் தாக்கும் ஆஸ்துமா (காசம்) ஆகும். கௌரவ வைத்தியராய் நான் பணியாற்றிவரும் பம்பாய் கவர்மெண்ட் ஹோமியோபதிக் ஆஸ்பத்திரியில் கிடைத்த அனுபவங்களை ஆதாரமாய் வைத்தே இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஏறக்குறைய 600 கேசுகளைக் கவனித்திருக்கிறேன். அவைகளிலிருந்து கிடைத்த அனுபவங்களைச் சுருக்கமாய்க் கூறுகிறேன்.

இந்நோயின் மூலகாரணம், குறிகள், நிர்ணயம், முடிவு ஆகியவை எல்லோருக்கும் தெரிந்தவை. எல்லா வைத்திய நூல்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆதலால் நோய் ஒவ்வொரு தடவையும் மும்முரமாய்த் தோன்றும்போது ஹோமியோபதியில் எவ்விதம் சிகிச்சை செய்யவேண்டுமென்பதை மட்டுமே சொல்கிறேன். இத்தகைய கேசுகளில் எவ்வாறு சிகிச்சைசெய்வது என்று சில ஹோமியோபதியர்களுக்கு மலைப்புத் தட்டுகிறது.

இந்த ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகளில் சுவாசக் குழாய்களைத் தாக்கும் ஆஸ்துமா உடையவர்களே மிக அதிகமாய் இருக்கின்றனர். இந்நோய்க்கு மற்ற வைத்தியமுறைகளில் செய்யப்படும் சிகிச்சைகளால் அதிக நன்மை ஏற்படாமல் இருப்பதே இதற்குக் காரணமென்று தோன்றுகிறது. அலோபதியில் முற்காலத்தில் உபயோகிக்கப்பட்ட அட்ரினலின், தற்காலம் உபயோகிக்கப்பட்டுவரும் கோர்டிஸோன் முதலிய மருந்துகளால் நோயின் வேகத்தைத் தணிக்கவே முடிகிறது; மீண்டும் நோய் தோன்றுமல் இருக்கச் செய்யவோ, குணம்செய்யவோ அம்மருந்துகளுக்கு வல்லமை கிடையாது. ஆதலால் அம்மருந்துகளைப் பலமுறை பரீட்சித்துப்

பார்த்து பயன் இல்லாததைக்கண்டு மக்கள் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்துசேருகிறார்களென்று தெரிகிறது. பொதுவாகச் சொல்லும்போது இந்நோய்க்கு ஹோமியோபதி முறைப்படிச் சிகிச்சை செய்வதில் திருப்திகரமான நன்மை ஏற்படுகிறது என்பதை அழுத்தமாய்க் குறிப்பிட விரும்புகிறேன். நோய் முன்போல் அடிக்கடி வருவது கிடையாது. அதன் கொடுமை குறைகிறது; தன்நோய் படிந்துவருகிறது என்ற நிம்மதியும் உணர்ச்சியும் நோயாளிக்கு ஏற்படுகிறது. ஒரே நாளில் அடுத்தடுத்துப் பல முறைகள் தாக்கும் குணமுள்ள ஆஸ்துமாவில் கூட ஹோமியோபதிச் சிகிச்சையினால் மிகுந்த நன்மை உண்டாகியிருக்கிறது. பெரும்பாலும் உபயோகமான மருந்துகளைப்பற்றி இப்பொழுது கூறுகிறேன்.

## ஆர்ஸெனிகம் ஆல்பம்

நூற்றுக்கு 50 அல்லது 60 கேசுகளில் இம்மருந்து உபயோகப்பட்டிருக்கிறது. குளிரில் அடிபடுவதாலும், குளிர்ந்த பானங்கள், ஐஸ்-க்ரீம், பழங்கள், தயிர், மோர் முதலியவைகளை உட்கொண்டதாலும், தூசிதும்பு, புகை, அதிக வாசனை அல்லது நாற்றமுள்ள காற்று உள்ள இடங்களில் நின்றதனாலும் நோயின் தாக்குதல் தோன்றுவது சகஜம். நள்ளிரவில் அல்லது நள்ளிரவு கழிந்த சிறிதுநேரத்துக்குள்ளேயும் தாக்குதல் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்க குறி. கடுமையான மூச்சுத்திணறல், கீழே படுக்கமுடியாமை, சூடான ஒத்தடங்களாலும் பானங்களாலும் சிறிது சௌகரியம் ஏற்படுதல் ஆகிய குறிகளும் காணப்படும்.

**ஆர்ஸெனிக்கை** 30 வீரியத்தில் நாளொன்றுக்கு 3 அல்லது 4 வேளைகளாக நோயின் தாக்குதல் முற்றிலும் நீங்கும் வரை கொடுத்திருக்கிறோம். இந்த வீரியம் போதுமானதாக இல்லாவிட்டால் 200, 1 M அல்லது 10 M வீரியம் வரை சென்று தேவைப்படும் போதெல்லாம் மருந்தை மீண்டும் மீண்டும் கொடுப்போம். இந்நோயாளிகளுக்கு இருமல் மிக அதிகமாய் ஏற்படும். இருமலுக்குப்பின் அதிகச்சிரமத்துடன் நீர்போன்ற சிறிதளவு கபம் வெளிப்படும். பிறகு சிறிது



நேரத்துக்கு இருமல் இருக்காது. நிறையக் காற்றுவேண்டுமென்றும் சில சமயங்களில் விசிறவேண்டுமென்றும் நோயாளிகள் மிகுதியாய் விரும்புவார்கள். நோயின் தாக்குதல் உள்ளபோது உடம்பில் சூடான உணர்ச்சியும் வியர்வைப் பெருக்கும் ஏற்படுவதே இதற்கு காரணம்.

**ஆர்ஸெனிகம் ஆல்பம்** ஏற்ற மருந்தாகக் காணப்படும் சில கேசுகளில் சூட்டினால் நோய் அதிகமாகுமானால் **ஆர்ஸெனிகம் ஐயோட்** உபயோகப்படுகிறது. ராயல் லண்டன் ஹோமியோபதி ஆஸ்பத்திரியில் இருந்தபோது, அங்கே ஆர்ஸெனிகம் ஆல்பத்தை விட ஆர்ஸெனிகம் ஐயோடத்தையே அதிகமாய் உபயோகிப்பதைக் கவனித்தேன்.

நோயின் தாக்குதல் தோன்றும் சமயங்களில் அதன் கடுமையைக் குறைத்து உடனடியான சௌகரியத்தைத் தருவதில் ஆர்ஸெனிகம் ஆல்பம் நிகரற்று விளங்குகிறது. ஆயினும் நோயைக் குணம் செய்ய அதற்குச்சக்தி கிடையாதென்று தோன்றுகிறது. **டாக்டர் கெண்ட்** இவ்விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஆஸ்துமா ஸைகோஸிஸ் தோஷம் சம்பந்தப்பட்ட நோய்; **ஆர்ஸெனிகம் ஆல்பத்துக்கு** ஸைகோஸிஸ் தோஷத்தை அடக்கும் வல்லமை கிடையாது; அதனால் அம்மருந்து ஆஸ்துமாவைக் குணம் செய்யாது" என்று அவர் கூறுகிறார். அத்துடன் ஆஸ்துமாக் கேசுகளைக் குணம் செய்ய **நேட்ரம் ஸல்ஃப்யுரிகம்** என்னும் மருந்தைச் சில சமயம் கொடுக்கவேண்டிவருமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஸ்பாஞ்சியா

அடுத்தபடியாக இம்மருந்தும் அதிக உபயோகமுள்ளது என்று அறிந்திருக்கிறோம். குளிர் உள்ள பருவநிலைகளில் முக்கியமாகப் பயன்படுகிறது இது. நள்ளிரவுக்கு முன்னதாக அல்லது விடியற்காலையில் அல்லது இவ்விரு நேரங்களிலும், நோய் கடுமையாக இருக்கும். தூங்குவதற்கு முன்பும் காலையில் தூங்கியெழுந்த பிறகும் நோய் அதிகமாவதை.

எங்கள் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆனால் ஹோமியோபதி நூல்களில் இவ்விஷயம் காணப்படுவதில்லை. ஸ்பாஞ்சியாக் கேசுகளில் கபம் இல்லாத இருமலே பொதுவாகக் காணப்படும். பேசுதல், சிரித்தல், பாடுதல் முதலிய காரணங்களால் இருமல் உண்டாகும். ஆழ்ந்து உள்மூச்சு இழுத்தால் கூட இருமல் தோன்றும்.

ஸ்பாஞ்சியாவுக்கும் ஆர்ஸெனிகம் ஆல்பத்துக்கும் இடையேயுள்ள வேற்றுமைகள் வருமாறு:—

ஸ்பாஞ்சியாவில் இருமும்போது வலி ஏற்படும்; கபம் இருக்காது. ஆர்ஸெனிகம் ஆல்பத்தில் அவ்விதம் இல்லை. இரண்டாவதாக, ஸ்பாஞ்சியாவில் இருமலும் ஆர்ஸெனிகத்தில் மூச்சுத்திணறலும் மேலோங்கிக் காணப்படும். ஸ்பாஞ்சியாவில் இருமும்போது ஏற்படும் ஓசைபெரும்பாலும் குரைப்பதுபோலவும், வாளினால் மரத்தை அறுப்பது போலவும் அல்லது காக்கை கரைவது போலவும் இருக்கும். மேலும் ஸ்பாஞ்சியாவில் நள்ளிரவிலும் அதற்குப்பிறகும் நோய் அதிகரிப்பதில்லை. இரண்டுமருந்துகளிலும் சூடான ஒத்தடங்கள், பானங்கள் ஆகியவைகளால் சௌகரியம் தோன்றுகிற குறி காணப்படுகிறது. சில சமயங்களில் ஸ்பாஞ்சியா தேவைப்படுகிற இருமல் அல்லது மூச்சுத்திணறல் உணவு உட்கொள்வதினால் சௌகரியமடைவது உண்டு.

விடியற்காலை இரண்டுமணிக்குப் பிறகு நோயின் தாக்குதல் ஆரம்பமாகும் தன்மை காணப்பட்டால் **காலி ஆர்ஸ், காலி கார்ப், காலிபைக்** ஆகிய மருந்துகளை நாம் கவனிக்க வேண்டியிருக்கும்.

### காலி ஆர்ஸெனிகம்

ஆர்ஸெனிகம் ஆல்பம் உபயோகமாகுமென்று தோன்றிக் கொடுக்கப்பட்டபோது நன்மை விளையாத கேசுகளில் காலி ஆர்ஸெனிகம் நல்ல பயனை அளிக்கிறது. காலி ஆர்ஸெனிகத்தில் இருமும்போது வலி உண்டாவதாகத் தெரிகிறது.



ஆர்ஸெனிகம் ஆல்பத்தில் வலி கிடையாது. **டாக்டர் போரிக்** தன்னுடைய மெடீரியா மெடிகா நூலில் காலி ஆர்ஸெனிகம் ஆஸ்துமாவுக்கு உபயோகமாகுமென்று குறிப்பிடாதது துரதிர்ஷ்டமேயாயினும் அது ஆஸ்துமாவுக்கு மிகவும் உபயோகமாய் இருப்பதை நாம் பார்த்துவிட்டோம். **டாக்டர் க்ளார்க்** கூட தன்னுடைய டிக்ஷனரியில் இவ்விஷயத்தைப் பற்றி அழுத்தமாய் எதுவும் கூறவில்லை.

### காலி கார்பானிகம்

இம்மருந்தில் விடியற்காலை 3 மணிக்கு மேல் 4 மணிக்குள் நோய்க்குறிகள் கூடுதலாகும்; காலி ஆர்ஸெனிகத்திலோ விடியற்காலை 2 மணிக்கு மேல் 3 மணிக்குள். இம்மருந்தின் இருமலில் வலியும் மூச்சுத்திணறலும் காணப்படும். இம்மருந்தின் விசேஷக்குறிகளில் ஒன்றாகிய நோயாளி முன்பக்கமாய்ச் சாய்ந்து உட்காரும் குறி நிச்சயமாய்க் காணப்படும். காலி ஆர்ஸெனிகத்திலும் ஆர்ஸெனிகம் ஆல்பத்திலும் உள்ளதுபோல கபம் அவ்வளவு அதிகமாய் இருக்காதென்றாலும் கட்டியாகவும் சில சமயங்களில் காலி பைக்ரமிகத்தில் இருப்பதைப்போல ஒட்டும் குணமுள்ளதாகவும் காணப்படும். நோயாளிக்கு உடலில் குளிரும் உணர்ச்சி சிறிது அதிகமாகவே இருக்கும்.

### காலி பைக்ரமிகம்

இம்மருந்தின் நோயாளிக்கு விடியற்காலையில் சுமார் 3 மணி அளவுக்கு நோய்க்குறிகள் கடுமையாகும். கபம் மிக்க கெட்டியாய் அனேகமாக ஒட்டும் குணமுள்ளதாய் மிகுந்த சிரமத்தின் பிறகே வெளிவரும். சுவாசகோசங்களில் சீழ்ப்பிடிக்கும் நிலைமைகளில் காணப்படுவதைப் போல கபம் நாற்றமாகவும் சீழ்ப்போலவும் அல்லது இரத்தம் தோய்ந்தும் இருக்கலாம்.

மூச்சுத்திணறலுடன் கூடிய இக்கேசுகளில் பெரும்பாலானவற்றில், மார்பின் மீது வென்னீர்ப்பையை வைத்

துக்கொண்டிருந்தால் நோயாளிகளுக்குச் சௌகரியம் தோன்றுவதை நாம் கண்டிருக்கிறோம். வென்னீர்ப்பையை மார்பின் மேல் வைத்துக்கொண்டால் அல்லது நெருப்பின் அருகில் இருந்தால் மூச்சுத்திணறல் அதிகமாகிறது என்று கூறிய நோயாளிகள் மிகச்சிலரே. அவர்களுக்குப் பல்ஸடில்லாவினால் சௌகரியம் ஏற்பட்டதைக் கண்டோம்.

### கார்போ வெஜிடபிலிஸ்

கை கால்கள் பனிக்கட்டிபோல் சில்லென்று ஆகும் குறியுள்ள மிகச் சில கேசுகளுக்கே கார்போ வெஜிடபிலிஸ் தேவைப்பட்டது. ஆனால், திடீர்வகையைச் சேர்ந்த தொற்றுநோய்க்குப் பிறகும், சுவாசகோசங்களில் சிறிதளவு சளியை மிச்சம் வைத்துவிட்டுப் போகும் சுவாசகோசநோய்களுக்குப் பிறகும் ஆஸ்துமா தோன்றினால், அச்சமயங்களில் நோயின் கடுமையைக்குறைக்கவும் குணம் ஏற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் இம்மருந்து அதிகப்பயனுள்ளதாய் விளங்குகிறது.

### மெடோரினம்

இம்மருந்தில் இரு முக்கிய குறிகள் இருக்கின்றன. கடலிலும் அதன் அருகிலும் இருக்கும்போது நோயாளிக்குச் சௌகரியமாய் இருப்பது முதலாவது. இரண்டாவது, முழங்கால்களை மண்டியிட்டு இரு கைகளையும் மடித்துத் தலைப்பக்கமாய்வைத்து மார்பைத் தரையில் படும்படிச் செய்தால் நோயாளிக்குச் சௌகரியம் தோன்றும்.

நாசித்தும்புகளால் உண்டாகும் கடுமையான ஆஸ்துமாவில் நேட்ரம் ஆர்ஸெனிகமும், போதோஸ் ஃபீடிடாவும் உபயோகமாகின்றன.

### இபிகாக்குனு

மிக உபயோகமுள்ள மருந்து இது. நூலாசிரியர்கள் பலரும் இதைப் பலமாய்ச் சிபாரிசு செய்கின்றனர். ஆயினும்



எக்காரணத்தாலோ இம்மருந்து தேவைப்படும் கேசுகள் மிகச்சிலவே வந்தன. நீங்காத குமட்டலுடன் கூடிய கேசுகள் அதிகம் வராததால் இம்மருந்தின் நினைவே எங்களுக்கு வரவில்லை.

### நக்ஸ் வாமிகா, ப்ரியோனியா.

எங்களிடம் வந்த விசித்திரமான இரண்டு கேசுகளைக் குறிக்கத்தான் வேண்டும். ஒன்று **நக்ஸ் வாமிகா** வினாலும் மற்றொன்று **ப்ரியோனியா** வினாலும் குணமடைந்தது. நக்ஸ் வாமிகா நோயாளிக்குக் கோபம் வந்தவுடன் நோய் தோன்றும். ப்ரியோனியா நோயாளிக்கு இரண்டு மூன்றுவேளை மருந்தே போதுமானதாக இருந்தது. நோய் மறைந்து இப்பொழுது நான்கு வருஷங்கள் கழிந்துவிட்டன. நோயாளி சுகமாகவே இருந்துவருகிறார்.

விசேஷமான குறிகள் காணப்பட்ட பல கேசுகளில் வேறுமருந்துகள் உபயோகமாய் வேலை செய்துள்ளனவாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் 80 சதவிகிதக் கேசுகளில் பயனளித்திருக்கின்றன. கடுமையான மூச்சுத் திணறல், உடம்பு நீலமாய் நிறம் மாறுதல் ஆகியவை காணப்பட்டபோது ஏற்றமருந்துடன் பிராணவாயுச் சிகிச்சையும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் நோயாளிக்குச் சௌகரியம் ஏற்படுகிறது.

பம்பாய் கவர்மெண்டு ஹோமியோபதிக் ஆஸ்பத்திரியில் கிடைத்த அனுபவங்களையே இங்கு எழுதியுள்ளேன். எல்லா இடங்களிலும் இத்தகைய அனுபவமே கிடைக்குமென்று சொல்லமுடியாது.

நோய் கடுமையாய்த் தாக்கும்போது கையாளப்படக் கூடிய சிகிச்சையை மட்டுமே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்நிலைமையில், இருக்கக்கூடிய குறிகளை அனுசரித்தே சிகிச்சை அளிக்கப்படவேண்டும். நோயின் கடுமை குறைந்தவுடன் நோயாளியின் முழு வரலாறு, மனக்குறிகள், மற்றுமுள்ள

பொதுக்குறிகள் எல்லாவற்றையும் ஊன்றிக்கவனிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் நோயைக் குணம் செய்யக்கூடிய பற்பல மருந்துகளை நாம் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக, அம்மைப்பால் குத்திய பிறகு தோன்றிய ஆஸ்துமாவுக்குத் தூஜா. சருமநோய்கள் உள்ள முக்கிய வரலாறு தெரிய வந்தால் ஸல்ஃபர், சின்னம்மை, கக்குவாய் இருமல் ஆகிய நோய்கள் காரணமாய் இருந்தால் கார்போ வெஜி, பெற்றோருக்கு க்ஷய ரோகம் இருந்தால் ட்யுபர்குலினம் முதலிய பல மருந்துகள் சந்தர்ப்பத்துக்குத்தக்கபடி உபயோகமாகலாம்.

**ஆதாரம்:** ஜர்னல் ஆஃப் ஹோமியோபதிக் மெடிஸின்.

---

தென் சென்னை

**பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்**

"பால நிலையம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதருஸ்-28.**

ஜுன் மாதம் 4-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு டை சங்கத்தின் மாதாந்திர கூட்டம் நடைபெறும்.

எல்லோரும் தவராமல் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

டி. ஆர். வி. ராமன்,
காரியதரிசி.

**அங்கத்தினர் கட்டணம்—**

பிரவேச கட்டணம் ரூ. 1/-
சந்தா கட்டணம்
மாதா மாதம் ரூ. 1/-
6 மாதத்திற்கு ரூ. 5/-
1 வருடத்திற்கு ரூ. 10/-

---

# குடியாத்தத்தில் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

"ஒற்றுமையே ஹோமியோபதியர்களின் பிற்கால வாழ்விற்கு நல்லதொரு பாதையை அமைக்கும்"
—டாக்டர் வி. எஸ். எஸ்.

"பணி செய்வதே டாக்டர்களின் கடமை"
—குடியாத்தம் முனிஸிபல் சேர்மன்.

(நமது நிருபர்.)

—குடியாத்தம், 16.

இன்று, இங்கு வட ஆற்காடு மாவட்ட பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி வைத்தியத் தொழில் புரிவோர் சங்கத்தின் வருடாந்திரக் கூட்டமும், டாக்டர் ஹானிமனின் 206-வது பிறந்த தின விழாவும் மாலை 4 மணிக்கு நடந்தது. அச்சமயம் குடியாத்தம் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ எம். வி. ஸ்வாமிநாத முதலியார் தலைமை வகித்தார்.

ஹோமியோபதி ஹௌஸ், கவர்னிங் டைரக்டர், டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் டாக்டர் ஹானிமனின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் "டாக்டர் ஹானிமன் அவர்கள் இவ்வைத்தியத்தைக் கண்டு பிடித்தார் என்பதற்காக மட்டும் நாம் அவரைப் புகழ்ந்து, பாமாலை குட்டி பிறந்த நாளைக் கொண்டாடவில்லை. அவர் சொன்ன வழி முறைகளை அனுசரித்து நடக்க வேண்டும் என்பதற்காகவும், அதன்படி ஒற்றுமையுடன் செயல்பட வழி முறைகளை வகுத்துக் கொள்வதற்காகவும் வருடாவருடம் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். இவ்வைத்தியத்தைக் கண்டு பிடித்தவர் ஹானிமன் ஒருவர் தான் என்று சொல்வதைப் போல் மற்ற வைத்திய முறைகளுக்கு குறிப்பிட்ட ஒரு நபரைச் சொல்ல முடியவில்லை. நமது வைத்தியத்தில் நமக்கு ஆர்வமும், இன்னும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையும் இருந்தால் தான் நல்ல முறையில் நல்லதொரு பெயருடன் தொழில் புரியலாம்; பொதுஜனங்களுடன் நமது தொடர்பு நிரம்ப இருக்கவேண்டும். ஒற்றுமையே

ஹோமியோபதியர்களின் பிற்கால வாழ்விற்கு நல்லதொரு பாதையை அமைக்கும்" என்று சொன்னார். மேலும் பேசுகையில், தமிழ் நாட்டு ஹோமியோபதியர்கள் டாக்டர் ஹானிமனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை, தமிழ் நாட்டின் இதயம் போன்ற சென்னை நகரத்தில் ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்காக அவரவர்கள் முயற்சி எடுத்து விரைவில் நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தலைமை வகித்த முனிசிபல் சேர்மன் ஸ்ரீ எம். ஸ்வாமிநாத முதலியார் அவர்கள் பேசுகையில், தொழில் புரியும் ஹோமியோபதியர்கள் பொது ஜனங்களுடன் தொடர்பை அதிகப்படுத்த வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் மாவட்டத்தின் ஒவ்வொரு தாலுக்காவிலே ஹோமியோபதியர்கள் ஒன்று கூடி அவரவர்கள் சிகிச்சை செய்த, சிகிச்சை செய்து கொண்டிருக்கும், வியாதியஸ்தர்களின் தன்மையைப் பற்றிப் பேசி, கலந்தாலோசித்து ஒற்றுமையுடன் பொது ஜனங்களுக்கு இவ்வைத்திய சிகிச்சை செய்யப் பாடுபட வேண்டும் என்றும், பணி செய்வதே டாக்டர்களின் கடமையாதலால் இதை மனதிற் கொண்டு ஹோமியோபதி டாக்டர்கள் உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் தலைவர் டாக்டர் டி. ஜி. ராஜன் நன்றி கூற, கூட்டம் இனிது முடிவடைந்தது.

பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சங்கத்தின் வருடாந்திரக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்திற்கு டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் தலைமை வகித்தார். சென்ற ஆண்டு நடவடிக்கைகளை காரியதரிசி டாக்டர் எம். ராமலிங்கம் வாசித்தார்.

இம்மாவட்டத்தில் இரண்டு சங்கங்கள் இதுகாலும் செயல்பட்டு வந்தன. ஒன்று "வட ஆற்காடு மாவட்ட பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்". மற்றொன்று, "வட ஆற்காடு மாவட்ட பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியத் தொழில் புரிவோர் சங்கம்." டாக்டர்கள் சங்கத்தின் அங்கத்



தினர்கள் ஹோமியோபதி வைத்தியத் தொழில் புரிவோர் சங்கத்துடன் அவர்கள் சங்கத்தை இணைக்கத்தனியாகக் கூடிக் கலந்தாலோசித்து, மாலை 2 மணிக்கு டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் ஒன்றுகூடி ஹோமியோபதி தொழில் புரிவோர் சங்கத்துடன் இணைந்து விடுவதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்கள். டாக்டர்கள் சங்கத்தை ஹோமியோபதி வைத்தியத் தொழில் புரிவோர் சங்கத்துடன் இணைக்கவேண்டிய அவசியத்தை தலைமை வகித்த டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் எடுத்துச் சொல்கையில் "ஹோமியோபதியர்களின் ஒற்றுமையை வலியுறுத்தினார். தற்போது அரசாங்கம் செய்யவிருக்கும் சட்டத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஒற்றுமையாக இருக்கப் பாடுபட வேண்டும் என்றும் சொன்னார். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

பிறகு ஹோமியோபதி வைத்தியத் தொழில் புரிவோர் சங்கத்திற்கு (இரண்டு சங்கங்களும் இணைக்கப்பட்டது) 1961—62-ம் வருடத்திற்கு கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1 | டாக்டர் | டி. ஜி. ராஜன், குடியாத்தம் | தலைவர். |
| 2 | ,, | ஜி. கே. எஸ். சிவம், ஆம்பூர் | உப தலைவர்கள். |
| 3 | ,, | எல். எம். ஜோஸப், காட்பாடி | |
| 4 | ,, | ஏ. எம். ராமலிங்கம், குடியாத்தம் | செயலாளர். |
| 5 | ,, | சி. ஏ. நடராஜன், குடியாத்தம், | உப செயலாளர். |
| 6 | ,, | டி. முத்து, அரக்கோணம் | பொக்கிஷதாரர். |

பிறகு, 13 அங்கத்தினர்கள் செயற்குழு கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்,

மாலை 4-மணிக்கு நடந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின.

சென்ற இரண்டு ஆண்டுகளாக, இந்த ஜில்லாவில் இரண்டு சங்கங்களாக இருந்து, இரு சங்கத்தாரும் தாராள உள்ளத்துடன் ஒன்றுசேர மனமுவந்து வந்தமைக்கும், இந்த ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்திக் கொடுத்தமைக்கும் இக்கூட்டம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நகரசபை மூலமாக ஒரு இலவச ஹோமியோபதி வைத்தியசாலையை, ஏற்படுத்தி ஹோமியோபதியை ஆதரிக்குமாறு, இந்த ஜில்லா சங்கத்தின் சார்பாக சர்க்காரையும் நகரசபையையும் கேட்டுக் கொள்கிறோம்.

ரூரல் டிஸ்பென்ஸரிகளில் ஹோமியோபதி டாக்டர்களை நியமிக்க வேண்டும் என்று இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

தற்போது ஹோமியோபதி வைத்தியத் தொழில் நடத்திக் கொண்டு வருபவர்களை சர்க்கார் அங்கீகரித்துக் கொள்ள வேணுமாய் இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

---

## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகள்.
* ஸினரேரியா மாரிடிமா கண் துளி.
* அல்பால்பா டானிக்.
* டயகார்டு இருதய டானிக் ஆகியவைகள்

எங்களிடம் கிடைக்கும் :

### தி ஹோமியோபதி ஹௌஸ்

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

# சாதாரணமாக உபயோகிக்கப்படாத சில மருந்துகளின் மகத்துவங்கள்.

**ஆர்ஸனிகம் ஐயோடேடம்:-** க்ஷயரோகத்தில் மாலை சுரம் இருப்பினும் மிகவும் உதவுகிறது; களைப்பு, சோகை, வயிற்றுப்போக்கு, கெட்டியான, மஞ்சள் நிற கபம், டிப்தீரியா, டான்ஸில் வேக்காடு, நிமோனியா, இரவில் அதிக வியர்வை.

**ஆரம் ட்ரிபில்லம்:-** திடீர் விஷ வியாதிகள்; மயக்கம்; நிலை கொள்ளாது துடித்தல்; உதடு, வாய், மூக்கு மிகச் சிவந்திருத்தல்; குழந்தை அவ்விடங்களை அடிக்கடி கைகளினால் இரணமாக்கிக்கொண்டே இருக்கும்; கீழ்த்தாடை சுரப்பிகள் வீக்கம்; மன, உடல் வேதனை.

**ஆரம் மெட்டாலிகம்:-** பெண்களின் கெட்டியான வெண்மையான நாற்றமற்ற வெள்ளை ஒழுக்கு, பாதரஸம் முதலியவற்றால் தாக்கப்பட்ட உடலுக்கு மாற்று மருந்து. தற்கொலை பற்றிப்பேசுவார்; இரத்தம் குழாய்களில் அளவுமீறி இருத்தல்; குழிப்புண்கள்; விரைகள், கருப்பை கல்போல் கடினமாகுதல்; சுரப்பிகள் கெட்டியாகும்: ஸ்தனங்களில் முண்டு முண்டாகக் கட்டிகள்; இருதய வாத ரோகமும், உட்புறத் தோல் வேக்காடும்.

**ஆரம் மூரியாடிகம்;-** பறங்கிப் புண்; சினைப்பை மிகவும் கடினமாகி விடுதல்; அதனால் ஏற்படும் கருச்சிதைவு; கருப்பையின் கழுத்திலும் யோனியிலும் சீழ்ப்புண்கள்.

**பாஸிலினம்:-** தலை வழுக்கை; தலையினுள் நீர் சுரந்து பெரியதாக வீங்குதல்; ஒட்டுப்பூச்சிகளால் சருமத்திலும் மயிர்க்கால்களிலும் உண்டாகும் வேதனை; பல் ஒழுங்காக முளைக்காமை; செதில் செதிலாகத் தோல் உறியும் சரும வியாதி; அடிக்கடி கொடுக்கலாகாது.

**போவிஸ்டா:-** உடல் முழுவதும் கடி போன்ற சரும நோய்; இரத்தப்பெருக்கு; கைகளில் பலம் இல்லாமல் இலேசான பொருள்களும் கீழே நழுவி விழுதல்; மூக்குச்சளி கெட்டியாகவும், கயிறுபோல் இழுபடும் குணமுள்ளதாகவும், பிசுக்கென்று ஒட்டிக்கொள்வதாகவும் இருக்கும்.

**புபோ ராணு:-** இரவில் தூங்கும் போது வலிப்பு; வலிப்புக்கு முன் நோயாளி உரக்கக் கதறுவார். ஞாபகசக்தி குறைதல்; ஆண்தன்மைக் குறைவு.

# கோடை காலத்தில் வரும் தேக அசௌக்கியம்

(டாக்டர் கேப்ரியல் பி. தம்பிசாமி.)

சகஜமாய் கோடை காலங்களில் பலஹீனம், பசிக் குறைவு, தாகம், கை கால் ஓச்சல், தூக்க மின்மை, அதிக வியர்வை, ஜீரணக் கோளாறுகள் முதலியன ஏற்படும்.

இவைகளைத் தடுக்க பொதுவாய் காலையில் **காலி முரும்**, இரவில் **நேட்ரம் பாஸ்** என்ற பயோகெமிஸ்டிரி மருந்தையும் தினம் சாப்பிட்டு வந்தால் நன்மை பயக்கும்.

(1) வெய்யிலில் அலைந்து வியர்த்துள்ள போது "ஐஸ்" கூட்டிய பானங்களைக் குடிப்பதால் உண்டாகும் உபாதைக்கு, **ஆர்ஸனிகம் ஆல்., கல்கேரியா பாஸ், மெக்னிஷியா பாஸ்** இவைகள் ஏற்ற மருந்துகள்.

(2) வியர்வை உலரும் முன்பே தண்ணீரில் குளிப்பதனால் உண்டாகும் உபத்திரவங்களுக்கு **ரஸ் டாக்ஸி, ஸேபியா: ஆண்டி. க்ருடம்; நேட்ரம் மூர்: ஸைலீஷியா** முதலியன உதவும்.

(3) **வேர்க்குரு:** ஸல்பர்; அபிஸ்மெல்; ஆர்ஸனிகம் ஆல்; ஆர்ஸனிக் ஐயோட்; கல்கேரியா பாஸ்; உபயோகிக்கலாம்.

(4) **வேர்க்குரு கட்டிகள்** அல்லது கோடை கட்டிகளுக்கு ஆர்னிகா; பெல்லடொன்னா; மெர்குரியஸ்; ஹிப்பார் ஸல்பர்; டாரெண்டுலா குபன்ஸ்; ஸைலீஷியா உதவும். தினம் நான்கு வேளை ஹிப்பார் ஸல்ப் கொடுத்தால் சீக்கிரமே கட்டிகள் பழுத்து உடையும். இரத்தத்தை சுத்தப் படுத்தவும், அடிக்கடி கட்டிகள் உண்டாவதைத் தடுப்பதற்கும் **ஆர்னிகாவும், ஹிப்பார் ஸல்பும்** சில வாரங்கள் குறைந்த வீரியத்தில் கொடுப்பது நல்லது.



பொதுவாய் கட்டிகளுக்கு **ஸல்பர் அயோட்** மிகச் சிறந்தது என்று **புரொபஸர் பியர்** (Prof. Bier) சொல்லுகிறார்.

(5) (Sun Stroke) **சன் ஸ்ட்ரோக்** வெய்யிலில் அடிபடுதலுக்கு குளிர்ந்த தண்ணீரால் நனைத்த துணியை அடிக்கடி தலையின் மேல் வைக்க வேண்டும். அகோனைட், பெல்லடொன்னா, க்ளோனாயின், பெர்ரம் பாஸ், நேட்ரம் மூர். முதலியன.

(6) **கோடை வயிற்றுப் போக்கு:** ஐரிஸ் வெ; சைனா; வெராட்ரம் ஆல்; சாமோமில்லா; ஆர்ஸனிகம் ஆல்; முதலியன உதவும்.

(7) **பெரியம்மை:**

கொடூரக் காய்ச்சலுக்கு : **அகோனைட்.**

காய்ச்சலோடு பிதற்றலுக்கு : **பெல்லடொன்னா, ஸ்ட்ரமோனியம், ஹயஸ்யாமஸ்.**

கை, கால் வீக்கங்களுக்கு : **அபிஸ் மெல்.**

இருமல், சளி கள கள வென்றிருந்தால் : **ஆண்டிமனியம் டார்ட்.**

அதிகக் களைப்புக்கு : **ஆர்ஸனிகம் ஆல்.**

(Bronchitis) மூச்சு குழாய் அழற்சிக்கு: **பிரயோனியா, காலி பைக்ரமிகம்.**

(Pneumonia) கபவாத சுரம் : **பாஸ்பரஸ்.**

வயிற்றுக் கோளாறுக்கு : **கார்போ வெஜி.**

கோளங்களின் வீக்கத்திற்கு : **மெர்கூரியஸ்.**

முதுகு வலிக்கு : **ரஸ்டாக்ஸி.**

விகாரமான வடுக்கள், குழிகள் விழாமல் இருக்க : **தூஜா; வாக்சீனம்.** காற்றோட்டமுள்ள இருண்ட அறையில் இருக்க வேண்டும். கிளிஸரினும், தண்ணீரும் கலந்து முத்துகளுக்கு மேல் தடவலாம்.

ஸல்பரும், பிரயோனியாவும் முத்துகள் உள்ளடங்காமல் சரிவர வெளிவர உதவும்.

காலி மூர் ஒரு முக்கியமான பொது மருந்து. அதற்குப் பிறகு புதிய தோல் உண்டாவதற்கும், காய்ந்த முத்துகள் சரிவர உதிர்வதற்கும் காலீ ஸல்பும், அடிக்கடி கொடுக்க வேண்டும்.

**அம்மை வராமல் தடுக்க:**

வாரியோலினம் 30x அல்லது லாக்சீனம் 30x கொடுக்க வேண்டும்.

(1) "முன்னூறு கேசுகளில் கடுமையாய் அம்மை போட்டிருந்த குழந்தைகளோடு படுத்துத் தூங்கிய தாய்மார்களுக்கு வாரியோலினம் 30x கொடுத்ததில் ஒருவருக்குக் கூட அம்மை போட்டவில்லை" என்று டாக்டர் போனல் (Dr. Bonnal) சொல்லியிருக்கிறார்.

(2) "கடந்த ஒன்பது வருஷங்களாக அம்மை பரவி வரும் காலத்தில், தடுப்பிற்காக நான் வாக்சீனம் 30x கொடுத்த கேஸ்களுக்கு அம்மை போட்டவே இல்லை" என்று டாக்டர் பர்னெட் (Dr. Burnet) கூறுகிறார்.

---


தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்

**வெகுநாட்களாக எதிர்பார்த்த**

**தாய்த்திரவங்கள்**

**மெட்டீரியா மெடிகா**

இரண்டாம் பதிப்பு

**வெளிவந்து விட்டது**

விலை ரூ. 1—50. :: அனுப்பும் செலவு ரூ. 0—75.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

மதராஸ்-28.


---

# செய்திகளும், அபிப்பிராயங்களும்.

**உபநயனம்:-** இம்மாதம் 4-ம் தேதி வியாழக்கிழமையன்று காலை 11 மணிக்கு கடக லக்கினத்தில், நமது ஆசிரியர், கவர்னிங் டைரக்டர், டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்களின் செல்வக்குமாரன் சிரஞ்சீவி நாராயணனுக்கு பூணூல் கல்யாணம் நம்பர் 3, கந்தஸ்வாமி ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28, இல்லத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. இவ்விழாவிற்கு சென்னை பிரமுகர்கள் பலர் வருகை தந்தனர்.

அதே முகூர்த்தத்தில், தி ஹோமியோபதி ஹௌஸ், காரியதரிசி டாக்டர் வி. எஸ். ஸ்ரீனிவாசன் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஸ்வாமிநாதனுக்கும் பூணூல் கல்யாணம் நடைபெற்றது.

இரு செல்வக்குமாரர்களுக்கும் நமது மனமார்ந்த ஆசீர்வாதமும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

* * *

பன்னிரெண்டாவது நேர்முக வகுப்பு :- நிர்வாக ஆசிரியரும், தி ஹோமியோபதி ஹௌஸ், கவர்னிங் டைரக்டருமான டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் அவர்களால் நடத்தப்படும் பன்னிரெண்டாவது நேர்முகவகுப்பு இம்மாதம் 7-ம் தேதி முதல் மயிலாப்பூர் ஸ்ரீ கற்பகவல்லி பாலிகா பால பாடசாலையில் நடைபெற்று வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறுபதுக்கும் மேற்பட்ட ஹோமியோபதி டாக்டர்கள் இவ்வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

* * *

திருமணம்:- ஏப்ரல் மாதம் 23-ஆம் தேதியன்று நமது மாணவர் ஸ்ரீ எம். எஸ். ராஜீ அவர்களுக்கும், ஸ்ரீ பிச்சை செட்டியார் குமாரத்தி செல்வி கருப்பாயிக்கும், ஒண்டிகுப்பம் திருவொற்றியூரில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. இளந்தம்பதிகளுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**டாக்டர் ஹானிமன் பிறந்த தின விழா :-** தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் ஆதரவில் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணிக்கு தி ஹோமியோபதி ஹௌஸ் ஸ்தாபனத்தில் டாக்டர் ஹானிமனின் பிறந்த தின விழா, ஷை ஸ்தாபனத்தின் கவர்னிங் டைரக்டர் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நடை பெற்றது.

அச்சமயம் ஹோமியோபதியர்கள், சங்கத்தின் அங்கத்தினர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். டாக்டர் வி. ரங்கனாதன் டாக்டர் ஹானிமனின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தார்.

* * *

**மதுரை:-** ஹானிமன் 205-வது ஆண்டு பிறந்ததின விழா மதுரையில் ஜில்லா மாஜிஸ்ட்ரேட் உயர் திரு. கே. சீதாராம ராவ் தலைமையில் நடை பெற்றது. விழா அமைப்பாளர் டாக்டர் ஓ. வி. நரஸிம்மனின் வரவேற்புரைக்குப்பின் ஹானிமன் படத்தை ஸ்ரீ டி. டி. சுந்தரம் பி. ஏ. எல். டி., அவர்கள் திறந்து வைத்தார். மதுரை ஜில்லா பொது சுகாதார அதிகாரி டாக்டர் ராஜமாணிக்கம் "சுகாதாரம்" பற்றி பேசினார்.

* * *

**தொப்பம்பட்டி:-** ராஜசுலோசனா ஆஸ்பத்திரியில் கனம் விரப்பக்கவுண்டர் தலைமையில் ஹானிமன் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

* * *

**10-4-61** அன்று ஹோமியோபதி வைத்திய தந்தை டாக்டர் சாமுவேல் ஹானிமன் அவர்களின் 206-வது பிறந்த தின விழாவை யொட்டி டாக்டர் R. P. கோபலராவ் அவர்கள் முன்னிலையில் ஏழைகளுக்குக் கஞ்சிவார்க்கப்பட்டது. பாண்டிச்சேரி டாக்டர் R. கணேசன் அவர்கள் தலைமையில் திண்டிவனம் பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் 60-61-ஆம் ஆண்டின் வரவுசெலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. 1961-62-ஆம் ஆண்டிற்காக கீழ்க்கண்ட டாக்டர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.



தலைவர்—டாக்டர் K. M. A. வஹாப்.

செயலாளர்—டாக்டர் M. குருநாதன்.

உதவிசெயலாளர்—டாக்டர் K. பாலசுப்பிரமணியன்.

நிர்வாகஸ்தர்கள்:-

டாக்டர் P. R. கோபாலராவ்
டாக்டர் K. B. S. மணி
டாக்டர் R. கணேசன்
டாக்டர் K. R. சர்மா
டாக்டர் M. ரகுநாதன்
டாக்டர் A. ராஜி முதலியார்
டாக்டர் R. S. தங்கவேல்
டாக்டர் K. S. ராஜேந்திரன்

* * *

**கிருஷ்ணகிரி.** ஸ்ரீதேவி ஷண்முகா வைத்திய சாலையில் 2-4-61 ஞாயிறு பகல் 2 மணிக்கு வடசேலம் பதிவுபெற்ற ஹோமியோபதி மருத்துவர் சங்கத்தின் 2-வது வருட கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டது. புதுவருடத்திற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த விபரம்:

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | — | Dr. | K. S. கன்னையராஜு |
| உப ,, | — | ,, | P. நஞ்சுண்டரெட்டி |
| செயலாளர் | — | ,, | G. P. சுந்தரம் செட்டி |
| உதவி ,, | — | ,, | K. M. நடராஜன் |
| பொக்கிஷதாரர் | — | ,, | R. சோமசுந்தரம் |

இவர்களைத் தவிர 9 நிர்வாகஸ்தர்களையும் தேர்ந்தெடுத்தனர்.

**இளம் பிள்ளைவாதமும் ஹோமியோபதியும்:-** 1957-ம் ஆண்டில் சிகாகோ, ஸான் பிரான்ஸிஸ்கோ ஆகிய இவ்விரு நகரங்களிலும் இளம் பிள்ளைவாதம் கொள்ளை நோயாய்த் தோன்றியது. பள்ளிச்சிறுவர்களில் 300 பேர்களுக்கு ஹோமியோபதி மருந்தாகிய லதிரஸ் ஸடிவா (Lathyrus Sativa

வாய்மூலமும் மற்றவர்களுக்கு அலோபதி மருந்தாகிய ஸால்க் வாக்ஸைன் (Salk Vaccine) இஞ்சக்ஷன்மூலமும் கொடுக்கப்பட்டன. ஹோமியோபதி மருந்தை உட்கொண்ட குழந்தைகளில் ஒரே ஒரு குழந்தைக்கு மட்டுமே நோய் கண்டது. ஆனால் ஒருவிதக் கெடுதலும் நேராமல் ஒரே வாரத்தில் நோய் குணமடைந்துவிட்டது. ஸால்க் வாக்ஸைன் இஞ்சக்ஷனை உபயோகிக்கப்பட்ட குழந்தைகள் பலருக்கு இளம் பிள்ளைவாதம் கண்டது.

**மோக்ஷத்துக்குக் குறுக்குவழி:-** ஆபரேஷன் செய்து கொண்டால் சீக்கிரம் நோய் தீருமென்ற நம்பிக்கை காரணமாக அல்பமான நோய்களுக்குக்கூட ஆபரேஷனை நாடுகின்றனர் சிலர். இங்கிலாந்தில் 1957-1958ஆகிய இரு ஆண்டுகளில் நூறுபேர்களுக்கும் மேலாக ஆபரேஷன் செய்யும்போது ஏற்பட்ட தவறுகளால் மரணமடைந்துள்ளனர். பஞ்சு, துணி போன்ற பொருள்களை உள்ளே வைத்துத் தையல் போட்டு விட்டதால் 5 பேர்களும், ஆபரேஷன் செய்தபிறகு விஷக்கிருமிகள் உடலில் புகுந்தால் 17 பேர்களும், இரணசன்னிகண்டு 2 பேர்களும், உடலினுள்ளே காற்று புகுந்ததால் 13 பேர்களும், ஆப்பரேஷன் கருவிகளை உடம்பினுள்ளே வைத்துத் தையல் போட்டதால் 40 பேர்களும், நோய் இல்லாத பகுதிகளைத்தவறுதலாக வெட்டியதால் மற்றும் பலரும் இறந்தனர். கொடுக்கப்பட்ட மருந்தின் தீய விளைவுகளால் இறந்தவர்களின் தொகை 265 ஆகும். வைத்திய நிபுணர்கள் ஏராளமாய் உள்ள இங்கிலாந்திலேயே இவ்வளவு அநாவசியச் சாவுகள் இருக்கிறதென்றால் நம் நாட்டில் எப்படி இருக்குமென்று சொல்லவும் வேண்டுமா ? ஆனால் அதிர்ஷ்டவசமாகவோ துரதிர்ஷ்டவசமாகவோ அவ்விஷயமான புள்ளி விவரங்கள் நம் நாட்டில் சேகரிக்கப்படவில்லை.

**செருப்பா, பென்ஸிலினா?:-** எத்மாதபூரிலுள்ள ஓம் பிரகாஷ் என்னும் ஆசிரியரின் மனைவிக்கு கரப்பான்படை நோய் இருந்தது. நைலான் செருப்பை உபயோகித்ததால் அது தோன்றியதாகக் கருதப்பட்டது. அந்நோயை நீக்கப் பென்ஸிலின் இஞ்சக்ஷன் செய்தார் ஒரு டாக்டர். இஞ்சக்ஷன் செய்து 1½ மணி நேரத்துக்குள் அப்பெண்மணி இறந்து விட்டாள். சாவுக்குக் காரணம் நைலான் செருப்பா, பென்ஸிலினா!

## எவ்வளவு வருடம்

**''எம். என். ஆர்'' எழுதுகிறார்.**

ஹோமியோபதி மருந்து மாத்திரைகள் எவ்வளவு காலத்துக்கு குணம் குன்றாது வேலை செய்யும் என்று பல ஹோமியோபதியர்களுக்கு நிச்சயமாய்த் தெரியாது. என் அனுபவத்தில் ஏழு, எட்டு வருஷங்களுக்குக் கூட மாத்திரைகளை உபயோகித்து பலன் கண்டிருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன், நான் 13 வருடங்களுக்கு முன்பு வாங்கிய, சைனா 30 மாத்திரைகள் கொண்ட ஒரு அவுன்ஸ் பாட்டில் என் பெட்டியில் இருந்து கிடைத்தது. அதை இப்பொழுது உபயோகித்துப் பார்த்ததில் பூர்ண குணம் கிடைத்தது.

இம்மருந்தில் நான்கு டிராம்கள் கைவசம் உள்ளன. இதன் குணநிசயங்களை ஆராய்ச்சி செய்ய விரும்பும் அனுபவமுள்ள ஹோமியோபதி டாக்டர்கள் 75 நயா பைசாவுக்கு தபால் தலைகள் வைத்து தி ஹோமியோபதி ஹௌஸ் விலாசத்துக்கு எழுதினால் ரெஜிஸ்டர்டு, ஸாம்பிள் தபாலில் ஒரு டிராம் அனுப்புகிறோம். நான்கு டாக்டர்களுக்கு மேல் மருந்தைப் பெற எழுதினால், மற்றவர்களுக்கு தபால் செலவு 15 பைசா போக பாக்கியைத் தபால் தலைகளாகத் திருப்பி அனுப்பி வைக்கிறோம்.

---

## ஆடு தசை

**(டாக்டர் ஏ. சாம்பசிவம், பிச்சானூர் [illegible]யாத்தம்.)**

வயது சுமார் 42 ஆன ஒரு பெண் மாதந்தோறும் மாதவிடாய் போவது கிடையாது. ஆனால், ஒவ்வொரு மாதமும், அந்த குறிப்பிட்ட 3 நாட்களிலும் வலது கால் ஆடு தசையில் இரத்தம் தெறிக்கக்கூடிய அளவில் சிகப்பு வீக்கம் ஏற்படும். வலியுமிருக்கும். 3 நாளைக்குப் பிறகுத் தானாகவே மறைந்து விடும். இதற்கு என்ன மருந்து உபயோகிப்பது ?

பெல்லடொன்னா 200 உபயோகித்ததினால் குணம் ஏற்பட்டது. ஆனால், அப்பெண், "சாதாரணமாக 3 நாட்களுக்குப் பிறகு தானாகவே மறைந்து விடுவது வழக்கம். அடுத்த மாதத்தில் தான் என்ன ஏற்படுகிறது" என்று பார்க்க வேண்டும் என்றாள். "சரி பார்க்கலாம்" என்று கூறி வாளாயிருந்தேன். மறுபடியும், அடுத்த மாதத்திலோ, அல்லது அதற்கடுத்தமாதங்களிலோ இது வரையிலும் அவ்வலியோ, வீக்கமோ வரவேயில்லை.

# நெடுநாள் உயிர் வாழ்வதெப்படி ?

(பேராசிரியர் எ. லிபோவ்)

நம் அனைவருக்கும் மூப்பு தவிர்க்க முடியாதது. எனினும் வெவ்வேறு நபர்களுக்கு இது வெவ்வேறு விதமாக இருக்கக்கூடும். இயற்கையாகவே உடலுறுப்புகள் மூப்பு எய்துவது ஒரு விதம். அப்போது உள்ளத் தெளிவும், வேலை செய்யும் திறனும் பாதிக்கப்படுவதில்லை. தக்க பருவம் வருமுன்னரே உடலுறுப்புக்களுக்குத் தளர்ச்சியேற்படுவதன் மூலமும் ஒருவர் மூப்பு எய்தி விடலாம். குறிப்பிட்ட சில நோய்களின் காரணமாக உடல் இத்தகைய மூப்பு அடைகிறது.

அகாலத்தில் உடல் தளர்ச்சியடைவதன் காரணமாக இந்த நோய்கள் தோன்றுகின்றன. ஆரோக்கியமற்ற நிலைமைகளும் அகால மூப்புக்கு வழிகோலக் கூடும்.

தளர்ச்சியின் காரணமாக மனிதனுடைய வேலை செய்யும் திறமை சன்னஞ் சன்னமாகக் குறையும் பொழுது, அவருடைய மனம் புண்படுகிறது. ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்றிருந்த போதிலும், தன் பரந்த ஞானத்தை ஈடுபடுத்தித் தாய்நாட்டுக்குத் தொண்டாற்ற இயலவில்லையே என்று அவருடைய மனம் நோகிறது. தளர்ச்சியடைவதை அகால மூப்பு என்று தான் கருத வேண்டும். சோவியத் யூனியனில் பலபேர் நூறு ஆண்டுகளுக்குமேல் வாழ்கிறார்கள்.

மனிதன் 120 முதல் 150 ஆண்டுகள் வரை வாழ முடியும்.

### நோய்த் தடுப்பும் சிகிச்சையும்

அகால மூப்பு அடைவதற்கான காரணங்களையும், தளர்ச்சியுண்டாக்கும் நோய்களையும் ஆராய்ந்து, இவை ஏற்படாமல் தடுக்கவும், சிகிச்சை செய்யவும் வழிமுறைகளைக் கண்டு பிடிப்பதற்காக சோவியத் யூனியனில் ஒரு விசேஷ ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சி மிகவும் சிக்கலானதாகும்.



ஒவ்வொரு மனிதனுடைய மூப்பும் சிற்சில பிரத்தியேக இயல்புகளைக் கொண்டிருக்கின்றன. எனவே எல்லாருக்கும் ஒரே விதமான சிகிச்சை இருக்க முடியாது.

"அகால மூப்பு அடைவதை மருந்துகள் மூலம் தடுப்பது, சிகிச்சை செய்வதுபற்றி" என்று டி. இ. சொபதரேவும் எஸ். ஐ. பலுயேவும் எழுதிய கட்டுரையில் இப்பிரச்னையைப் பற்றி ஆராய்கின்றனர்.

மூப்பு அடையும்போது ஏற்படும் வெவ்வெறு மாற்றங்களிலும் உபயோகப் படுத்தப்பட்ட பலவிதமான மருந்துகளின் விளைவுகளைப் பற்றியும் கட்டுரை ஆசிரியர்கள் விளக்குகின்றனர்.

மீண்டும் "புத்திளமையை" அளிப்பது போலத் தோன்றக் கூடிய ஹார்மோன்கள் விரிவாக உபயோகிக்கப்பட்டன. ஆனால் மருந்துகளைத் தொடர்ந்து நீண்ட நாட்கள் உபயோகிப்பதால் வேறுவித சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். அது மட்டுமல்ல; இத்தகைய சிகிச்சையை திறமை மிக்க நிபுணரால்தான் அளிக்க முடியும்.

கன்றுக் குட்டி, ஆட்டுக் குட்டியின் கருச்செல்களை உடலினுள் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்ட சிகிச்சை முறை கடந்த சில ஆண்டுகளாக மேற்கு நாடுகளில் விளம்பரப் படுத்தப்பட்டு வருகிறது. இந்த சிகிச்சையினால் நல்ல பலன் ஏற்படுவதில்லை. அகால மூப்பையும் தளர்ச்சியையும் தடுப்பதற்கு வைட்டமின் தெராப்பி முறையே சாலச் சிறந்தது என்று கட்டுரை ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முதிய வயதினருக்கு அளிக்கப்படும் உணவு விஷயத்திலும் சில முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும். புரொட்டீன்கள், வைட்டமின்கள், இரும்பு மற்றும் ஏனைய உலோக உப்புக்கள் முதலியன உணவில் கணிசமான அளவு இருக்க வேண்டும். திரவப் பொருள் அதிகமாக உட்கொள்வதால் வயதான சிறு நீரகத்திற்கு அதிக பாரமேற்படுகிறது என்று கருதுவது தவறு. இதற்கு மாறாக, சோகை நோய் இல்லையெனில், திரவப் பொருள் அதிகமாகக் கொடுக்க

வேண்டியது அத்தியாவசியமாகும். ஏனெனில், சிறிய அளவு அடர்ந்த சிறுநீரைச் சுரப்பது சிறு நீரகத்திற்கு மிகவும் கஷ்டமானதாகும்.

### வைட்டமின் மாத்திரை சாப்பிடுதல்

உணவைச் சிறிய அளவுகளில் அடிக்கடி சாப்பிட வேண்டும். அப்போதுதான் இரைப்பையில் அதிக பாரமேற்படாது, வைட்டமின் மாத்திரைகளை உட்கொள்ளலாம். கொழுப்பு கரைதிறனுள்ள வைட்டமின்கள் ஏ, டி, இ முதலியவற்றை உபயோகிக்கும்போது சற்று கவனம் செலுத்த வேண்டும். இல்லையெனில் சிற்சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். நிதானமில்லாமல் டி வைட்டமினை அதிகமாக உட்கொள்வதினால், குருதிக் குழாய் கெட்டியாகிவிடும் நோய் ஏற்படக்கூடும். முதிய வயதில் பி6 வைட்டமின் (பேரிடோக்சின்) உபயோகித்தால் மிக்க அனுகூலம் கிடைக்கும். இதை ஒரு நாளுக்கு குறிப்பிட்ட தடவைகள் (ஒவ்வொரு தடவையும் சுமார் 100 மில்லிகிராம் அளவு) மூன்று வாரங்களுக்குச் சாப்பிட்டால் மிகுந்த நன்மை ஏற்படும்.

முதிய வயதில் ரத்த சோகை ஏற்பட்டிருந்தால் வைட்டமின்கள் பி12, பி1, பி2, போலிக் அமிலம், நிகோடினிக் அமிலம் முதலியன சிறந்த பலனளிக்கும். இளம் வயதில் போஷாக்கான உணவுப் பொருள்களை உட்கொள்ளாவிடில், முதிய வயதில் அதனால் பல சிக்கல்களும், ஆரோக்கிய நலிவும் ஏற்படும் என்று கட்டுரை ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றனர். அகால மூப்பு அடையாமலிருப்பதற்காக ஒருவர் இளம் வயதிலிருந்தே எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

சுவாச உறுப்புகளுக்கு அப்பியாசம் அளிக்கும் விதத்தில் இலேசான உடற்பயிற்சியும் அவசியமாகும்.

அகால மூப்பும் தளர்ச்சியும் அடைவதைத் தடுக்கவும், சிகிச்சை செய்யவும் புதிய முறைகளைக் கண்டுபிடிக்க விடா முயற்சியுடன் பாடுபட்டு வரும் விஞ்ஞானிகளை மகத்தான கடமைகள் இன்னும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன.

—சோவியத் நாடு.


சுளு வீக்கம் ?
**ஸோல்கர் ஆயில்**

தேள் கடி ?
**ஸ்டிங்கீஸ்**

காது வலி ?
**நிம்டு ஆயில்**

கண் நோய் ?
**யூபோட்ரப்ஸ்**

## மேல் பூச்சு மருந்துகள்

**கோஸின் ஆயின்ட்மெண்ட்**
கரப்பான், படை முதலியவைகளுக்கு.

**மார்கேட் களிம்பு**
எல்லாவகை புண்களுக்கும்.

**ஹாடில் களிம்பு**
மூல நோய்களுக்கு.

இன்னும் அநேக களிம்புகளும், வெளிப் பூச்சு திரவங்களும் எங்களிடம் கிடைக்கும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**
"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை:
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.

Reg. No. 6555 May 15, 1961.


# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்ப சிகிச்சை செய்வோரும், ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும், அநேக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விபரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

## ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை:
9, செம்புதாஸ் தெரு
மதராஸ்-1.


Edited and Published by Dr. V. S. Subramaniam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1

நோயிலா வாழ்வே
குறைவிலாச் செல்வம்

# ஹோமியோபதி மித்திரன்

ஜூன் 1961

38 காசுகள்

தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள்

வெகுநாட்களாக எதிர்பார்த்த

**தாய்த்திரவங்கள் மெட்டீரியா மெடிகா**

இரண்டாம் பதிப்பு

வெளிவந்து விட்டது

விலை ரூ. 1—50. : : அனுப்பும் செலவு ரூ. 0—75

**ஹோமியோபதியின் கீதை**

என்று பெயர் பெற்ற

டாக்டர் ஹானிமனின்

**"ஆர்கனு"வை**

**டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்**

தமிழாக்கிப் புத்தக ரூபமாக வெளிவந்துவிட்டது.

ஆங்கிலந்திலேயே எளிதில் புரியாத இப்புத்தகம் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வேறு தமிழாக்கம் படித்துள்ளோரும் இதைப் படித்து நலம் பெறலாம்.

இதன் விலை ரூ. 3. அனுப்பும் செலவு தனி.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலையம்"

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ், தெரு
மதராஸ்-1.


For the Use of a Registered Medical Practitioner or Hospital or Laboratary Only.

# ஹோமியோபதி மித்திரன்


நிர்வாக ஆசிரியர் : Dr. V. S. ஸுப்ரமண்யம்

மலர் 8 ஜூன் 1961 இதழ் 11


பொருள் அடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மாமியாரும் மருமகளும் .... | 3 |
| 2. | செய்திகளும் அபிப்பிராயங்களும் .... | 5 |
| 3. | சிகிச்சைக் கதம்பம் .... | 7 |
| 4. | உணவும், பத்தியமும் .... | 17 |



**டீலர்கள் தேவை**

ஒவ்வொரு நகரத்திலும் எங்கள் சொந்தத் தயாரிப்பு மருந்துகளை விற்பனை செய்ய டீலர்களை நியமித்து வருகிறோம். டீலர்களுக்குத் தாராளமான கமிஷனும் மற்ற வசதிகளும் செய்து தரப்படும். ஒவ்வொரு மாதமும் ரூ. 200-க்குக் குறையாமல் மருந்துகளை விற்பனை செய்யக் கூடியவர்கள் மட்டும் முழு விவரங்களுக்குக் கீழுள்ளபடி விலாசமிட்டு எழுதவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலையம்."

77, ராமகிருஷ்ண மடம் ரோடு,

சென்னை-28.

## டான்ஸில்ஸ்

இரட்டையர்களாவர். சுவாசகோசத்தில் புகையும் தூசியும் புகுந்து நோய்கள் உண்டாகாதபடித் தடுத்து, தாமே நோயுறும் தியாகிகள் !

●

அப்படிப்பட்ட தியாகிகளை வெட்டி எறிந்தால் உடலுக்கு ஆயுள் உள்ள வரை ஊனம்தான் என்று எல்லா டாக்டர்களும் ஒத்துக்கொள்கிறார்கள்; ஆனால், டான்ஸில் வீங்கி, சீழ்பிடித்தால் அதை குணமாக்க வழி அறியாதுதான் கத்தியை தேடுகிறார்கள்.

●

அச் சமயத்தில் ஹோமியோபதியின் பெயரை நிலைநாட்ட, எங்கள்

## ஸில்டோனிஸ்

உபயோகித்தால் போதும்.

*　　　*　　　*

இந்த இனிய மருந்தினால், டான்ஸில் குணமடைந்து சுய வடிவுக்குச் சுருங்கி நன் சேவையைச் சரிவர செய்கிறது.

விலை : 50 மாத்திரைகள் கொண்ட ஒரு பாட்டில் : ரூ. 2-25.
500 „ „ ரூ. 18-00.

(அனுப்பும் செலவு தனி.)

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.


# மாமியாரும் மருமகளும்

தமிழ்நாட்டில் "மலையைக் கெல்லி எலியைப் பிடித்தாளும்" என்ற பழமொழி ஒன்று உண்டு. அதையே ஆங்கிலத்தில் "மலை உறுமி, எலி வெளி வந்ததாம்" என்பார்கள்.

பல நாட்களாக மந்திரிகள் கூட்டங்கள்தோறும் சென்று "ஹோமியோபதி நன்றாக நோய்களைக் குணப்படுத்துகிறது. அதிக செலவுமில்லை" என்றும், "கூடிய சீக்கிரம் ஹோமியோபதி மசோதா ஒன்று கொண்டுவரப்போகிறோம்." என்றும் சொல்லி வந்தார்கள். கொஞ்ச நாட்களாக பேச்சொன்றும் கேட்காததால், மசோதாவை எல்லோரும் எதிர்பார்த்து இருக்கிறோம். அம்மசோதா எப்பொழுதுதான் வருமோ, என்னதான் செய்யுமோ? அது ஒரு பக்கத்தில் இருக்கட்டும். இப்போது நாம் காண்பது என்ன?

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கலெக்டர்கள் கீழ்க்கண்டபடி ஒரு அறிக்கையைப் பதிவுபெற்ற எல்லா ஹோமியோபதியர்களுக்கும் விடுத்திருக்கிறார்கள்.

பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்களென்று இந்த ஆபீசில் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அறிவிப்பது யாதெனில் :

"1-11-1958ஆம் தேதிய ஆர்டர் ஜீ. ஓ. எம். எஸ். ஹோம் 7 (d) இரண்டாவது பகுதியில் கண்டபடி ஒவ்வொரு ஹோமியோபதி திரவ மருந்திலும் இரண்டு அவுன்ஸ் வீதம் வைத்துக்கொள்வதற்காக பதிவு ஏற்பட்டதே ஒழிய, மற்ற ஒருவித சலுகையும் அதனால் அளிக்கப்படவில்லை.

"இதுவரை பல நபர்களுக்கு அளிக்கப்பட்ட பதிவுப் பத்திரம் இவ்வறிக்கையில் கண்டபடி மாற்றி அமைக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்."

இச்சமயத்தில் நமக்கு ஒரு பழைய கதை ஞாபகத்துக்கு வருகிறது. நேயர்களும் அறிந்திருக்கலாம். "அம்மா,

தாயே, பிச்சை" என்று வாசலில் வந்த ஒரு பிச்சைக்காரனைப் பார்த்த அவ்வீட்டின் மருமகள் "இன்று பிச்சை போடமுடியாது. நாளைக்கு வா" என்று சொன்னாளாம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த மாமியார், வெளியே போன பிச்சைக்காரனை வரவழைத்து "அந்த அம்மாள் சொல்வதைக் கேட்காதே. நான்தான் இந்த வீட்டுக்கு அதிகாரி. நான் இப்பொழுது சொல்கிறேன். பிச்சை போடமுடியாது, போ" என்றாளாம்.

அதைப்போலவே மந்திரிகள் இனிக்கப் பேசி, வெறும் கையை ஆட்டிவருகின்றனர் என்றால் அரசாங்கச் சிப்பந்திகள் "ஒன்றும் கிடையாது என்று அர்த்தம்" என்று வியாக்கியானம் கூறுகிறார்கள்.

மத்திய அரசாங்கமோ, நமது சென்னை அரசாங்கமோ இதுவரை ஹோமியோபதிக்காக என்னதான் செய்துவிட்டார்கள், இப்பொழுது ஒன்றுமில்லை என்று சொல்வதற்கு?

சென்ற நூறாண்டுகளாக ஹோமியோபதி தாயில்லாப் பிள்ளையாகத்தானே வளர்ந்து வந்திருக்கிறது. இப்பொழுதும் அதே நிலை தானே?

மாமியார் சொன்னதும், மருமகள் சொன்னதும் ஒன்றாய்த்தான் எங்களுக்குத் தோன்றுகிறது. வேறாவது வித்தியாசம் இருக்கிறதென்றால், தெரிந்தவர்கள் சொல்வதைக் கேட்கத்தயார்.

---


## ஜர்மன், அமெரிக்கன் தயாரிப்பு.

* பயோகெமிக் மருந்துகள்.
* ஸினரேரியா மாரிடிமா கண் துளி.
* அல்பால்பா டானிக்.
* டயகார்டு இருதய டானிக் ஆகியவைகள்

எங்களிடம் கிடைக்கும் :

**தி ஹோமியோபதி ஹௌஸ்**

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.


# செய்திகளும், அபிப்பிராயங்களும்.

**நேர்முகவகுப்பு:** மே மாதம் மூன்றும் வாரத்துடன் ஹோமியோபதி ஹௌஸின் 12-வது நேர்முகவகுப்பு முடிவடைந்தது. இதைப்பற்றி "பேனுமுனை" என்ற புனைப்பெயர் கொண்ட ஹோமியோபதி முதியர் ஒருவர் இவ்வாறு எழுதுகிறார்.

"கவர்னிங் டைரக்டரின் விசேஷ அனுமதி பெற்று 12-வது நேர்முக வகுப்புக்கு ஒருநாள் நான் சென்றிருந்தேன். அப்பொழுது டாக்டர் காளி அம்மாள் அவர்கள் (பிரசவ விஷயங்களைப்பற்றி நான்கு நாட்களாக சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தவர்) அன்று நான்கு மணிநேரம் பிரசவ காலத்தில் சிசுவின் உதயத்தைப்பற்றிப் பேசினார். தலை உதயம், புஜ உதயம், புட்ட உதயம், கை உதயம், கால் உதயம், குறுக்கு உதயம், இரட்டைப்பிறப்பு, முதலியவற்றைப்பற்றி 30, 40 விளக்கப்படங்களுடன் விவரித்தார். மாணவர்கள் கவனம் சிதறவொட்டாமல் அவ்வளவுநேரம் பேசினது குறிப்பிடத்தக்கது. அதனால்தான்போலிருக்கிறது வகுப்பில் கிட்டத்தட்ட 20 பெண்மாணவிகள் குழுமியிருந்தனர்.

"பின்னர், மாணவர்களைக்கண்டு பேசினேன். டாக்டர் ஸுப்ரமண்யம் பேசும்போது நீங்கள் வந்திருக்கவேண்டும், ஸார், மிகக் கடினமான விஷயத்தைக்கூட எங்களுக்குப் புரியும்படி சொல்கிறார்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"அடுத்தவருடம் நான் பிழைத்துக்கிடந்தால், டாக்டர் அவர்களும் அனுமதி தந்தால், கட்டாயம் டாக்டர் சொற்பொழிவை அடுத்த வகுப்பில் கேட்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன்.

* * *

**ஈரோடு:** 23-5-61-ல் நடந்த ஈரோடு ஹோமியோபதி மெடிகல் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் புதுவருட செயற்குழு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**பொறையார்:** பொறையார் வட்டார ஹோமியோபதியர்களின் சங்கக்கூட்டம் 30-4-61-ல் நடந்தது.

**சேலம்:** சேலம் பதிவுபெற்ற ஹோமியோபதி மருத்துவர் சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 7-5-1961-ல் நடந்தது.

**தென்சென்னை:** தென்சென்னை பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 14-5-61-ல் நடந்தது. டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் அவர்கள் "உணவும் பத்தியமும்" என்பதுபற்றிப் பேசினார்கள்.

**திருநெல்வேலி:** திருநெல்வேலி தாலுகா ரிஜிஸ்டர்டு ஹோமியோ மெடிகல் பிராக்டிஷனர் சங்கத்தின் கூட்டம் 1-5-61-ல் கூடியது. அக்கூட்டத்திற்கு டாக்டர், எம். அக மதுகான் தலைமை வகித்தார். கூட்டத்தில் சங்கத்தலைவர், செயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**அம்பை:** 14-5-61-ல் அம்பை தாலுக்கா ஹோமியோபதி டாக்டர்களின் சங்க மகாநாடும், ஹானிமன் அவர்களின் பிறந்தநின விழாவும், டாக்டர் இசக்கிமுத்துபாண்டியன் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது.

* * *

**வைத்திய சாலைகள்:** 1. சென்னை பரங்கிமலைக்கடுத்த வாணுவம்பேட்டை கிராமத்தில் "சார்ல்ஸ் ஹோமியோ-சித்த வைத்தியசாலையை" டாக்டர் எஸ். டி. ராஜரத்தினம்பிள்ளை நடத்திவருகிறார்.

**2.** வட ஆற்காடு ஜில்லா மேல்விசாரத்துக்கடுத்த பூட்டற்றுங்கு கிராமத்தில் 25-5-61 காலை மேல்மின்னல் 'இலக்கிய இல்லத்தில்' டாக்டர் மின்னல்கிழார் "மின்னல் மருத்துவமனை"யைத் துடங்கியுள்ளார்.

இவ்விரண்டு வைத்தியசாலைகளும் நல்ல முறையில் வளர்ந்து பொதுமக்களுக்குத் தொண்டாற்ற ஆசிர்வதிக்கிறோம்.

# சிகிச்சைக் கதம்பம்

## 1. அதிசயம் ஆனல் உண்மை

ஆண் தன்மைக் குறைவுக்கு உபயோகப்படும் மருந்துகள் எவை என்று கேட்டால் அக்னஸ் காஸ்டஸ், க்ளெமடிஸ் எரெக்டா, லைகபோடியம், ஸெலினியம் என்று அடுக்கிக்கொண்டே போவோம் நாம். ஏன் என்றால் ஹோமியோபதி நூல்களிலே இம்மருந்துகள் ஆண் தன்மைக்கு உபயோகமாகுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் நோய்களின் பெயர்களைக் ஆதாரமாய்க் கொண்டு ஏற்ற மருந்துகளைத் தேடும் பழக்கம் முறையற்றது. ஒவ்வொரு நோயிலும் காணப்படும் மொத்தக் குறிகளையும், அதன் காரணத்தையும் நன்கு தெரிந்துகொண்டே மருந்தைப் பொறுக்க வேண்டும். இல்லாவிட்டால் நோயை முழுதும் குணம் செய்ய முடியாது. இதை விளக்க டாக்டர் வில்லியம் பி. வெஸல்ஹாப்ட் அவர்களின் அனுபவத்தைக் கீழே தருகிறோம்.

***நோயின் வரலாறு*** :—நோயாளி, ஆண்; வயது 45; பத்து ஆண்டுகளுக்கு முன் மணவாழ்க்கையில் ஈடுபட்டார். பார்வைக்கு ஆரோக்கியமாய் இருக்கிறார். சென்ற ஆறு ஆண்டுகளாக புணர்ச்சி செய்யும் போது இந்திரியம் வெளியாவதில்லை. ஆனல் சிற்சில சமயங்களில் இரவு நேரங்களில் தூங்கும்போது இந்திரியம் தானகவே வெளிப்படுகிறது. மானி (ஆண் குறி)யில் விரைப்பு சுபாவமாகவே அதிகமில்லை; புணர்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது துவண்டு போகிறது. விரைப்பைக்கும் ஆசனவாய்க்கும் இடையே எரிச்சல்; படுக்கையில் படுத்தவுடனும் அதைப்பற்றி நினைத்தாலும் எரிச்சல் அதிகமாகிறது. மானியில் பலமே இல்லாதது போன்ற உணர்ச்சியுடன் விரைகளில் இழுக்கும் வலிகள். அரையிடுக்குகளிலும் ஆசன வாயிலும் சில சமயங்களில் நீர் இல்லாத வெடிப்புகளும் அரிப்பும். மானியில் பலமில்லாத உணர்ச்சி ஏற்படும் போது கண்களிலும் பல மில்லாதது போலத் தோன்றும். குளிரும் பருவநிலையில் ஏற்படும் மாற்றங்களும் அவர் உடலுக்கு ஒத்துக்கொள்வதில்லை. அல்பக் காரணங்களாலும் மிக விரைவில் ஜலதோஷம் பிடிக்கும். முதலில் மூக்கும் தொண்டையும் காய்ந்துபோய்ப் பிறகு

தண்ணீர் போன்ற சளியும் தும்மலும் உண்டாகும். அல்லது கை கால்களிலும் உடம்பு முழுவதுமே பலப்பல இடங்களிலும் கடுப்புவலி உண்டாகி அடிக்கடி இடம் மாறும். இருபது வருடங்களுக்கு முன்பு ஆப்பிரிக்கா நாட்டுச் சுரம் வந்தது. மேகக்கிரந்தியோ, மேகவெட்டையோ, மற்ற தோல் வெடிப்புகளோ ஏற்பட்டது கிடையாது. மற்ற எல்லா விஷயங்களிலும் எவ்விதக் கோளாறும் கிடையாது.

மேலே குறிப்பிட்ட நோயாளிக்கு டாக்டர் வில்லியம் அவர்கள் பதினெட்டு மாதங்கள் சிகிச்சை செய்தார். மிக எளிதில் ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும் சுபாவத்தைச் சற்று மாற்ற முடிந்ததே தவிர நோயாளிக்கு வேறு எவ்விதத்திலும் குணமேற்படவில்லை. அதனால் பில டெல்பியாவில் இருந்த புகழ்பெற்ற ஹோமியோபதி டாக்டராகிய லிப்பி என்பவரிடம் ஆலோசனை பெற நோயாளியை அனுப்பிவைத்தார். நோயாளியைக் கண்டு விசாரித்த பிறகு டாக்டர் லிப்பி அவர்கள் டாக்டர் வில்லியம் அவர்களுக்கு எழுதின கடிதத்தைக் கீழே தருகிறோம்.

"உங்கள் நோயாளிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் டிப்தீரியா வந்திருந்த தென்றும் அதற்குத் தகுதியற்ற மருந்துகளை உபயோகித்து டாக்டர்—சிகிச்சை செய்தார் என்றும் நான் அறிகிறேன். டிப்திரியா ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் தாவி மீண்டும் பழைய இடத்துக்கே திரும்பி வந்திருக்கிறது. அந் நோய்க்குப் பிறகு அதிகப் பலவீனம் ஏற்பட்டிருக்கிறது; அதிலிருந்து தன் உடம்பின் வலிமை குறைந்திருப்பதாகவும் பழைய தெம்பு திரும்பி வரவில்லையென்றும் நோயாளி நினைக்கிறார். அடிக்கடி அவருக்கு வரும் ஜலதோஷத்தில் இடம் மாறும் வலியின் தன்மையும் காணப்படுகிறது. நோயாளிக்கு **லாக் கனைனம்** (Lac Caninum) C. M. வீரியத்தில் ஒரு வேளை கொடுத்திருக்கிறேன். தேவைப்பட்டால் **பல்ஸடில்லா** (Pulsatilla) ஒருவேளை கொடுக்கவும்."

மை. நோயாளிக்கு பல்ஸடில்லா தேவைப்படவில்லை. லாக்கனைனத்தாலேயே பூரண குணம் ஏற்பட்டுவிட்டது.



பிலடெல்பியாவுக்குப் போய் வந்து மூன்று மாதங்கள் ஆவ
தற்குள் அவர் மனைவி கருவுற்றார். ஆரோக்கியமான
குழந்தை பிறந்தது.

ஆண் தன்மைக் குறைவுக்கு லாக்கனைனம் உபயோக
மாகு மென்று எந்த நூலிலும் இல்லை. ஆனல் இந்தக்கேசில்
அது ஆண் தன்மைக் குறைவைக் குணம் செய்திருக்கிறது.
இது நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றுகிற போதிலும்
நோயின் முழு விவரங்களைக் கொண்டே மருந்து தேர்ந்
தெடுக்கப் படவேண்டும் என்ற மாபெரும் உண்மையைப்
போதிக்கிறதல்லவா !

## 2. ஐயோ! கொலைசெய்யப் போகிறானே!!

1938-ம் ஆண்டிலே ஒரு நோயாளி என்னிடம் ஆலோ
சனை பெற வந்தார். அவருடைய வரலாறு கீழே கொடுக்கப்
பட்டுள்ளது.

சில காலத்துக்கு முன் நோயாளியின் நண்பரொருவர்
அவருக்கு அதிசய வேலைப்பாடுகள் கொண்ட அழகான
பிச்சுவாக்கத்தி ஒன்றை அன்பளிப்பாய் வழங்கினார்.
நோயாளி அக் கத்தியைப் பொன்னெனப் போற்றி வீட்டி
னுள் சுவரொன்றில் மாட்டித் தொங்க விட்டார். ஒருநாள்
வீட்டை விட்டு வெளியே சென்று திரும்பியவுடன் யாரோ
ஒரு திருடன் பூட்டை உடைத்து வீட்டைத் திறந்து போட்டி
ருப்பதைக் கண்டார். வீட்டில் வைத்திருந்த பணம், நகைகள்
முதலிய எதையும் திருடன் களவாடவில்லை. கத்தி மட்டும்
காணப்படவில்லை. இதனால் தன்னுடைய பகைவனோ அல்லது
வேறு யாரோ தன்னைக் கொல்லும் நோக்கத்துடனேயே அக்
கத்தியை எடுத்துப் போயிருக்கவேண்டுமென்ற எண்ணம்
நோயாளிக்கு ஏற்பட்டது. இந்த எண்ணம் நாளொருமேனி
யும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து அதனால்
நோயாளியின் மன அமைதி குலைந்து, தூக்கம் கெட்டு,
சளசள வென்று வாய் ஓயாமல் பேசும் குணமும் தோன்றி

யது. மூன்று நாட்களாகப் பைத்தியம் போல் இருந்து வருகிறார்.

இந்நோயாளிக்கு நான் லாகெஸிஸைத் (Lachesis) தேர்ந்தெடுத்து IM வீரியத்தில் ஒரு வேளை கொடுத்தேன். சுமார் 12 மணி நேரத்துக்குள் நோயாளிக்குக் குணம் தெரிந்தது. இரண்டு நாட்களில் முற்றிலும் குணமாகிப் பழையபடி ஆகிவிட்டார். சில நாட்களுக்கு முன் நான் அவரைச் சந்தித்தேன். கொலை செய்து விடுவானோ என்ற அச்சம் திரும்பி ஏற்படவில்லையென்று கூறினார்.

## 3. முதுகெலும்பு முறிவிலே

ஒரு மாத காலமாய் இடது புஜத்தில் வலி இருக்கிறதென்று 27 வயதுள்ள ஒரு நோயாளி 17-12-59ல் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். மின்விசை தாக்குவதைப்போல் வலி கொடூரமாய் இருப்பதுடன் தோள்பட்டைக்குத் தாவுகிறதாம். இரவு 9 மணியிலிருந்து காலை 7 மணிவரை வலி கடுமையாகி பகல் பொழுதில் தணிந்து இருக்கிறது. வலியினால் இரவில் தூக்கம் ஒழுங்காக வருவதில்லை.

வலியுடன் சேர்ந்திருந்த மற்ற கோளாறுகள்: 1. ஒரு வார காலமாக இடது கையின் கீழ்ப்பகுதியில் உணர்ச்சிக் குறைவும் பலவீனமும். 2. மாலையிலும் இரவிலும் தலைவலி. 3. சென்ற ஒரு வாரமாய் இரவு நேரத்தில் சுரம். 4. மாலையில் சிலுசிலுவென்று குளிரும் உணர்ச்சி. இக்குறி கடந்த ஒருமாதமாகவே இருக்கிறது. அனஸின் (Anacin) மாத்திரைகளையும் ஐஸையும் உட்கொண்டால் சௌகரியமாய்த் தோன்றுகிறது. 5. கண்களில் எரிச்சல். 6. ஏழுநாட்களாக மூத்திரம் பிரியும்போது மூத்திரத் துவாரத்தில் எரிச்சல்.

**நோயாளியின் முன் வரலாறு:**—ஒரு மாதத்துக்கு முன்பு 2, 3 நாட்கள் சேர்ந்தாற்போல் ஈரக்கசிவும் சில்லிப்பும் உள்ள தரையில் இடது பக்கமாய் ஒருக்களித்துப் படுத்துத் தூங்கியதாகவும் அதிலிருந்து புஜவலி தோன்றியதாகவும் தெரிய வந்தது.



**சிகிச்சை:**–நோயின் காரணத்தை ஆதாரமாய் வைத்து முதலில் **ரஸ்டாக்ஸை** 30 வீரியத்தில் ஒரு வேளையும், ஆறு மணி கழித்து IM வீரியத்தில் ஒரு வேளையுமாய்க் கொடுத்தோம். இதனால் கையில் இருந்த வலி, உணர்ச்சிக் குறைவு, பலவீனம் ஆகியவை ஓரளவு குறைந்தன. மறுபடி ரஸ்டாக்ஸை 10M வீரியத்தில் ஆறுமணிக்கொருதடவையாக 3 வேளைகள் கொடுத்தவுடன் இடது கையின் கீழ்ப்பகுதியில் உணர்ச்சிக் குறைவு முற்றிலும் மறைந்து விட்டது. அவ்விடத்தில் ஊசியால் குத்தினாலும் பஞ்சுப்பிசிரினால் தொட்டாலும் நோயாளியினால் உணர முடிந்தது. ஆனால் 10M வீரியத்தினால் அதற்கு மேல் பலன் ஏற்படவில்லை. ஆகவே மீண்டுமொரு முறை பரிசீலனை செய்ததில் **டல்கமாரா** ஏற்றதாய் இருக்குமென்பது புலப்பட்டது. ஆதலால் 28-12-59–ல் டல்கமாராவை 30 வீரியத்தில் மூன்று வேளைகள் கொடுத்தேன். 29-12-59-ல் நிலைமையில் மாறுதல் காணப்படவில்லை. அதனால் அம்மருந்தையே மீண்டும் கொடுத்தேன். 30–12-59 அன்று வலி குறைந்தது. அதாவது விடியற்காலை 2-30 மணியிலிருந்து 6 மணி வரையில்தான் இருந்தது. அன்றும் டல்கமாரா 30 மூன்றுவேளைகள் கொடுக்கப்பட்டன. 3–1–60 அன்று வலி மிகக் குறைவாய் தோள்பட்டைப் பகுதியில் மட்டுமே இருந்தது. 4-1-60 அன்று நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படாததால் தோள்பட்டை, முதுகெலும்பு இவ்விரண்டையும் எக்ஸ்–ரே (X-Ray) பிடித்துப்பார்க்க யோசனை கூறப்பட்டது. 5-1-60 ல் எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்தபோது முதுகுப்பகுதி முள்ளெலும்புகளில் முதலாவதாக இருக்கும் எலும்பின் இடதுகுறுக்குப்பாகத்தில் முறிவு காணப்பட்டது.

ஆறுமாதங்களுக்கு முன் கீழேவிழுந்து இடது தோள்பட்டையில் அடிபட்டதாகவும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டதாகவும் இதுவரை அவ்விஷயம் தனக்கு மறந்தே போய்விட்டதென்றும் நோயாளி இப்பொழுது சொன்னார். பிறகு நோயாளியை இரணசிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பினோம்.

இரணசிகிச்சை செய்யப்படவேண்டிய சந்தர்ப்பத்திலும்
நோயாளியின் துன்பங்களைக் கூடிய அளவு குறைக்க ஹோ
மியோபதி வைத்தியத்தில் முடியும் என்பதைக்காண்பிக்கவே
இக்கேசை இங்கு எழுதியிருக்கிறோம்.

## 4. கோழிகளைத் தாக்கும் தொற்றும் குணமுள்ள ஜலதோஷம்.

கோழிகளுக்கு ஏற்படும் திடீர் வகை நோய்களில் குரல்
வளை இழைப்பும் ஒன்று. ஒரு கோழிக்கு இந்நோய் தோன்றி
னுல் மிக விரைவில் எல்லாக்கோழிகளுக்கும் பரவும். பெரும்
பாலான கோழிகள் இறந்துபோவது சகஜம். காற்றுக்
குழாயின் மேற்பகுதியிலும் கண்களிலுள்ள சளிச்சவ்வுகளிலும்
வேக்காடு உண்டாகி நீர்க்கொள்ளும். நோய்க்குக் காரணம்
என்னவென்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. பாக்
டீரியா (Bacteria) எனப்படும் நோய்க்கிருமிகளே காரண
மென்று சிலர் சொல்கின்றனர். ஏதோ ஒரு தொற்று நோ
யில் நோயாளியின் உடலிலிருந்து வெளிப்படும் விஷப் பொ
ருள்களே காரணமென்று வேறுசிலர் கூறுகின்றனர்.

கோழிக்குஞ்சுகளையே இந்நோய் அனேகமாய்த் தாக்கு
கிறது. மப்பும் மந்தாரமுமுள்ள பருவநிலைகளிலும் சுட்ட
வெப்பநிலைகளில் திடீர் திடீரென்று அதிக மாற்றங்கள் ஏற்
படும்போதும் இந்நோய் தோன்றுவதாகக் கண்டுபிடிக்கப்
பட்டிருக்கிறது. கூண்டுகளில் அளவுக்கு அதிகமாய்க் கோழி
களை அடைத்துவைப்பதும், கூண்டுகளை நன்றாகச் சுத்தம் செய்
யாமல் வைத்திருப்பதும், நோய்தோன்றவும் பரவவும் ஆக்க
மளிக்கின்றன. நோய் மின்னல் வேகத்தில் பரவி பண்ணை
யிலுள்ள கோழிக்குஞ்சுகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல்
பிடிக்கிறது. கோழிகளுக்கு இரையும் தண்ணீரும் வைக்கப்
படும் பாத்திரங்கள் மூலம் நோய் பரவுகிறது.

**நோயின் குறிகள்:-** மூக்குத் துவாரங்களிலிருந்தும் கண்
களிலிருந்தும் வழக்கத்தைவிட அதிகமான அளவில் நீர்வடி
யும். அந்நீர் முதலில் தண்ணீரைப்போல நீர்த்து இருக்கும்.
பிறகு அவ்வுறுப்புக்களிலுள்ள மேல்தோல் உறிய ஆரம்பிப்
பதாலும் இரத்தத்திலுள்ள வெண் அணுக்கள் அவ்விடங்



களுக்கு வருவதாலும் கழிவுநீர் கெட்டியாகி சளியும் சீழும்
கலந்ததுபோல் மாறும். அதன்பிறகு கழிவுநீர் காய்ந்துகடின
மான மஞ்சள்நிறமுள்ள பொறுக்குகளாய் ஆகி மூக்குத்துவா
ரங்களை அடைத்துவிடுவதுடன் கண்களைத்திறக்கமுடியாத
படி இமைகளை ஒட்டிவிடும். சில சமயங்களில் வாயின்
உட்புறத்திலும் மஞ்சள்நிறமுள்ள பல திட்டுகள் காணப்பட
லாம். கண்களைச்சுற்றியும் கண்களின் மூலைகளிலும் வெ
ளிர்மஞ்சள் நிறமுள்ள காய்ந்த பொறுக்குகள் காணப்படலாம்.

**நோய் நிர்ணயம்:-** கோழிகளுக்கு ஏற்படும் பெரியம்மை
போன்ற நோயில் சிறுசிறு முண்டுகள் காணப்படும். இந்
நோயில் அத்தகைய முண்டுகள் ஏற்படுவதில்லை.

**நோய்த் தடுப்பு முறை; –** சுகாதாரமுறைகளைக் கையாள்
வது மிக அவசியம். ஆயினும் கோழிகளை வளர்ப்போர்
பெரும்பாலும் பிற்பட்ட வகுப்பைச்சார்ந்தவர்களாகவே இருக்
கின்றனர். அதனுல் அறியாமை, ஏழ்மை இவ்விருகாரணங்
களாலும் சுகாதாரமுறைகளைப் பின்பற்ற அவர்கள் தவறி
விடுகின்றனர்.

**சிகிச்சை:-** ஹோமியோபதி நீங்கலாக, நோய்கண்ட
கோழிகளை வெட்டிக் கொல்வதைத் தவிர வெற்றிகரமான
சிகிச்சை எதுவும் இல்லை. கோழிகளுக்குப் பற்பலமுறைகளில்
வைத்தியம் செய்வதற்காக எடுத்துகொள்ளப்படும் சிரமத்
தைக் கவனிக்கும்போது வெட்டிப்போட்டு விடுவதே மேல்
என்று கருதப்படுகிறது. அப்படியே சிரமம் எடுத்துக்கொண்
டாலும் மிகச்சிலவே பிழைக்கின்றன.

ஆனுல் ஹோமியோபதி வைத்தியமுறையில் கோழிகளை
வெட்டிக்கொல்லவேண்டிய அவசியம் இல்லாமல் குறிகளை
அனுசரித்துக் கொடுக்கப்படும் மருந்துகள் நல்ல பலனை
அளிக்கின்றன. **ஸ்பாஞ்சியா, லாகெஸிஸ், ஆர்ஸெனிகம்**
**அயோட்** ஆகிய இம்மூன்றும் மிகச்சிறப்பாய் உபயோகமா
கின்றன. பொதுவாக 3 அல்லது 12 வீரியத்திலேயே இம்
மருந்துகளை நான் உபயோகிக்கிறேன். இதற்குக் குறைந்த
வீரியங்களை எடுத்துக்கொள்வதில்லை. குடிப்பதற்கென
வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்பாத்திரத்தில் தேவைப்படும்
மருந்தை(மாத்திரை உருவில் இருந்தால் 12மாத்திரைகள் திரவ

உருவில் இருந்தால் 10, 12 சொட்டுகள்) கலந்துவிடுவேன். இத்தண்ணீரைக் குடிப்பதினுல் நூற்றுக்கு 60 வீதம் கோழிகள் பிழைத்து விடுகின்றன. நோயினுல் தாக்கப்படாத கோழிகளுக்கு நோய் வராமல் இருப்பதற்காக வாரம் மூன்று தடவைகள் வீதம் **ஆர்ஸெனிக் அயோடை** மேலே விவரித்துள்ளபடி தண்ணீரில் கலந்துகொடுப்பேன்.

**லாகெஸிஸை** 12 அல்லது 30 வீரியத்தில் அதன் குறிகள் தென்படும்போதும் கோழியின் கொண்டை முதலிய தோல்கள் கருஞ்சிவப்புநிறமாய் மாறும் ஆபத்தான சமயங்களிலும் உபயோகிப்பேன்.

எல்லாவிஷயங்களிலும் சுத்தமாய் இருப்பது மிக அவசியம். கோழிகளுக்குத் தீனியும் தண்ணீரும் கொடுக்கப்படும் பாத்திரங்களேயும், கூடை, பெட்டி முதலானவைகளேயும் உடனுக்குடன் டெட்டால் போன்ற நச்சுக்கொல்லி மருந்துகள் கலந்த தண்ணீரினுல் கழுவவேண்டும். கோழிகளே நெருக்கமாய் அடைத்துவைக்கக்கூடாது. இறந்த கோழிகளேத் தூரத்தில் ஆழமாய்க் குழிதோண்டிப் புதைக்கவேண்டும். எரித்துவிடுவது மிக நல்லது.

**ஆதாரம்:- ஜர்னல் ஆ:ப் ஹோமியோபதிக் மெடிஸின்.**

---

**தென் சென்னை**

**பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்**

"பால நிலேயம்"

**77, ராமகிருஷ்ண மடம் ரோடு, மதருஸ்-28.**


ஜுலே மாதம் 2-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலே 4 மணிக்கு ஜை. சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் நடைபெறும்.

எல்லோரும் தவருமல் கூட்டத்திற்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேம்.

டி. ஆர். வி. ராமன்,
காரியதரிசி.

அங்கத்தினர் கட்டணம்—

பிரவேச கட்டணம் ரூ. 1/-; சந்தா கட்டணம் மாதா மாதம் ரூ. 1/-; 6 மாதத்திற்கு ரூ. 5/-; 1 வருடத்திற்கு ரூ. 10/-



இவ்வருடம் 12-வது நேர்முக வகுப்பில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள்.

# எங்கள் சொந்தத் தயாரிப்பு மகவிற்காம் மருந்துகள்

* **கிட்டிமிக்ஸ்**

  குழந்தைகளுக்கென்றே தயார் செய்யப்பட்ட டானிக். வயிற்று வலி, அசீரணம், சுரம், வயிற்றுப்போக்கு முதலிய கோளாறுகளுக்கும் உபயோகிக்கலாம்.

* **பயோலாக்ஸ்**

  சுகபேதி மருந்து.

* **ஹோலிஹோ**

  குழந்தைகளின் ஈரல், குலை கட்டிகளுக்கு.

* **ஸாண்டோஸின்**

  வயிற்றுப் பூச்சி, குடல் பூச்சிகளைக் கொல்வது மட்டுமின்றி பூச்சிகள் உற்பத்தியாகும் சரீர வாகையே மாற்றும்.

* **ஸில்டோனிஸ்**

  டான்சில் நோய்க்கு ஆபரேஷன் செய்வது மிகக் கெடுதல் என்று எல்லா டாக்டர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் வேறு ஒரு வைத்திய முறையிலும் இதற்கு மருந்து கிடையாது. நமது ஸில்டோனிஸ் சாப்பிட்டு வந்தால் ஆபரேஷனே தேவையாயிராது.

விலை விபரங்களுக்கு கேட்லாக்கைப் பார்க்கவும்.

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலயம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு,
மதராஸ்-1.


# உணவும், பத்தியமும்

(மே மாதம் 14-ம் தேதி தென் சென்னை பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் மாதாந்திர கூட்டத்தில் டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம் பேசியது.)

உலகம் பல விதம். பல விஷயங்களில் இப் பழமொழி உண்மையாகவே இருக்கிறது. ஆனால் ஒரு சில விஷயங்களில் உலகம் ஒரே விதமாகவும் இருக்கிறது. உலகம் என்று இங்கு நான் குறிப்பிடுவது உலகத்தில் வாழும் உயிர் இனங்களையே. மனிதன், மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், புழுக்கள் ஆகியவைகளை மட்டுமின்றி நடமாட்டம் இல்லாத மரம், செடி, கொடி, புல்பூண்டு ஆகியவைகளையும் உயிர் இனங்களில் சேர்த்திருக்கிறேன். தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம். எல்லாவகை உயிர் இனங்களுக்கும் ஊண், உறக்கம் அவசியம் தேவை. ஆகவே நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில் வாழ்ந்தாலும் வானிலே பறந்தாலும் எவ்வளவோ விஷயங்களில் வேற்றுமை இருந்தாலும் ஊண், உறக்கம் ஆகிய இவ்விரு விஷயங்களிலே எல்லா உயிர்களுக்கும் ஒற்றுமை இருக்கிறதல்லவா !

ஊண் என்பதைப்பற்றியே இன்று நான் பேசப்போகிறேன். உறக்கத்தைப் பிறகு பார்த்துக்கொள்வோம்.

ஊண் அல்லது உணவை உயிர் இனங்கள் எதற்காக உண்ண வேண்டும்; எதை உண்ண வேண்டும்; எப்படி உண்ண வேண்டும்; என்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டு அக்கேள்விகளுக்கு விடையளித்தால் விஷயம் தெள்ளென விளங்கும்.

எதற்காக உண்ண வேண்டுமென்பது முதல் கேள்வி.

உயிர் இனங்களைப் பிடிக்கும் பிணிகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அவைகளில் பல அதிகத் துன்பம் தருவதில்லை. சில நாட்களிலோ மாதங்களிலோ கடுமையாகவோ

இலேசாகவோ இருந்து விட்டுப் பல சமயங்களில் தகுந்த மருந்துகளை உட்கொள்வதன் மூலமும் சில சமயங்களில் தாமாகவும் கூட மறைந்து விடுகின்றன பல நோய்கள். யானைக்கால், குஷ்டம் க்ஷயம், காக்கைவலி போன்ற ஒருசில பிணிகள் தக்க மருந்துகளை உட்கொண்டாலும் சாகும் வரையில் நோயாளிக்கு எல்லையில்லாத் தொல்லைகளைத் தருகின்றன. ஆனால் உலகிலே இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ள பிணிகளில் உயிர் இனங்கள் எல்லாவற்றையும் பீடிக்கும் குணமுள்ள மாபெரும் பிணி யொன்று இருக்கிறது. அலோபதி, ஹோமியோபதி, சித்தம், ஆயுர்வேதம் இப்படிப் பலப்பல வைத்திய முறைகள் கண்டுபிடிக்கப்பட்டும் அப் பிணியை அறவே அழிக்கவல்ல மருந்து கிடைக்கவில்லை. கிடைக்கவும் கிடைக்காது. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஒவ்வொரு நாளும் உயிர் இனங்களை வாட்டி வதைக்கும் அப் பிணியைப் "பசி" என்று சொல்கிறோம். பசியை ஓர் பிணியாகக் குறிப்பிடுவது நான் அல்ல, நம் முன்னோர்களே. பசிப்பிணியை அடக்கவே எல்லோரும் உணவை உட்கொள்ள வேண்டியிருக்கிறது. பசி உண்டாகக் காரணமென்ன?

வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும், உறங்கினாலும் உறங்காவிட்டாலும், உடல் உறுப்புக்களின் வேலைகள் இடைவிடாமல் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இருதயம் துடித்துக்கொண்டே இருக்கிறது. சுவாசகோசங்கள் காற்றை உள்ளிழுத்து வெளிவிட்ட வண்ணமாய் இருக்கின்றன. ஓய்வோ ஒழிவோ இல்லாமல் நடைபெற்று வரும் இவ் வேலைகளால் உடல் அணுக்கள் தேய்ந்து பழுது படுகின்றன. அவ்வணுக்களை உடலிலிருந்து வெளியேற்றிப் புதிய அணுக்களை உற்பத்தி செய்ய வேண்டி இருக்கிறது உடல். இவ்வாறு பற்பல வேலைகளால் சோர்வடையும் உடலுக்கு அச்சோர்வை நீக்கிப் புத்துயிர் அளிப்பது உணவேயாகும். தனக்கு உணவு தேவை என்பதை அறிவிக்கவே உடலானது வயிற்றிலே பசி என்னும் உணர்ச்சியைத் தோற்றுவிக்கிறது.

பசியைக் கொடியதோர் பிணியென்று குறிப்பிட்டிருப்பது ஒரு விதத்தில் சரிதானென்றாலும் உடலைப்பற்றிய வரை அது அவசியமாய் இருந்தே தீரவேண்டியிருக்கிறது. பசி



உணர்ச்சி இல்லையென்றால் என்ன நேரும்? ஒருவரும் உணவை உட்கொள்ள மாட்டார்கள். இதனால் உடல் தன்னைத் தானே உணவாக உட்கொண்டு சில நாட்களுக்குத் தன் வேலையை நிறுத்தாமல் செய்துவரும். முதல் பலியாக எடுத்துக் கொள்ளப்படுவது உடலிலுள்ள கொழுப்பு. கொழுப்பு முழுவதும் கரைந்தவுடன் தசைகளையும், கடைசியாக எலும்புகளையுங் கூட உடல் உட்கொள்ளத் துவங்குகிறது. இதனால் தசைகள் இளைத்து மெலிந்து விடும்; எலும்புகளின் கனம் குறையும்; உடலிலுள்ள சத்துப் பொருள்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்தவுடன் உயிர் நீங்கி விடுகிறது. ஆகவே உயிரையும் உடலையும் பாதுகாக்க இயற்கையினால் உயிர்களுக்கு வழங்கப்பட்ட ஓர் வரமே என்று பசியைச் சொல்லலாமல்லவா?

பசியை அடக்கவும், உடலை வளர்க்கவும், பாதுகாக்கவும். உணவு தேவைப்படுகிறது. உணவின் அவசியத்தைப் பற்றி நம் நாட்டுப் பொக்கிஷங்களாகிய வேதங்களில் உபநிஷதங்கள் என்ற பிரிவில் அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. உணவினால் உயிர்கள் யாவும் தோன்றுகின்றன; தோன்றியவை உணவினால் வளர்கின்றன; ஆதலால் உணவைப் பழிக்கக் கூடாது; எப்பாடு பட்டாவது உணவைப் பெருக்க வேண்டும். தற்காலத்தில் "உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று நமது அரசாங்கம் கூப்பாடு போடுவது அப்படி யொன்றும் புதிய விஷயமல்ல. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர்கள் கண்டு பிடித்ததே அது. "தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் சகத்தினை அழித்திடுவோம்" என்று உலகினுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார் நமது அமரகவி சுப்ரமண்ய பாரதியார். உணவை ஏன் உண்ண வேண்டுமென்ற கேள்விக்கு விடை அளித்தாகிவிட்டது.

இரண்டாவது எதை உண்ணவேண்டும் என்ற கேள்வி வருகிறது. பசி காதை அடைக்கிறது; கண்களை இருட்டுகிறது; உடல் சோர்ந்து நடை தள்ளாடுகிறது; எல்லாம் பசி

யின் கொடுமை; உணவு கிடைககாத திண்டாட்டம்; இந் நிலைக்கு உள்ளான தமிழ்க்கவி ஒருவர் என்ன சொன்னார் தெரியுமா! இத்தனை கஷ்டத்திலும் அவர் தம்முடைய கவி பாடும் திறனையோ அல்லது கவிகளுக்கு இயல்பாயுள்ள குறும்பையோ இழந்து விட வில்லை. தம்மைப் படைத்த கடவுள் "கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா" என்று அவனைப்பற்றி குறை கூறப் புறப்படுகிறார். புலவரின் குறைக்கு இடம் இல்லாமல் கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்கும் கலையைக் கடவுள் நமக்குக் கற்பித்திருந்தாரானால் இன்று உலகிலுள்ள பல பிரச்சினைகள் தீர்ந்துபோய் இருக்கும். (Birth Control, etc, no place.) இவ்வளவு பேச்சுக்கு இடம் இல்லை.

எதை உண்ண வேண்டும் என்ற விறுவும் விடையும் முழுக்க முழுக்க மனிதனைப் பற்றியதே. மனிதனைத்தவிர வேறு எந்த சீவராசியும் உணவைப்பற்றி அதிகமாகக் கவலைப் படவில்லை. தாவரங்கள் அவை முளைத்த இடத்தை விட்டுத் தாமாக வேற்றிடம் செல்வது கிடையாது. ஆகவே மண்ணி லிருந்து வேர்களின் மூலமும், விண்ணிலிருந்து இலைகளின் மூலம் தேவையான உணவைப் பெறும் சக்தியை அவை களுக்கு இயற்கை அன்னை அளித்திருக்கிறாள். ஒரே மண்ணில் விளைந்தாலும் ஒவ்வொரு வகைத் தாவரமும் தனக்கு வேண்டிய உணவு வகையைத் தேடிப் பெறுகிறது. பாகலின் கசப்பும் புளியின் புளிப்பும் மண்ணுக்குத் தக்கபடி வேறுபடுவது கிடையாதல்லவா?

நடமாட்டமுள்ள உயிர்வகைகளில் மனிதனைத் தவிர மற்ற யாவும் பெரும்பாலும் பசியை நீக்கவே உணவை நாடுகின்றன. இயற்கையில் கிடைக்கும் உணவுகளையே பெரும்பாலும் உண்கின்றன. பசி நீங்கிவிட்டால் மீண்டும் பசி ஏற்படும்வரை அவை உணவை நாடுவதில்லை. என் னென்ன பொருள்கள் உடலுக்கு நன்மையளிக்கும் அல்லது கெடுதலை விளைவிக்கும் என்று அறியும் சக்தி பிராணி



களுக்கு இயற்கையிலேயே இருக்கிறதென்று தெரிகிறது. மாடுகள் சிலவகைப் புற்களையும், செடி, கொடிகளையும், தழை களையும் முகர்ந்து விட்டுத் தின்னாமல் போய் விடுவதை நாம் பார்க்கிறோம். மாமிசபக்ஷிணிகளான புலி, சிங்கம் போன் றவை மாமிச உணவை நாடும் பிராணிகளைத் தின்பது கிடையாது. மான், ஆடு, மாடு முதலிய சாக பக்ஷிணி களையே அவை உண்கின்றன. காட்டில் வாழ் பிராணிகள் வேனல் காலத்தில் தன் உடலில் உள்ள உப்பு சத்து வேர்வை யால் குறைந்து போனதும், உப்புள்ள பாராங்கற்களைத் தேடிச் சென்று நக்குகின்றன. ஆகவே மனிதனைத் தவிர மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் தமக்கேற்ற உணவைத் தேர்ந்தெடுக்கும் சக்தி இயற்கையில் அமைந்திருக்கிறது.

நெருப்பையும், அதன் துணை கொண்டு உணவுப்பொருள் களைச் சமைத்து உண்ணலாம் என்பதையும் கண்டுபிடிப்ப தற்கு முன் மற்ற பிராணிகளைப் போலவே மனிதர்களும் இயற்கையில் கிடைக்கும் உணவுகளை அப்படியே உட் கொண்டு வந்திருக்கவேண்டு மென்பது தெளிவு. சமைப்பதி னால் உணவுக்குப் பல சமயங்களில் சுவை அதிகமாகிறது. உண்ணத் தகுதியற்றதாய் இருக்கும் பல பொருள்கள் சமைத்த பிறகு உண்ணும் தகுதியைப் பெறுகின்றன. இவை யாவும் சமையலினால் ஏற்படும் நன்மைகள். ஆயினும் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்ட பிறகு நல்ல உணவை யும் கெட்ட உணவையும் வாசனை மூலம் அறிந்துகொள்ளும் இயற்கைச் சக்தியை மனிதன் இழந்து விட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது.

நோய் வராமல் உடலைக் காப்பதற்கும், பசியைத் தணிப்பதற்கும், உடலிலுள்ள அணுக்களின் சத்துக்கள் குறைவுபடாமல் இருப்பதற்குமே உணவு உண்ணவேண்டும். "உயிர் வாழவே உண்ணவேண்டும். உண்பதற்காக உயிர் வாழாதே" என்று பொருள்படும் ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. உயிர் வாழவே உண்ணவேண்டு மென்பதில்

தவறு இல்லை. அதே போல் உயிர் வாழும் வரை நோய் நொடிகள் வராமல் ஆரோக்கியமாய் இருக்கவேண்டு மென்பதிலும் தவறு இல்லை. "நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்."

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களில் ஒரு கணிசமான பகுதி உணவுப் பிழைகளால் தான் நேருகின்றது. உணவுப் பிழைகள் பல காரணங்களால் ஏற்படுகின்றன. அவைகளில் ஏழ்மை, அறியாமை, நாக்குக்கு அடிமையாகுதல் ஆகியவை களை முக்கியமாகக் கூறலாம். ஏழ்மை காரணமாக ஏற்படக் கூடிய உணவுப்பிழைகளை ஏழ்மையை அகற்றினால் நீக்கிவிட லாம். அறியாமையினால் நிகழும் உணவுப்பிழைகளை அறிவு புகட்டுவதின் மூலம் போக்கலாம். ஆனால் நாக்குக்கு அடிமை யான காரணத்தால் நேரும் உணவுப்பிழைகளை நாக்கை அடக்கினால்தான் நீக்கலாம். உணவுப்பிழைகளை விலக்கி விட்டால் பெரும் பாலான நோய்கள் மனிதனை அணுக மாட்டா.

உடல் வளர்ச்சியடையவும், உடலில் பழுதடைந்த அணுக் கள் வெளியேற்றப்பட்டுப் புதிய அணுக்கள் தோன்றவும், நோய் வராமல் இருக்கவும் கீழுள்ள பலவகைச்சத்துக்கள் ஏற்ற அளவுகளிலே நாம் உண்ணும் உணவில் இருக்க வேண்டும்.

1. அல்புமென் எனப்படும் ஊன்சத்து.
2. கார்போ-ஹைட்ரேட் எனப்படும் சர்க்கரைச்சத்து.
3. ஃபாட் (Fat) எனப்படும் கொழுப்புச்சத்து.
4. மினரல் ஸால்ட்ஸ் எனப்படும் உலோகச்சத்துக்கள்.
5. வைடமின்ஸ் எனப்படும் உயிர் ஊட்டிகள்.

இவ்வைந்து சத்துக்களில் ஒவ்வொன்றும் உடலுக்கு எவ் விதம் பயன்படுகிறதென்று பார்ப்போம்.



## 1. ஊன்சத்து.

இச்சத்துக்கு ப்ரோடீன் என்று ஆங்கிலத்தில் பெயர். அப்பெயரைத் தமிழாக்கிப் புரதச்சத்து என்றும் சொல்வ துண்டு. பழுதடைந்த உடல் அணுக்களை அகற்றிப் புதிய அணுக்களைத் தோற்று விக்கவும், உடலுக்கு வளர்ச்சி, வலிமை ஆகியவைகளை அளிக்கவும் செய்கிறது ஊன்சத்து. உடலிலுள்ள சதைகள் இவ்வூன் சத்தினால்தான் ஆக்கப்பட் டுள்ளன. இரத்தத்திலும் இச்சத்து காணப்படுகிறது.

## 2. சர்க்கரைச்சத்து

உடலுக்கு வேண்டிய உஷ்ணத்தையும், சக்தியையும் இச்சத்தே அளிக்கிறது. நீராவியைக்கொண்டு இயங்கும் எஞ்சின்களுக்குத் தண்ணீரை நீராவியாக்க கரி அல்லது விறகு தேவைப்படுகிறது. அதைப்போல், நம் உடலுக்குச் சர்க்கரைச்சத்து எரிபொருளாகப் பயன்படுகிறது. இச்சர்க் கரைச்சத்து எரிந்தால்தான் உடல் வேலைகள் யாவும் ஒழுங் காய் நடைபெறும்.

சர்க்கரைச்சத்து இருவகைகளாய் இருக்கிறது. கரும்பு, தேன் போன்றவைகளில் சர்க்கரைச்சத்து அப்படியே காணப் படுகிறது. இது ஒருவகை. அரிசி, கோதுமை, கேழ்வரகு முதலிய தானியங்களில் ஸ்டார்ச் எனப்படும் கஞ்சிப்பசை இருக்கிறது. இப்பசையானது நம் உடலிலுள்ள நீர்களால், முக்கியமாக வாயில் ஊறுகின்ற உமிழ்நீரினாலும், சிறுகுடலின் தலைப்பகுதியில் சுரக்கும் நீரினாலும் சர்க்கரைச் சத்தாக மாறிவிடுகிறது.

## 3. கொழுப்புச்சத்து.

சர்க்கரைச் சத்தைப் போலவே கொழுப்புச்சத்தும் உடலுக்கு உஷ்ணத்தையும், சக்தியையும் தருகிறது. ஆயினும் இரண்டுக்கும் உள்ள ஒரு வித்தியாசத்தை நாம் கவனிக் கவேண்டும். அதாவது சர்க்கரைச் சத்தைவிடக் கொழுப்புச்

சத்து இரண்டேகால் மடங்கு அதிகமான உஷ்ணத்தை உன் டாக்குகிறது.

## 4. உலோகச்சத்துக்கள்.

மனித உடலில் சிலவகை உலோகச்சத்துக்களும் உப்புச் சத்துக்களும் இருக்கின்றன. ஹோமியோபதியுடன் ஏறக்குறைய ஒன்றறக்கலந்துவிட்ட பயோகெமிஸ்டிரிவைத்தியத் தத்துவப்படி மனிதஉடலில் 12 வகையான உயிர் உப்புக்கள் இருப்பது உங்களுக்கு தெரியும். 'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்ற பழமொழிக்கு இணங்க இச்சத்துக்கள் மிகக்குறைவான அளவுகளிலேயே இருந்தபோதிலும் அவை யாவும் உடலுக்கு மிகவும் அவசியமானவை. ஆயினும் ஸோடியம்க்ளோரைட் எனப்படும் சமையல் உப்பு, சுண்ணும்பு, பாஸ்வரம், இரும்பு ஆகிய இந்நான்கும் மிகமிக முக்கியமான வைகளாய் இருக்கின்றன.

எலும்புகளும் பற்களும் ஒழுங்காய் வளரவும் உறுதியாய் இருக்கவும், சதை, இரத்தம், ஈரல் ஆகியவைகளின் அணுக்கள் உற்பத்தியாகவும் இவ்வுப்புச்சத்துக்கள் உதவுகின்றன.

மற்றெல்லா உப்புக்களையும் விடச் சமையல் உப்பையே நாம் அதிக அளவில் உட்கொள்கிறோம். அது உணவுக்குச் சுவை தருகிறது. இரைப்பை நீரில் ஹைட்ரோ-க்ளோரிக் அமிலத்தை உற்பத்திசெய்கிறது. சுண்ணும்புச்சத்து பசியை உண்டாக்குகிறது. உணவை எளிதில் சீரணிக்க உதவுகிறது. இரத்தம் தரம் குறையாமல் இருக்க இரும்புச்சத்து பயன்படுகிறது. சுண்ணும்புச்சத்தைப்போலவே பாஸ்வரச்சத்தும் எலும்புகளும் பற்களும் நன்ருய் வளர்ச்சிபெற்று உறுதியாய் இருக்க உதவுகிறது.

## 5. உயிர் ஊட்டிகள்

உடலை ஆரோக்கியமாய் வைத்திருக்க மேலுள்ள பல்வகைச் சத்துக்களுடன் உயிரூட்டிகள் என்று கூறப்படும்



சத்துக்களும் தேவை என்று சமீபகாலத்தில் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுயிரூட்டிகளே நாம் உண்ணும் உணவிலுள்ள பொருள்களை இரத்தமாய் மாற்றுகின்றன. இன்றுவரை உடலில் ஐந்துவகையான உயிரூட்டிகள் இருப்பதாகத்தெரிய வந்திருக்கிறது. அவை ஒவ்வொன்றுக்கும் ஆங்கில எழுத்துக்களாகிய A, B, C, D, E, என்று பெயரிடப்பட்டுள்ளன.

A உயிரூட்டி உயிர் வாழ்வதற்கு மிக அவசியமானது. நோய் வராமல் பாதுகாப்பது, மேல் தோலுக்கு அழகைத் தருவது, நோய்க்கிருமிகளைக் கொல்லும் வல்லமையை உடலுக்கு அளிப்பது ஆகியவை இதன் வேலைகளாம்.

B உயிரூட்டி நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது. இருதயத்தைப் பலமுள்ளதாய்ச் செய்கிறது. பெரிபெரி, குடல் நோய்கள், பசிகுறைவு, மலச்சிக்கல் போன்ற நோய் நொடிகளை நீக்குகிறது.

C உயிரூட்டி எலும்புகளுக்கும் பற்களுக்கும் வலிமையைத் தருகிறது. இதைத்தவிர நாம் உண்ணும் உணவிலுள்ள ஊன் பொருள்களை உடலில் சேர்க்க உதவுகிறது. காயங்களும் எலும்பு முறிவுகளும் விரைவில் ஆற வழிசெய்கிறது. பல் ஈறுகள் பலமாய் இருக்கவும் இரத்தம் நீர்த்துப்போகாமல் இருக்கவும் உடல் உறுப்புகளுக்குக்களைப்பு ஏற்படாமல் இருக்கவும் தேவைப்படுகிறது.

D உயிரூட்டி எலும்புகளையும் பற்களையும் உறுதியாய் வைத்திருக்கிறது.

E உயிரூட்டி வமிசி விருந்தி அற்றுப் போகாமல் இருக்க உதவுகிறது.

எதை உண்ணவேண்டுமென்ற கேள்விக்கு இதுவரை அளித்த விடைபோதுமென்று நினைக்கிறேன். மேலும் விரி

வாய்க்கூற இப்போது அவகாசமில்லை. ஆதலால் எப்படி உண்ணவேண்டுமென்ற அடுத்த கேள்விக்குப் போகிறேன்.

"ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாய்
ஒருநாளும் என்னோவறியாய் இடும்பை கூர்என் வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது"

என்று நம் அவ்வையார் தம் வயிற்றைக் குறை கூறியிருக்கிறார். எல்லோருடைய வயிறும் அப்படித்தான். ஒருவேளைக்கு வயிற்றைப் பட்டினிபோடவும் முடிவதில்லை. இரண்டுவேளை உணவைச் சேர்ந்தாற்போல் அடைந்துவிட்டுக் கவலையில்லாமல் சிறிதுநேரம் இருக்கலாமென்றால் அதற்கும் வயிற்றினுள் இடமில்லை. ஆகவே வயிறு கொள்ளும் அளவிலேயே உணவின் அளவு இருக்கவேண்டும். அந்த அளவு உணவிலே உடலுக்குந் தேவையான எல்லாவகைச் சத்துப் பொருள்களும் வேண்டிய அளவுகளில் இருக்கவேண்டும். இவ்விதம் உணவை உட்கொண்டு வந்தால் நோய்களுக்கு இடம் ஏற்படாது.

உணவின் அளவு, ஒருவரின் வயது, உடல் உழைப்பு, உடலின் பருமன், வாழும் நாட்டின் தட்பவெப்பநிலைகள் ஆகியவைகளைப்பொறுத்ததாய் இருக்கவேண்டும். உடலுக்கு வேண்டிய உணவின் அளவை அதனால் உடலில் உண்டாகும் —வெப்பத்தைக்கொண்டு பௌதிகசாஸ்திர முறையில் கணக்கெடுக்கின்றனர். ஒரு கிலோகிராம் தண்ணீரின் சூட்டை ஒரு டிகிரி அதிகமாய்ச் செய்வதற்குச் செலவாகும் வெப்பத்தை அளவாய்க்கொண்டு ஒவ்வொருவகை உணவிலும் எவ்வளவு வெப்பத்திறன் இருக்கிறதென்று அறியலாம். மேற்கூறிய அளவை Calorie என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். தமிழில் கனலி என்று அழைக்கலாம். ஒரு கிராம் எடையுள்ள ஊன் சத்தில் 4 கனலிகளும், சர்க்கரைச்சத்தில் 4 கனலிகளும்,



கொழுப்புச்சத்தில் 9 கனலிகளும் இருக்கின்றன. ஒருவாரத்துக்கு மேற்பட்டும் எட்டு மாதங்களுக்கு உட்பட்டுமுள்ள குழந்தைகளுக்கு 200 முதல் 700 கனலிகளைக் கொடுக்கக்கூடிய உணவுவேண்டும். ஒருவயதுக்கு மேலும் 5 வயதுக்குக் கீழுமுள்ள குழந்தைகளுக்கு 800 முதல் 1000 கனலிகள்வரை வேண்டும். 12 வயதுக்குமேல் 16 வயதுவரை 1300 முதல் 2100 கனலிகள் வரை வேண்டும். வயது வந்தவர்களுக்கு 2100 லிருந்து 2600 வரை வேண்டும். மிகக் கடுமையான உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு 3000 கனலிகள் கூட வேண்டி இருக்கும்.

நாம் உண்ணும் தானியங்கள், காய்கறிகள், பழங்கள், விதைகள் இவை ஒவ்வொன்றிலும் என்னென்ன சத்துக்கள் என்னென்ன அளவுகளிலே இருக்கின்றன என்பது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்விவரங்களை இங்கு தருவது சாத்தியம் இல்லை. அவசியமுமில்லை. சுருக்கமாக வயது வந்த ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 3 அவுன்ஸ் எடையுள்ள ஊன் சத்துப்பொருளையும், 2½ அவுன்ஸ் கொழுப்புப்பொருளையும், 12 அவுன்ஸ் சர்க்கரைச் சத்தையும் உட்கொள்ளவேண்டும். உணவுப்பொருள்களைப் பக்குவப்படுத்தும்போது அப்பொருள்களிலுள்ள சத்துக்களை வீணாக்காமல் கவனிக்கவேண்டும். பசிஇல்லாதபோது உணவு உட்கொள்வது கூடாது. அதே போல நீண்ட நேரம் பசியை அலட்சியம் செய்துகொண்டிருக்கவும் கூடாது. உண்ணும்போது மனம் சந்தோஷமாய் இருக்கவேண்டும். கோபதாப உணர்ச்சிகள் உள்ளபோது சாப்பிடுவது கெடுதலை உண்டாக்கும்.

பத்தியம் என்பது ஒரு வடமொழிச் சொல். நன்மை தரக்கூடியது என்று பொருள்கூறலாம். ஆகவே நோய் உள்ளபோதுதான் பத்தியம் அனுசரிக்கப்படவேண்டும் என்று எண்ணுவது சரியல்ல. ஆயினும் நோயுற்றிருக்கும் காலங்களில் நோயாளிக்குக்கொடுக்கப்படும் உணவுகளைப்பற்றிய கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுவதற்கே தற்காலத்தில் பத்தியம் என்ற சொல்லை நாம் உபயோகித்து வருகிறோம். நோய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உணவுவிஷயங்களில் கட்டுப்

பாடு அவசியமே. இல்லாவிட்டால் உடலுக்குத் தீமை விளைவது நிச்சயம். நோய் இல்லாதபோது உணவுக்கட்டுப்பாடுகளை மீறினால் தீங்கு நேருமாயினும் அதைத் தாங்கிக் கொள்ள உடலுக்கு ஓரளவு சக்தி இருக்கிறது. நோயுற்ற காலத்திலோ உடலின் சக்தி குன்றியிருக்கிறது. ஆகவே அச்சமயத்தில் உணவுக்கட்டுப்பாடுகளை மீறினால் நோய் மிகக்கடுமையாகி உயிருக்கு ஆபத்து நேரலாம்.

ஆயுர்வேத வைத்திய முறையில் பத்தியம் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது. உப்பில்லாப்பத்தியம், புளியில்லாப் பத்தியம் ஆகியவை எல்லோருக்கும் தெரிந்தவை. ஹோமியோபதியில் பத்தியங்களுக்கு அவசியமில்லையென்று பலர் நினைக்கின்றனர். ஆனால் அது சரியல்ல. ஹோமியோபதியிலும் பத்தியங்கள் அவசியமே. அவைகளைப் பின்பற்றினால் நோய்கள் விரைவில் நீங்குகின்றன என்பதை அனுபவம் மெய்ப்பிக்கிறது.

ஹோமியோபதி வைத்திய முறையில் மருந்து சாப்பிடும்போது காப்பி, டீ, புகையிலை, வாசனைப் பொருள்கள், மற்ற மருந்துகள், மருந்துச்சரக்குகள் ஆகியவைகளைத் தவிர வேறு எவ்விதப் பத்தியமும் தேவை இல்லையென்று சிலர் கூறலாம். "பகுத்தறிவை உபயோகித்துப்பாருங்கள்" என்று தான் அவர்களுக்குப் பதில் கூறுவேன். உதாரணமாக நம் வாயில் புண் இருக்கிறது; அப்போது உப்பு, உறைப்பு, புளிப்புச்சுவையுள்ள உணவை உட்கொண்டால் வாயினுள் எரிச்சல் தோன்றுவதுடன் புண்ணும் அதிகமாகிறது. ஆகவே இச்சமயத்தில் உப்பு, உறைப்பு ஆகியவைகளை விலக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் நோய் விரைவாய் நீங்குமென்று எதிர்பார்க்கமுடியாது. இதிலிருந்து நோயாளியின் உடலுக்குத்தீங்கு செய்யாமல் நோயை விரைவில் நீக்கவும் உதவும் துணைச் சிகிச்சையே பத்தியமாகுமென்பது சொல்லாமலே தெரியவரும்.

அபிஸ்மெல்லிபிகா கொடுக்க வேண்டிய கேசுகளில் உப்பில்லாப் பத்தியம் இருந்தால் நோய் சீக்கிரம் குணமாகிறது.



நோய்கள் பலவாக இருக்கின்றன. ஆதலால் பத்திய முறையும் பலவாகவே இருக்கிறது. ஏற்கனவே கூறியபடி நம் பகுத்தறிவை உபயோகித்துப் பார்த்தால் குறிப்பிட்ட ஒரு நோய்க்கு எவ்வகையான பத்தியம் ஏற்றதென்பது புலப்படும். ஆயினும் முக்கியமான சில நோய்களில் அனுசரிக்கப்படும் பத்திய முறைகளைக் கூறுகிறேன்.

முதலில் சுரங்களை எடுத்துக்கொள்வோம். எந்தவகைச் சுரமாக இருந்தாலும் அச்சமயங்களில் சீரணசக்தி குறைந்துபோய்விடுகிறது. இது ஏன் தெரியுமா? உடலிலுள்ள நோய்க்கிருமிகளை வெளியேற்ற உடல் முழுவதும் வழக்கத்தை விட அதிகமான அளவில் இரத்த ஓட்டம் நடைபெறுகிறது. இதனால்தான் உடலின் சூடு அதிகமாகி "சுரம்" என்று நாம் சொல்கிறோம். உண்ணும் உணவைச் சீரணிக்க வயிற்றுக்கு அதிக இரத்தம் செல்லவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். உடம்பில் அதிக இரத்தம் ஓடவேண்டிய சமயத்தில் உணவைச் சீரணிக்கத் தேவையான அளவு இரத்தம் வயிற்றுக்குச் செல்வதில்லை. ஆதலால் எளிதில் சீரணமாகக்கூடிய, இலேசான உணவுகளையே உண்ணவேண்டும். அதாவது உணவு திரவ உருவில் இருக்கவேண்டும். புழுங்கல் அரிசிக்கஞ்சி, அரிசிப் பொரிக்கஞ்சி, பார்லி அரிசிக்கஞ்சி, ஆரஞ்சுப்பழச் சாறு ஆகியவைகளையே கொடுக்கலாம். சர்க்கரைக்குப் பதிலாக குளுகோஸைச் சற்றுத் தாராளமாகவும் கஞ்சியுடன் சேர்த்துவந்தால் பலவீனம் அதிகமாய் ஏற்படாது. ஐஸ் போட்ட தண்ணீரைக் கொடுப்பது கூடாது. அதைக் கொடுத்த உடனே தாகம் அடங்குவதுபோலத் தோன்றினாலும் பிறகு தாகம் முன்னைவிட அதிகமாகும். வடிகட்டிக்காய்ச்சிய நீரை ஆறவைத்து வேண்டும்போதெல்லாம் தாராளமாகவும் கொடுக்கலாம். அதனால் கெடுதல் இல்லை. சுரத்துடன் சீரண சம்பந்தமுள்ள கோளாறுகள் இல்லையென்றால் பசும்பாலைக் கொடுக்கலாம். பால் ஒத்துக் கொள்ளாவிட்டால் வே (Whey) செய்து கொடுப்பது நல்லது.

அடுத்ததாக வயிற்றுக் கோளாறுகளை, அதாவது உணவுச் செரிமானத்தைப் பற்றிய கோளாறுகளை எடுத்துக் கொள்வோம். இக்கோளாறுகளில் பத்தியத்தை ஒழுங்காக அனுசரித்தால்தான் நோய் நீங்கும். அது இல்லாமல் நாம் எவ்வளவு பாடுபட்டு ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தாலும் பயனில்லை. எல்லாம் விழலுக்கு இறைத்த நீரைப்போல வீணாகத்தான் செய்யும். நன்றாகப்பசி எடுத்த பிறகே உண்ணலாம். வயிறு முட்ட உண்பது கூடாது. பசி அடங்கப்போதுமான அளவுக்கு மேல் ஒரு பிடிகூட உதவாது. உணவை லபக் லபக்கென்று விழுங்காமல் ஒவ்வொரு பிடியையும் மெதுவாய் மென்று தின்னவேண்டும். சாப்பிட்ட உடனே வேலை செய்வதோ தூங்குவதோ கூடாது. அதே போலத் தூங்கி எழுந்திருந்தவுடனும் வேலை செய்தவுடனும் சாப்பிடுவது கூடாது. நன்றாய்ப் பழுக்காத பழங்கள், அரை குறையான வேக்காடு உள்ள உணவுப்பொருள்கள் ஆகியவைகளை உட்கொள்ளக்கூடாது. பகல் வேளையில் தூங்கக் கூடாது. காலம் தவறிச் சாப்பிடுவதும், இரவில் கண் விழிப்பதும், உடலுக்குச் சோர்வைத்தரும் வேலைகளைச்செய்வதும் விலக்கப்படவேண்டும். டீ, காப்பி, சுருட்டு, சிகரெட், பொடி, ஐஸ், ஐஸ்போட்ட பானங்கள் ஆகியவை நீக்கப்படவேண்டும். தண்ணீரையோ, மற்றவகைப் பானங்களையோ ஏராளமகக் குடிக்கக்கூடாது. இவைகளைத் தவிர, ஒவ்வொரு நோயாளிக்கும் எந்தெந்தப்பொருள்கள் நோயை அதிகரிக்கின்றன என்பதைக்கவனித்து அவைகளை விலக்குவது அவசியம்.

காலரா எனப்படும் விஷபேதியில் நோய் படிமானத்துக்கு வந்தவுடன் நோயாளி பசி பசி என்று துடிப்பது சகஜம். அதைக்கண்டு ஏமாந்துபோய் உணவைக் கொடுத்துவிட்டோமானல் அனர்த்தம் வந்துவிடும். அதாவது பிழைத்துவந்திருக்கும் உயிருக்கு விரைவில் ஆபத்து நேரிடலாம். மலம் பித்தம் கலந்து மஞ்சள் நிறத்துடன் வெளியாக வேண்டும். மூத்திரம் வழக்கம்போல் தாராளமாய்ப் பிரியவேண்டும். அப்போதுதான் உணவை நோயாளியின் கண்ணில் காட்டலாம். அதுவும் எப்படி! முதன் முதலில் சிறிதளவு உப்புச் சேர்த்து பார்லி அரிசிக்கஞ்சியைக் கொடுக்கவேண்டும்.



கஞ்சிதானே என்று நினைத்து டம்ளர் கணக்கில் கொடுக்கக் கூடாது. இரண்டு அல்லது மூன்று மணிக் கொருதடவை, ஒவ்வொரு தடவையும் 5, 6, டீஸ்பூன்களுக்கு மேல் போகக் கூடாது. அதனல் வயிற்றில் புளிப்போ அல்லது வாயு உப்பிசமோ வயிற்றுப்போக்கோ ஏற்படாமல் இருந்தால் பிறகு அக் கஞ்சியையே சற்றுக்கூடுதலான அளவிலே கொடுக்கலாம். பிறகு பசும்பாலும் கடைசியாகச் சாதமும் படிப்படியாக அளவை அதிகமாக்கிகொடுக்கலாம்.

மலச்சிக்கல் பெரியதோர் நோய் இல்லையென்று நாம் நினைக்கலாம். ஆனல் மலச்சிக்கலால் அவதிப்படும் நோயாளிகளைக் கேட்டால் அது வேறுவிதமாய் இருக்கும். மலச்சிக்கலை நீக்கப் பேதிமருந்துகளை உபயோகிக்கும் பழக்கம் அநாகரிகமானது, அவசியமற்றது, பயன் இல்லாதது, கெடுதலை உண்டாக்குகிறது என்பதைத் தற்காலம் அலோபதி வைத்திய முறையில்கூட ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஹோமியோபதி மருந்துகள் மலச்சிக்கலின் மூலகாரணத்தைக் களைய உதவுகின்றன. ஆயினும் தகுந்த துணைச் சிகிச்சை, அதாவது பத்தியம் இல்லாவிட்டால் பயன் இல்லை.

மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படாவிட்டாலும் கூட விடியற்காலையில் எழுந்திருந்து மலம்கழிக்க முயற்சிசெய்வது அவசியம். மாமிச உணவைக்கூடியவரை விலக்கவேண்டும். பழங்களை நிறைய உட்கொள்ளவேண்டும். முக்கியமாகச் சதை அதிகமுள்ள பப்பாளி, மா, வாழை ஆகிய பழங்கள் மிக நல்லது. கீரை வகைகளையும், வெண்டைக்காய், வாழைப்பூ, தண்டு போன்ற சக்கை அதிகமுள்ள காய்கறிகளை உட்கொள்ளவேண்டும். திறந்த வெளியில் களைப்பு ஏற்படாத முறையில் தினமும் உடல் பயிற்சி செய்யவேண்டும். தண்ணீரை வேண்டிய அளவு தாராளமாய் குடிக்கலாம்.

மஞ்சட்காமாலை முதலிய கல்லீரல், பித்தப்பைக்கோளாறுகளில் நெய், மாமிசம் முதலிய கொழுப்புப் பொருள்கள் தள்ளப்படவேண்டும். எளிதில் சீரணம் ஆகக்கூடிய உணவுகளை அதிக உப்பு, உறைப்பு, புளிப்புச் சேர்க்காமல் கொடுக்

162360



கலாம். ஏற்ற மருந்துடன் C உயிரூட்டி (Vitamin C) யையும் தாராளமாகக் கொடுத்து வரவேண்டும்.

மூலநோய் உள்ளவர்கள் வெய்யிலில் நிற்கவோ, எரியும் அடுப்பின் அருகில் இருக்கவோ கூடாது. பட்டினிகிடக்கக் கூடாது. , மலமூத்திரங்களை அடக்கிவைத்திருக்கக் கூடாது. குதிரைச்சவாரி, ஸைகிள் சவாரி, நெடுநேரம் குந்திட்டு உட்காருதல் ஆகியவை கூடாது. மாமிசம், உப்பும் உறைப்பும் மிகுதியாயுள்ள பொருள்கள் ஆகியவைகளை நீக்கவேண்டும். வெண்ணெய், கீரை, பப்பாளிப்பழம், வாழைப்பழம், தேங்காய், பூஷணிக்காய், சுரைக்காய், எலுமிச்சம்பழம், ஆரஞ்சுப்பழம், பேரீச்சம்பழம், வெண்டைக்காய் இவைகளைத் தாராளமாய்ச் சேர்த்துக்கொள்ளலாம்.

இருதயத்தைப் பற்றிய நோய்களில் நோயாளி கவலைப் படுவதை நிறுத்தவேண்டும். அதிக உடல் உழைப்புள்ள வேலைகளைச் செய்யக்கூடாது. ஆனால் திறந்த வெளியில் உடல்களைப்பு ஏற்படாத முறையில் தினமும் சிறிதுநேரம் உலாவி வரவேண்டும். அளவுமீறிச் சாப்பிடக்கூடாது.

உடம்பில் நீர்ச் சுரப்பு, மூத்திரக்காய் வேக்காடு, ஆகியவைகளில் உப்பு சிறிதுகூடச் சேர்க்கக்கூடாது. பால், பழச்சாறு, அரிசிக்கஞ்சி, பார்லிக்கஞ்சி ஆகியவைகளைச் சற்றுத்தாராளமாகவும், வெறும் தண்ணீரை தாகத்தைத் தீர்ப்பதற்குமட்டும் வேண்டிய அளவில் கொடுக்கலாம். மாமிசம் கண்டிப்பாய் நீக்கப்படவேண்டும்.

டயபெடிஸ் என்று அழைக்கப்படும், மூத்திரத்தில் சர்க்கரைச்சத்து காணப்படும் நோயில் சர்க்கரை, அரிசி, பழங்கள் ஆகியவைகளையும் கொழுப்புச்சத்து மிகுந்த உணவுப்பொருள்களையும் கூடியவரை விலக்கவேண்டும். எச்சமயத்திலும் விலாப்புடைக்க உண்பது கூடாது.


டாக்டர் V. S. ஸுப்ரமண்யம் இயற்றிய
மூன்று புத்தகங்கள்

மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக்

**மெட்டீரியா மெடிக்கா**

* இணையற்றது * மிகச் சிறந்தது

1144 பக்கங்கள் கொண்ட இப்புத்தகம்
ஹோமியோபதியர்களுக்கு இன்றியமையாதது.

விலை ரூ. 20/–, அனுப்பும் செலவு ரூ. 2/–

★

ஹோமியோபதி வைத்தியத்துக்கு
மிக அவசியமான இரண்டாவது புத்தகம்

**நோய்களும் சிகிச்சையும்**

விலை ரூ. 5-50, அனுப்பும் செலவு ரூ. 1/–

★

ஆங்கில வைத்தியச் சொற்களுக்கு
தமிழறியாது தவிப்பவர்களுக்கு

* ஒன்றே ஒன்று * நன்றே நன்று

**மெடிகல் டிக்ஷனரி**

ஒன்றேதான் தமிழகத்திலேயே உள்ளது.

விலை ரூ. 6-50, அனுப்பும் செலவு ரூ. 1/-

○○

**தி ஹோமியோபதி ஹௌஸ்,**

"பால நிலயம்." கிளை :
77, ராமகிருஷ்ண மடம் ரோட், 9. செம்புதாஸ் தெரு.
சென்னை–28. சென்னை-1.

Reg. No. 6555 June 15, 1961.

# ஹோமிக்ஸ் ரெமிடீஸ்

* தேர்ந்தெடுக்கச் சுலபமாய் இருக்கின்றன.
* சீக்கிரத்திலும் வியாதிகளைக் குணம் செய்கின்றன.

குடும்ப சிகிச்சை செய்வோரும், ஆரம்ப ஹோமியோபதி வைத்தியர்களும், அதிக எண்ணிக்கை வியாதியஸ்தர்கள் உள்ள பிரபல ஹோமியோபதி வைத்தியர்களும் ஹோமிக்ஸ் ரெமிடீசை விரும்புவதின் காரணம் இதுவே.

அடிக்கடி ஏற்படும் 30 வித வியாதிகளுக்கு உபயோகமாகும் வண்ணம் 1 முதல் 30 வரை நம்பர் இட்ட 30 வகை மருந்துகள் இருக்கின்றன.

முப்பது வகை மருந்துகளும் கைவசம் இருந்தால் நூற்றுக்கு 90 வியாதிகளை நீக்கலாம்.

முப்பது மருந்துகளும் செட்டாகப் பெட்டியுடன் ரூ. 18—75. பெட்டியில்லாமல் ரூ. 15—25. அனுப்பும் செலவு தனி.

இம்மருந்துகளின் முழு விவரங்கள் உள்ள புத்தகம் வேண்டுவோர்க்கு இலவசமாய் அனுப்பப்படும்.

oo

## ஸ்ரீ ஹோமியோபதி ஹௌஸ்,

"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதராஸ்-28.

கிளை :
9, செம்புதாஸ் தெரு
மதராஸ்-1.

Edited and Published by Dr. V. S. Subramaniam, 77, Ramakrishna Mutt Road, Madras-28. Printed by V. Kuppuswamy Chetty at Sri Rama & Co., (Bharathamatha Press), 39, Anderson St., Madras-1